الهندوسية في ميزان تعاليمها الأصلية والعقل والفطرة السليمة - تاميلي

# அடிப்படைப் போதனைகள், மற்றும் பகுத்தறிவு, சீரிய இயல்பின் நிழலில் இந்து மதம்

கேள்வி – பதில்

கலாநிதி ஹைய்ஸம் தல்அத்

islamhouse.com

الهندوسية في ميزان تعاليمها الأصلية والعقل والفطرة السليمة – تاميلي

# அடிப்படைப் போதனைகள், மற்றும் பகுத்தறிவு, சீரிய இயல்பின் நிழலில் இந்து மதம்

கேள்வி – பதில்

கலாநிதி ஹைய்ஸம் தல்அத்

islamhouse.com

شركاء التنفيذ:

دار الإسلام جمعية الربوة رواد الترجمة المحتوى الإسلامي

يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.

Telephone: +966114454900
ceo@rabwah.sa
P.O.BOX: 29465
RIYADH: 11557
www.islamhouse.com

உள்ளடக்கம்


*1. இந்து மதம் என்பது என்ன?* 16

*2. இந்தச் சிக்கலுடன் இம்மதம் எப்படித் தோன்றியது?* 17

*3- உண்மையில் இந்து மத நம்பிக்கை என்பது என்ன?* 17

*4. இந்து மதத்தில் ஒரு கடவுளை பல நூறு சிலைகளாக பிரதிபளிக்கச்செய்யும் சிந்தனை எவ்வாறு உருவானது?* 21

*5- படைப்பாளனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையிலான உறவை இந்துக்கள் எவ்வாறு பார்க்கிறார்கள்?* 24

*6- வாழ்வையும் மரணத்தையும் குறித்து இந்துமதம் எவ்வாறு நோக்குகிறது?* 30

*7- இந்துக்களின் மறுபிறப்பு மற்றும் தொடர் பிறப்பு முறை பற்றிய சிந்தனையின் அடிப்படை யாது?* 35

*8- பிரபஞ்சம் குறித்து இந்துக்களின் பார்வை என்ன?* 38

*9- இந்து மதத்தில் மனித உடல் உருவாக்கம் எதனால் வடிவமைக்கப்படுகிறது?* 38

*10- இந்து சமூகத்தின் வடிவம் (அமைப்பு)யாது?* 43

*11- உண்மையில் இந்துக்கள் மாடுகளை (பசுக்களை) புனிதமானதாக கருதுகிறார்களா?* 48

*12- என்றாலும் இந்து மதத்தில், சுயகௌரவத்துடன் வாழ்தல் மற்றும் பாவத்தில் இருந்து விலகி இருக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்ற நிறைய விடயங்கள் காணப்படுகின்றன. இது ஒரு தனித்துவமான அம்சம் அல்லவா?* 50

*13-இந்து மதத்தில் காணப்படுகின்ற உடல் அசைவின்றி மௌனமாக இருப்பது, தியான அமர்வுகள் யாவும் நல்ல விடயங்களல்லாவா?* 51

*14- தற்கால இந்து சமயத்தில் காணப்படுவது போல் இடிபாடுகளில் (சிதைந்த தனியான இடம்) தங்கியிருப்பதில் என்ன (குறை) இழிவு இருக்கிறது?!* 54

15- பாவங்களிலிருந்து விடுதலை பெறவும், காமத்திற்கெதிராக போராடவும் மிகவும் சிறந்த பொருத்தமான வழி என்ன? 57

16- இஸ்லாம் இந்துமதத்தை நிராகரிப்பது (ஏற்றுக் கொள்ளாதது) ஏன்? 59

17- ஒவ்வொரு இந்துவும் ஏன் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்க வேண்டும் ? 63

18- இஸ்லாம் என்றால் என்ன? 77

19- நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் ஏன் இந்த உலகில் இருக்கிறோம்? நாம் இறுதியாக எங்கு செல்லவுள்ளோம் எனும் பதிலளிப்பதற்கு முடியாது பகுத்தறிவைக் தடுமாற்றத்தில் ஆழ்த்தும் கேள்விகளுக்கு இஸ்லாத்தில் பதில் உள்ளதா? 79

20- முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்பதை அறிந்து கொள்வது எப்படி? 79

21- சில இந்துக்கள் செய்வது போல் தீர்க்கதரிசிகளை ஏற்காது அல்லாஹ்வை (இறைவனை) ஏற்று விசுவாசிப்பது மாத்திரம் போதுமா? 80

22- அல்லாஹ் ஏன் தீமையைப் படைத்தான்? அல்லது இன்னொரு வகையில் கூறின் ஒரு முஸ்லிம் தீமையெனும் சிக்கலுக்கு எவ்வாறு பதில் கூறப்போகிறார் ? 96

23- அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலின் வெளிப்பாடுகள் எவை? இன்னொரு வகையில் கூறினால் நீ அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்ட முஸ்லிம் என்பதை அறிந்து கொள்வது எப்படி? 99

இறுதியாக! நான் இஸ்லாத்தில் நுழைவது எப்படி ? 103

**அல்லாஹ்வின் பெயர் கூறி ஆரம்பிக்கிறேன்.**

**எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. ஸலாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் மீதும், அவர்களின் குடும்பத்தார் தோழர்கள் மீதும் அவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றியோர் மீதும் உண்டாவதாக!**

*இந்து மதம் ஒரு மதமாக இருக்கலாம், ஆனால் அதனை துல்லியமாக வரையறைவிலக்கணப்படுத்தும் போது அதை ஒரு வாழ்க்கை முறை என்றே குறிப்பிட முடியும்.*

*இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் உலக மக்கள் தொகையில் சுமார் பதினைந்து (15%) வீதத்தினராக உள்ளனர். எனவே அதனைப் பின்பற்றுபவர்கள் 1.2 பில்லியனைவிட மிக அதிகமாகும்.*

*இந்து மதம் காலவோட்டத்தில் நிறையவே மாறிவிட்டது.*

*இதனால் வேதாகம காலத்திற்குப் பிறகு இந்து மதம் பகுத்தறிவு, அறிவியல் மற்றும் உள்ளார்ந்த சிக்கல்களால் நிரம்பியிருக்கிறது, அவற்றில் சிலவற்றை இந்த புத்தகத்தில் அவதானிப்போம்.*

*ஆம்!*

*இந்து மதம், அடிப்படை வேதங்களின் (இந்து மதத்தின் அடிப்படை மூலாதாரங்கள்) போதனைகளிலிருந்து மிகவுமே தூர விலகி, மக்களினதும், துறவிகளினதும் மற்றும் பகவத் கீதையினதும் போதனைகளைப் பின்பற்றும் ஒரு மதமாக மாறிவிட்டது.*

பகவத்கீதை (Bhagavad Gita) தந்திரங்கள்

*நான் இந்தப் புத்தகத்த்தில் - தற்போதைய இந்து மதத்தை, வேதங்களின் மூலப் போதனைகள், பகுத்தறிவு, நவீன விஞ்ஞானம், தர்க்கம், ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்த முயல்கிறேன். மேலும் வேதங்களில் காணப்படும் உண்மையின் மிகுதிகளும், (எச்சங்களும்) ஒரு இந்துவின் உள்ளுணர்வில் காணப்படும் நேரிய சிந்தனையும் ஒரு இந்துவை உண்மையான மதத்திற்கு (சத்திய மார்க்கத்திற்கு) அழைத்துச்*

செல்ல போதுமானவை என நான் உறுதியாக நம்புகிறேன்.

பொதுவாக வேதங்கள்தான் இந்து மத நூல்களில் மிகப் புனித மானவை.

'பித்ரா' என்ற இயற்கை உள்ளுணர்வுதான் மனித இருப்பின் நோக்கம் மற்றும் அவன் இறுதியாகச் சென்றடையும் இடம் குறித்து அவதானிக்கத் தூண்டும் ஒரு உந்து சக்தியாக உள்ளது. மேலும் இந்த உந்து சக்தியை - இயற்கை உள்ளுணர்வை அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதற்கும், அவனுடைய மார்க்கச் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கும் வழிப்படுத்துவதே இதற்கான சரியான திசைகாட்டியாகும்.

மேலும் உண்மையான மதம் என்பது: வேதங்களில் காணப்படு கின்ற சத்தியத்தின் மிகுதிகளை (எச்சங்களை) உள்ளடக்கியதா கும். அது உள்ளுணர்வின் ஒலியும், அனைத்துலக இரட்சகனான அல்லாஹ்வின் இறைவெளிப்பாடுமாகும். இதுதான் உபநிடதங் களின் போதனைகளில் காணப்படும் அல்லாஹ்வை ஏகத்துவப் படுத்தும் ஓரிறை கொள்கையின் அடையாளங்கள் குறித்துப் பேசும் தூதுச் செய்தியாகும்.

இச்சிறு புத்தகத்தில் வேதகால இந்து மதத்தையும் இன்றைய இந்து மதத்தையும் எளிமையாக ஒப்பிட்டுப் பார்க்க முயல்கி றேன்!

இந்து மதம் அதிகமாகவே மாறிவிட்டது.

வேதங்களில் உள்ள தூய, தெளிவான ஏகத்துவ (ஓரிறைப்) போத னைகளிள் எஞ்சியுள்ளவற்றை விட்டும் நீர் வெகுதூரம் சென்று விட்டீர். இன்றைய இந்து மதத்தில், அத்வைதத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர். அதாவது சிருஷ்டியும் கர்த்தாவும் சங்கமமாகி சிருஷ்டி உண்மை கர்த்தாவாக மாறும் அத்வைத நம்பிக்கையை நீர் ஏற்றுக் கொண்டுள்ளீர். இந்த புதுமை நிறைந்த நம்பிக்கை யானது தெளிவான வேதங்களின் போதனைகளுக்கு முரண் படுவது மாத்திரமன்றி தெளிவான பகுத்தறிவிற்கும் முரண்படுகி

றதல்லவா? ஆகவே கடவுள் எவ்வாறு எல்லாவற்றிலும் சங்கம மாகி இருக்க முடியும்? அடிப்படையில் உங்களுக்குள்ளேயே சங்கமமாகி இருக்கும் கடவுளை இந்துவான நீங்கள் சில சடங்கு கள் மற்றும் நடைமுறைகளின் ஊடாக வெளியுலகில் அடைய முயற்சிக்கின்றீர்களே?

இது ஒரு தெளிவான பகுத்தறிவுரீதியான பிரச்சினை (சிக்கல்) அல்லவா?

அத்வைதத்தை நம்புதல் (சிருஷ்டிகளுள் கர்த்தா (படைப்பாளன்) உள்ளான்) என்பதானது யதார்த்தபூர்வ சார்பியல் தன்மையைக் கூறுகிறது. சிலைகளை அல்லது கற்களை வணங்கும் அனைத்து மதங்களும் கடவுளை வழிபடுவதால், இந்த நம்பிக்கையின்படி கடவுள் என்பது சிலை மற்றும் கல் என்ற அடிப்படையில் அமை யும். எனவே கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவரே அனைத்துமாக உள்ளார் என்பதே இதன் கருத்தாகும்.

யதார்த்தபூர்வ சார்பியமானது கடவுள் குறித்த கருத்தையும் அதன் மதிப்பையும் தகர்த்துவிடும் என்ற விடயத்தை இந்த நூலில் தெளிவுடுத்தவுள்ளேன்.

முன்னர் குறிப்பிட்ட விடயங்களுடன் சேர்த்து இன்னொரு விட யத்தையும் குறிப்பிடுகிறேன். அதாவது வேதங்கள் யாவும் படைப்பிலிருந்து வேறுபட்ட ஒரு தனித்துவமான கடவுளை நம்புவதற்கே வெளிப்படையாக அழைப்பு விடுக்கின்றன. ஏனெ னில் இந்த படைப்பினங்கள் யாவும் கடவுளின் (அல்லாஹ்வின்) படைப்புகளே ஆகும். கடவுள் (அல்லாஹ்) தனது படைப்பி னங்களில் வசிக்கும் அளவு அவை விசாலமானவை அல்ல.

குறிப்பாக ரிக் வேதம் இவ்வாறு கூறுகிறது : ‘கடவுளே! (யா அல்லாஹ்!) சூரியனும் உலகமும் சேர்ந்து உன்னைச் சூழ்ந்து உன்னைத் ஆட்கொள்ள முடியாது.’(1)

எனவே மேற்குறிப்பிட்ட வேத வசனமானது அத்வைத (சிருஷ் டிக்குள் கர்த்தா சங்கமமாதல்) நம்பிக்கை தவறானது என்பதற்கு

தெளிவான சான்றாகும். ஆகவே கடவுள் என்பவர் தனது சிருஷ்டிகளிருந்து வேறுபட்டவராவார் (சுயாதீனமானவர்) (அல்லாஹ் சிருஷ்டிகளைவிட்டும் வேறுபட்டவன்) என்பதே இதன் உண்மை விளக்கமாகும்.

தற்போதைய இந்து மதத்தில், மறுபிறவிக் (புனர்ஜன்மம்) கொள்கை இருப்பதை அறிவீர்கள். அதாவது மனிதர்களின் ஆன்மாக்கள் மரணத்திற்குப் பிறகு ஏனைய உயிரினங்களுக்குள் மீண்டும் புதுப் பிறவியாக பிறப்பதற்கு நகர்ந்து சென்றுவிடுகின்றன. எனவே இதனடிப்படையில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கு முன்னர் இன்னொரு பிறவியில் வாழ்வொன்று இருந்திருக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். இந்த நம்பிக்கையானது அதிகமான சிக்கல்களை, பிரச்சினைகளை தோற்றுவிக்கிறது, அதாவது மறுபிறவிக் கொள்கை சரியானதாக இருப்பின் ஏன் குழந்தைகள் வளர்ந்தவர்களைப் போன்ற மன உணர்வுத் திறன்களுடன் பிறப்பதில்லை?[(2)].

மேலும், (ஆன்மாக்களின் இடமாற்றம் பற்றிய) மறுபிறவிக் கோட்பாடனது தொடராக மீண்டும் மீண்டும் பிறப்பதை அடிப்படையாகக் கொண்டது. சமகால அறிவியலானது வாழ்க்கைக்கு ஒரு ஆரம்பம் உள்ளது என்பதையும், அதே போல பூமிக்கு ஒரு ஆரம்பம் உள்ளது என்றும் கூறுகிறது. இந்த விஞ்ஞானக் கருத்து வாழ்வும், பிரபஞ்சமும் நித்தியமானது அல்ல என்பதை நிரூபித்திருக்க, மறுபிறவிக் கோட்பாடு எப்படி சாத்தியமாகும்!?

மேலும் (ஆன்மாக்களின் இடமாற்றம் பற்றிய) மறுபிறவிக் கோட்பாடானது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் வாழும் உயிரினங்களின் எண்ணிக்கை நிலையானதாக (மாறாது) இருக்க வேண்டும். ஏனென்றால் அந்த உயிரினங்களே வேறு சில உயிரினங்களில் இடமாற்றம் பெறுகின்றன. இந்த கருத்தை தற்பொழுது வாழும் எந்த மனிதரும் கூறுவதில்லையே!

இதை விடவும் மிக முக்கிய அமசங்களில் ஒன்றுதான் வேதங்கள் (ஆன்மாக்களின் இடமாற்றம் பற்றிய) மறுபிறவிக் கோட்பாட்டை குறிப்பிடவில்லை. இதனை உறுதிப்படுத்தி இந்து அறிஞரான ஸ்ரீ ஸ்த்யாகம் வித்யாலங்கர் கூறிப்பிடுகையில் “மறுபிறவி கோட்பாடு வேதங்களில் இல்லை, அதைச் சொல்பவர்களுக்கு எதிராக நான் சவால் விடுகிறேன்’.(3) என்றார்.

வித்யாலங்கரின் கூற்று சரியானது என்பதற்கு இன்னொரு சிறந்த ஆதாரம் என்னவென்றால், இந்துக்கள் ‘சிராத்தம்’ என்று அழைக்கப்படும் ஒரு பழங்கால மத சடங்கை செய்கிறார்கள், இந்த சடங்கின் நோக்கம்: யாதெனில் இறந்தவர்களின் ஆன்மாவை அமைதிப்படுத்துவதாகும். அல்லது அவை ஈடேற்றம் பெற வேண்டி செய்யும் ஒரு கிரியையாகும்.

இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் கிடைக்க மத சடங்கு செய்யும் நிலையில், எப்படி ஆன்மாக்கள் இன்னொரு புதுப்பிறவியாக பிறந்து இடமாற்றம் பெறமுடியும்?

தற்போதைய இந்து மத நம்பிக்கைகளுள் ‘ கர்மா’ நம்பிக்கையும் ஒன்றாகும் (அதாவது இதன் பொருள் செயல்களின் விளைவு, அல்லது வினைப்பயன் என்பதாகும்). அதாவது கர்மாவின் படி மனிதர்கள் தங்கள் முந்தைய செயல்களின் விளைவாக பிறக்கிறார்கள், எனவே யார் தீயவராக இருந்தாரோ அவர் மற்றொரு புதிய வாழ்க்கையில் தாழ்ந்த படிநிலையில் அல்லது பெரிய துன்ப படிநிலையில் பிறப்பார்.

இதன்படி, இந்துக்கள், சோதனைக்குற்பட்டு பாதிக்கப்பட்ட நபரை அவர் முந்தைய ஜென்மத்தில் செய்த பாவங்களின் விளைவால் அவருக்கு அந்நிலை ஏற்பட்டதாகக் கருதுகின்றனர். மேலும் இந்த தவறான கருத்தானது அவனது முழு வாழ்வையும் நாசமாக்கி அந்த மனிதனால் மனிதகுலத்திற்கு எந்த பங்களிப்பையும் வழங்காதிருக்க அவனை செய்து விடுகிறது. மாறாக மக்களுக்கு ஏற்படும் சோதனைகள் யாவும் முந்தைய வாழ்வில் செய்த குற்றங்களுக்கான இயற்கை தண்டனை என்று தீர்மானிப்

பதானது, பிற்போக்கு, அநீதி, மற்றும் வர்க்கபேதம் போன்ற விடயங்களுடன் சமரசம் காணும் நிலையாகும்.

எனினும் மிகப்பெரும் முரண்பாடு என்னவெனில் இந்த கர்மா நம்பிக்கையானது வேதத்தில் எங்கு காணப்படுகிறது? என்பதாகும்.

மற்ற உயிர்களில் புதுப் பிறவிகளாய் பிறப்பதனால் அல்லாது, மனிதர்களின் செய்வினைக்கேற்பவே கடவுள் மனிதர்களுக்கு சுவர்க்கத்தையும் நரகத்தினையும் அளிக்கிறார் என்றுதான் வேதங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

'ஆன்மாக்கள் விரும்புவதெல்லாம் கிடைக்கப்பெருகின்ற எல்லா விதமான இன்பங்களும், மகிழ்ச்சியும் குவிந்திருக்கும், (நிரம்பிக் கிடக்கும்) அந்த இடத்தில் என்னை நிரந்தரமானவனாய் ஆக்குவாயாக' என ரிக் வேதம் கூறுகிறது.

மீண்டும் மீண்டும் பிறப்பது மற்றும் மறுபிறவித் தத்துவம் போன்றவற்றிலிருந்து விடுதலைப்பெற்று 'மோட்சம்' என்று அழைக்கப்படும் ஒரு நிலையை அடைவதற்கு முயற்சிப்பது தற்போதைய இந்து மதத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றாகும். 'மோட்சம்' என்பது இறுதி நிலையாகும். இதில் மனிதன் தெய்வீக சுயத்துடன் (மெய்ப்பொருளுடன்) ஐக்கியப்படுகிறான், ஆனால் இந்த சிந்தனையானது (கருத்தானது) இவ்வுலகில் மனிதனின் இருப்புக் குறித்து முற்றிலும் ஒரு அவநம்பிக்கை பார்வையை ஏற்படுத்துகிறது. அதனால் இவ்வுலகில் வாழ்வதன் குறிக்கோள் அனைத்திலிருந்தும் விடுபடுவதற்கான முயற்சியாக மாறிவிடுகிறது.

ஒரு மனிதன் எத்தகைய பாவச்செயலைச் செய்தாலும், அவன் மீண்டும் எப்போ ஒரு நாள் வரவிருக்கும் பிறவியில் பிறந்து முக்தி பெறுவான் என்ற நிலையிருப்பின் அவன் இவ்வுலகில் அச்சமற்று வாழ முயற்சிப்பான். இந்த வகையில் இக்கருத்தானது சமூகத்திற்கு மிக ஆபத்தானது!

மேலும் இந்தக் கருத்து வேதங்களின் போதனைகளுக்கு முற்றிலும் முரணானது. தவறு செய்பவர்கள் மற்றும் பாவிகள் அவர்களுக்குரிய இடத்தில் தண்டிக்கப்பட வேண்டும் என்று ரிக் வேதம் குறிப்பிடுகிறது. தண்டிக்கப்படும் இடம் குறித்து குறிப்பிடுகையில' அது ஒரு மிக ஆழமான இடம், அதன் ஆழமான அடிப்பகுதி பாவிகளுக்காகும்.'(5)

இந்து மதம், ஒரு மனிதன் அவனுடைய கர்ம வினைக்கேற்ப பல தடவைகள் உயிர்பெறுவான் என்ற சிந்தனைக்கும், குற்றவாளிகள், மற்றும் பாவிகள் யாவரும் அவர்களின் மரணத்தின் பின் குறிப்பிட்ட இடத்தில் தண்டனை பெறுவார்கள் என்ற வேத போதனைக்கும் எவ்வளவு பெரிய வேறுபாடுகள் உள்ளன! என்பதை புரிந்து கொள்ள வேண்டாமா?

இந்து மதத்தின் மிகவும் பிரபலமான அறிவியல் ரீதியான சிக்கல்களைப் பொறுத்தவரை, பிரபஞ்ச தோற்றத்தின் தன்மை (இயல்பு) பற்றியதான அதன் பார்வையாகும். அதாவது தற்போதைய இந்து மதமானது பிரபஞ்சம் துகல்களாக பிரிந்து பின்னர் உருவாகி தொடர்ந்தும் முடிவின்றி செயல்படும் என்ற இந்து மதத்தின் கருத்து விஞ்ஞான ரீதியான சிக்கல்களை உண்டாக்குகிறது. இந்து மதத்தின் இச்செயன்முறையானது நவீன விஞ்ஞானத்திற்கு முரணான ஒரு விசித்திரமான அறிவியல் தவறாகும்.

இந்தப் பிரபஞ்சம் ஒரு முழுமையான தொடக்கத்தைக் கொண்டிருந்தது என்றும் அதற்கு முன் வேறு எந்தப் பிரபஞ்சங்களும் இருக்கவில்லை என்றும் நவீன விஞ்ஞானம் உறுதிப்படுத்தியிருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

விஞ்ஞானரீதியாய் கூட இப்பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பதையே பறைசாட்டுகின்றது. எவ்வித முன்னுதாரணமுமின்றி புதுமையான அமைப்பில் அது படைக்கப்பட்டுள்ளது.

வேதங்களிலும் இதே கோட்பாடுதான் காணப்படுகிறது. அதில்

*உலக வாழ்வானது திடீரென்று தோன்றியது என்றும் மரணத்தின் பின் மறுமை வாழ்வும் உண்டு எனவும் கூறுகிறது பிற்காலத்தில் தோன்றிய இந்துமதப் புராணங்கள் (Puranas) பிரபஞ்சம் (உலகம்) மீண்டும் மீண்டும் தோன்றக்கூடியது என்றும் அதற்கென்று ஆரம்பம் கிடையாது என்றும் அது நித்தியமானது என்ற கருத்தையும் தெளிவாகக் கூறிப்பிடுகின்றது.*

*இவ்வாறு நோக்குகையில் இன்றைய இந்து மதம் வேதக் கோட்பாட்டிற்கும், நவீன அறிவியலுக்கும், வேதங்கள் கூறும் சத்திய போதனைகளை சுமந்து வந்திருக்கும் இஸ்லாத்திற்கும் முரணாக உள்ளது.*

*அல் குர்ஆனில் அல்லாஹ் வஹி அறிவித்ததன் அடிப்படையில் இப்பிரபஞ்சம் எவ்வித முன்மாதிரியுமின்றி தோன்றியதாகும் என்பதே முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இது குறித்து அல்லாஹ் அவனின் வேதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.* **“[அல்லாஹ்வே] வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றி படைத்தான். அவன் ஒரு விடயத்தை தீர்மானித்து விட்டால் அதற்கு ‘குன்’[ஆகுக!] என்று கூறுவது தான். உடனே அது ஆகிவிடும்”.** *(ஸூறதுல் பகரா 117).*

*எனவே இஸ்லாமிய கருத்தில் பிரபஞ்மானது முன்மாதிரியின்றி உண்டாக்கப்பட்டது என்பதாகும். அதாவது அது எவ்வித முன் மாதிரியுமன்றி படைக்கப்பட்டது என்பதாகும்.*

*இதனைத்தான் அறிவியலும் முடிவாகச் சொன்னது. இதே கருத்தைத்தான் 1400 வருடங்களுக்கு முன்பு அல்லாஹ்வின் தூதரும் இஸ்லாத்தின் தீர்க்கதரிசியுமான முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் என்றழைக்கப்படும் ஆடு மேய்த்த சாதாரன ஒரு மனிதரும் தெரிவித்தார்.*

*இந்த புத்தகத்தில், நான் இந்து மதம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளைப் பற்றி கருத்துரைக்க விரும்புகிறேன், அத்துடன் அதன் மறுபக்கத்தில் உலகம், வாழ்வு, வெகுமதி மற்றும்*

தண்டனை மற்றும் இருத்தலின் நோக்கம் குறித்த இஸ்லாமிய பார்வையை முன்வைக்கிறேன். இவை வேதங்களின் எஞ்சியிருக்கும் உண்மை விடயங்களுடனும் மற்றும் உள்ளுணர்வுடனும் முழுமையாக ஒத்துப்போகும்.

நாம் எப்படி வாழ வேண்டும் என்ற மனிதனின் தேவைக்கு பதிலளிப்பதிலும், மனித இருப்பின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் உள்ளுணர்வு, பகுத்தறிவு மற்றும் அறிவியலுக்கு இசைவான முறையில் பகுப்பாய்வு செய்வதில் இஸ்லாம் எவ்வாறு மிகவும் துல்லியமான, நம்பகமான மற்றும் புத்திசாலித்தனமான முன் மாதிரி என்பதை நான் விளக்குகிறேன்.

இந்தப் புத்தகம் இஸ்லாம் உண்மை மார்க்கம் என்பதற்கான சில சான்றுகளையும், இஸ்லாத்தைத் குறித்து வேதங்களில் காணப்படுகின்ற செய்திகளையும் முன்வைக்கிறது. வேதங்கள் இஸ்லாத்தைப் பற்றியும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றியும் முன்னறிவிப்புகளைக் கூறி, நபியவர்களை விசுவாசம் கொள்ளுமாறு இந்துக்களை அழைப்பு விடுக்கிறது.

இஸ்லாம் என்பது வெறுமனே இப்பூமியில் இருக்கின்ற ஏனைய மதங்களைப் போன்ற ஒரு மதம் அல்ல, மாறாக இதுவே ஒரே ஒரு ஏகத்துவ மார்க்கமாகும். இந்த மார்க்கத்தை ஒப்படைத்தே எல்லா தீர்க்கதரிசிகளையும் (நபிமார்களையும்) இறைவன் (அல்லாஹ்) அனுப்பினான். அனைத்து தீர்க்கதரிசிகளும் ஏகத்துவத்திற்கான அழைப்புடன் வந்தனர். தற்போது இந்த தூய ஏகத்துவத்தில் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கமும் கிடையாது. அதே வேளை மற்ற மதங்களில் இணைவைப்பு, பல தெய்வ வழிபாடு போன்று விடயங்கள் சிறியளவிளோ அல்லது பெரியளவிலோ சேர்ந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

அல்லாஹ் மனிதர்களிடம் இஸ்லாம் தவிர்ந்த வேறு மாரக்கத்தை ஏற்றுக் கொள்ளமாட்டான். இதனை அல்லாஹ் தனது வேதத்தில் **“யார் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக ஏற்க விரும்புகிறானோ அது அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது. அவன்**

**மறுமையில் நஷ்டவாளர்களில் உள்ளவனாவான்?" என்று குறிப்பி டுகிறான்.** *(ஸூறா ஆலஇம்ரான் வசனம் : 85).*

*எனவே இஸ்லாம் மார்க்கமே அனைத்து நபிமார்கள் மற்றும், இறைதூதர்கள் மூலம் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட உண்மை மார்க்கமாகும்.*

*இஸ்லாத்தின் அடிப்படை சிறப்பம்சம் என்னவென்றால்: இது அல்லாஹ்விற்கு முழுமையாக கட்டுப்பட்டு அவனை மட்டுமே வணங்குதவதும். தற்போதைய இந்து மதத்தில் காணப்படுவது போல் இறைவனுக்கு எந்த வகையிலேனும் சிலை மற்றும் விக் கிரகங்கள் வடித்து உருவம் கற்பித்தலை மறுப்பதும் ஆகும்.*

*இறுதியாக, இந்த புத்தகம் ஒரு மனிதன் எவ்வாறு இறைவனுக்கு கட்டுப்பட்ட முஸ்லிமாக மாறுவது பற்றிய விளக்கத்தை தருவ துடன், இஸ்லாத்தின் பொருள் மற்றும் இஸ்லாத்தின் அவசியம் குறித்த தெளிவுபடுத்தல்களுடன் நிறைவடைகிறது.*

*எனவே அல்லாஹ்வின் அருளினால் இப்புத்தகத்தின் பய ணத்தை ஆரம்பிப்போம்.*

## 1. இந்து மதம் என்பது என்ன?

இது ஒரு மதமாகும். அதனை மிகச்சரியாக குறிப்பிடுவதாயின் 'அது ஒரு வாழ்கை முறை எனலாம்' அத்துடன் இம்மதம் பல சடங்குகள், சம்பிரதாயங்கள் வழிபாடுகள், புனித வேதங்கள் மற்றும் பிரபஞ்ச மற்றும் இருத்தலியல் (existentialism) கோட்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.[6]

இந்து மதம் சிக்கல் நிறைந்த கோட்பாடுகளைக் கொண்ட அமைப்புகளால் பல நூற்றாண்டுகளாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இம்மதம் பல்வேறு வகையிலான மற்றும் சில சமயங்களில் முரண்பாடான நம்பிக்கை முறையை அனுமதிப்பதுடன் தற்போதைய இந்து மதமானது இதற்கு எந்த ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. மேலும் இன்றைய இந்து மதத்தில் ஒரே சமய நம்பிக்கையோ, அல்லது ஒரே அதிகார மிக்க சமய மன்றமோ, தீர்ப்புக் கோரி செல்லத்தக்க கட்டாய சட்ட மூலங்களையோ காணமுடிவதில்லை.

பொதுவாக வேதங்கள் இந்துக்களின் அதிபுனித நூல்களாக இருந்தும், நாம் இந்த புத்தகத்தில் எடுத்துக் காண்பித்துள்ளது போன்று, அவர்கள் அந்த வேதப் போதனைகளை விட்டும் முற்றிலும் வியப்பூட்டும் வகையில் முரண்பட்டுள்ளனர். இவ்வாறு (வேதங்களுக்கு) முரண்பட்டதன் விளைவாக, இந்து மதமானது பல்வகை கோட்பாடுகளையும், ஆரம்ப வேதகாலத்துடன் எவ்விதத்திலும் தொடர்பில்லாத அசாத்தியமான சிந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள வழிவகுத்திருக்கிறது.

சுருங்கக் கூறின் இந்து மதமானது துயரத்திலிருந்து விடுதலை பெருதலையே நோக்காகக் கொண்டுள்ளது. அவர்களிகன் புரிதலின் படி துயரத்திலிருந்து விடுதலை பெறுவதன் முறை குறித்து பின்னர் தெளிவுபடுத்த உள்ளேன். மேலும் இவர்கள் இந்த விடயத்தில் சத்திய மார்க்கம் குறித்து அதிகமான விடயங்கள் காணப்படுகின்ற வேதக் கோட்பாட்டிற்கு எவ்வகையில் முரண்பட்டுள்ளனர் என்பதையும் குறிப்பிடவுள்ளேன்.[7]

## 2. இந்தச் சிக்கலுடன் இம்மதம் எப்படித் தோன்றியது?

*இந்து மதம் என்றால் இந்தியா என்ற நாடாகும், காலநிலை, வரலாறு, பிணைப்பு மற்றும் மரபுகள் பலதைக் கொண்ட ஒரு நாடே இந்தியாவாகும்.*

*இம்மதம் இந்தியாவுக்கென்று உரித்தான ஒரு மதம் என்று குறிப்பிடும் அளவிற்கு உலக இந்துக்களின் தொகையில் சுமார் 95 விகிதத்தினர் இந்தியாவிலே காணப்படுகின்றனர்.[8]*

*இந்து மதம் ஆரம்ப கால வேதங்களின் பாரம்பரியத்தில் எழுந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது பல நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட தத்துவங்கள், நம்பிக்கைகள், வேதங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் கலந்தது மட்டுமன்றி வேதத்திற்குப் பிந்தைய காலத்தில், இந்து மதம் துறவிகளின் போதனைகள், தந்திர மந்திரங்கள் மற்றும் பகவத்கீதை ஆகியவற்றைப் பின்பற்றியது.*

*கி.மு 1500 முதல் கி.பி 500 வரையிலான காலப்பகுதியில் உருவான கோட்பாடுகளும், தத்துவங்களும் வேதங்களை எதிர்த்து செயல்பட்டு வேதங்களின் போதனைகளை மறைத்துவிட்டன. ஆகையினால் இன்று இந்த கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களைத் தவிர வேறு எதையும் இப்புவியின் மேற்பரப்பில் எம்மால் காண முடியாதுள்ளது.*

## 3. உண்மையில் இந்து மத நம்பிக்கை என்பது என்ன?

*இன்றைய இந்து மதம் பெருந்தொகை கடவுள்களை விசுவாசிக்கும் ஒரு மதமாக அமைந்துள்ளது. அத்துடன் இம்மதத்தில் கடவுள்களின் எண்ணிக்கை வரையறையற்றது. இருப்பினும் இந்துக்கள் ஒரு கடவுள் கொள்கையையும் நம்புகிறார்கள்.*

*தாங்கள் புனிதமாகக் கருதும் சிலைகளிலும் சிற்பங்களிலும் கடவுள் குடிகொண்டிருப்பதாக அவர்கள் கற்பனை செய்கிறார்கள்.*

*இந்துக்கள் ஒரே கடவுளை ஏற்றுகொண்டு, சிலைகளையும்*

சிற்பங்களையும் கடவுளின் வடிவங்களாக கருதுவது சிலை வணக்கமல்ல என சிலர் கற்பனை செய்லாம்.

ஆனால் இவ்வாறு கற்பனை செய்வது மிகப்பெரும் தவறாகும் !

செதுக்கப்பட்ட சிலைகள் ஒரே கடவுளுக்கான பல வடிவங்கள் என்ற நம்பிக்கைதான் மனித குல வரலாறு முழுவதிலும் வந்த தீர்க்கதரிசிகளினதும், வேதங்களினதும் போதனைகளுக்கு முற்றிலும் முரணான உருவ வழிபாட்டின் அடிப்படையாகும்.

தீர்க்கதரிசிகளுக்கும் வேதங்களின் போதனைகளுக்கும் முரணாக இருக்கும் அனைத்து பல கடவுள் கொள்கையுடையோரும் அல்லாஹ்வை நம்புகின்றனர். ஆனால் அவர்கள் சிலைகளை கடவுளின் பிரதிபிம்பமாக கருதுகின்றனர். ஆகவே கடவுள் இருப்பதையும் அவர் ஒருவரே எனவும் பல கடவுள் கொள்கையுடையோர் நம்புவதானது இறைவனையும் அவனின் தூதர்களையும் வேதங்களையும் மறுப்பதை இல்லாமல் செய்துவிடாது. அவர்கள் இந்த சிலைகளை வழிபாட்டுக்காக எடுத்துக் கொள்ளும் காலமெல்லாம் அவர்களின் நம்பிக்கை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

வேதங்கள் சிலைகளை வணக்கத்திற்காக எடுத்துக் கொள்வதையும், அதனை நெருங்குவதையும் மற்றும் புனிதப்படுத்துவதையும் தடைசெய்வதில் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளன.

வேதங்கள் கூறுகின்றன: ‘கடவுள் அல்லாத பிறவற்றை வணங்குபவன், இருளில் மூழ்கி, நெருப்பின் வேதனையை என்றென்றும் அனுபவிப்பான்.’(9)

சிலைகளால் நிரம்பி வழியும் இன்றைய இந்து மதத்தில் அவற்றை (அச்சிலைகளை) வணக்கத்திற்கு யார் எடுத்துக் கொள்கிறாரோ, வேதங்களின்படி, அவர் நரக நெருப்பில் நிரந்தரமாக இருப்பார்.

‘எல்லாவற்றினதும் உரிமையாளன், மறைவானவற்றை அறிந்தவன், பிற தெய்வங்களின் உதவி தேவையில்லாதவன், அவனே மனிதனால் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன், ஒரே கடவு

ளான அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்களை ஏற்றுக் கொள்பவர்கள். துரதிஷ்டமானவர்கள், எப்போதும் அவர்கள் மிகப் பயங்கரமான சோதனைகளை அனுபவிப்பர்'. என வேதங் கள் கூறுகின்றன.(10)

கடவுள்களை வணங்குபவர்கள் தெய்வங்களைப் அடைந்து கொள்கிறார்கள், முன்னோர்களை வழிபடுபவர்கள் முன்னோர் களை அடைந்துகொள்வார்கள். ஷைத்தானை வழிபடுபவர்கள் ஷைத்தானைப் அடைந்து கொள்கிறார்கள். என்னை வணங்குப வர்கள் என்னைக் கண்டுகொள்கிறார்கள்.'(11) என பகவத் கீதை (Bhagavad Gītā) கூறிப்பிடுகிறது.

இந்த வேதவசனங்களும் இவையல்லாத அதிகமான இந்துக்க ளின் புனித நூல்களில் காணப்படும் சான்றுகளும் இந்துக்கள் ஒரு கடவுள் கொள்கையை ஏற்று சிலை வணக்கத்தை கைவிட வேண்டும் என்று வெளிப்படையாகவே அழைப்பு விடுக்கின் றன. இவ்விவகாரம் குறித்து மகரிஷி தயானந்த் சரஸ்வதி அவர் கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் 'கல் மற்றும் பிற பொருட் களால் செய்யப்பட்ட சிலைகளை வணங்குவதைக் குறிக்கும் எவ்விதச் சிறு சான்றுகளும் வேதங்களில் கிடையாது.

இந்துக்கள் வேதங்கள் கூறும் ஏகதெய்வக்கொள்கையை பிற் பட்ட காலத்தில் உருவான பிழையான போதனைகளினால் கை விட்டுள்ளனர்.

அல்லாஹ் தனது நபி முஹம்மது அவர்களுக்கு இறக்கியருளிய திருமறை அல்குர்ஆன் சிலைகளை வணங்குபவர்கள் ஒரே கட வுளான அல்லாஹ்வை நம்புவதாக வாதிட்டாலும், இந்த சிலை களை வணக்கத்திற்காக எடுத்துக் கொண்டதினால் அவர்களும் அல்லாஹ்வை நிராகரித்தவர்களே என்பதை உறுதிப்படுத்துகி றது

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் : "வானங் களையும், பூமியையும் படைத்தவன் யார் என்று அவர்களிடம்

*கேட்டால் அல்லாஹ்தான் என்று அவர்கள் உறுதியாக கூறுவார் கள்". ஸூறதுஸ்ஸுமர் வசனம் 38 மேலும் அல்லாஹ் கூறுகின் றான் :* **"அவர்களை படைத்தவன் யார் என்று அவர்களிடம் நீர் கேட்டால் அழ்ழாஹ்தான் என்று உறுதியாகக் கூறுவார்கள்"** *(ஸூறத் துஸ்ஸுஹ்ருப் வசனம் :87)*

*அல்குர்ஆன் மற்றும் வேதங்களின் ஏகோபித்த முடிவின்படி சிலைகளை வணக்கத்திற்காக எடுத்துக் கொள்வதானது மனி தனை இறைநிராகரிப்பபாளனாக மாற்றிவிடுகிறது.*

*அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :* **"(அல் லாஹ்வையன்றி நீங்கள் சிலைகளையே வணங்கின்றீர்கள் (அவற்றை) நீங்கள் பொய்யாக இட்டுக்கட்டியிருக்கின்றீர்கள். அல் லாஹ்வையன்றி நீங்கள் வணங்குபவை உங்களுக்கு எந்த வாழ்வா தாரத்தையும் அளிக்கும் ஆற்றல் பெற்றவை அல்ல. ஆக அல் லாஹ்விடமே நீங்கள் வாழ்வாதாரத்தை தேடி அவனையே வணங்கி அவனுக்கே நன்றி செலுத்துங்கள் அவனிடமே நீங்கள் மீட்டப்படு வீர்கள்".** *(ஸூறா அல் அன்கபூத் - 17)*

*நாம் எல்லோரும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்லவிருப்ப தால் நீங்கள் அல்லாஹ்விடமே வாழ்வாதாரத்தை தேடுங்கள் அவனை மாத்திரமே வணங்கி வழிபடுங்கள் என்கிறது இத்திரு வசனம்.*

*இன்று இந்தப் பூமியில் இணைவைத்தலின் எல்லா வடிவங்க லிருந்து விலகி ஒரிரைக் கொள்கையில் நிலைத்திருக்கும் மார்க் கம் இஸ்லாத்தைத் தவிர வேறில்லை.*

*எனவே, இந்த இஸ்லாமிய மார்க்கமானது இயல்பூக்கத்துட னும், வேத போதனைகளுடனும் ஒத்துப்போகிறதா இல்லையா என்று ஒவ்வொரு இந்துவும் எவ்வித பிடிவாதமுமின்றி அறிவு பூர்வமாக இம்மார்க்கத்தையும், இதில் உள்ள ஏகத்துவக் கோட் பாட்டையும் பார்க்க வேண்டும்.*

*அல்லாஹ்வை ஒரிறையாக ஏற்று வழிப்பட வேண்டும் என்பதற்*

காக அல்லாஹ்வால் மனித குலத்திற்கு அனுப்பட்ட எல்லா தீர்க்கதரிசிகளும் அனுப்பப்பட்டனர். இவ்விவகாரமானது எல்லா சிலைகளும் கலையப்பட்டு அல்லாஹ்வின் தீர்க்கதரிசிகளும், இறுதி தீர்க்கதரிசியான முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களும் கொண்டுவந்த கொள்கைளை ஏற்று கட்டுபடுவதன் மூலமே சாத்தியப்படும்.

## 4. இந்து மதத்தில் ஒரு கடவுளை பல நூறு சிலைகளாக பிரதிபளிக்கச் செய்யும் சிந்தனை எவ்வாறு உருவானது?

கடவுளின் பல்வகைப்பண்புகள் பல சுயங்களை (உருவங்களை) வேண்டி நிற்கிறது. அதாவது பல கடவுள்களை வேண்டி நிற்கிறது எனும் கருது கோளானது வேதகாலத்திற்கு பின்னுள்ள தற்போதைய இந்து மதத்தின் காணப்படும் மிகப்பெரும் பிரச்சினையாகும்.

அவர்கள் ஒவ்வொரு இறைபண்பிற்கும் அதனை பிரதிபலிக்க வல்ல ஒரு சிலையை கற்பனை செய்கிறார்கள்.

பிரஞ்சத்தை உருவாக்கியவர் என்ற அடிப்படையில் பிரம்மா அவர்களின் படைக்கும் கடவுளாக இருக்கிறார்.

அதே போல் பிரபஞ்ச பாதுகாவளர் என்ற அடிப்படையில் விஷ்னுவும், பிரபஞ்சத்தை அழிப்பவர் என்ற வகையில் சிவாவும் கடவுள்காளாக உள்ளனர்.(12)

இது பகுத்தறிவுக்கும், சீரிய உள்ளுணர்விற்கும் முரணானது மட்டுமன்றி வேதங்களில் காணப்படுகின்ற விடயங்களுக்கும் முரணான கருதுகோள்களாகும், எனவே பண்புகளின் பன்முகத் தன்மைக்கு உருவங்களின் பெருக்கம் எந்த வகையிலும் தேவையற்ற ஒன்றாகும்.

உதாரணத்திற்கு ஒரு மனிதன் விவேகமுள்ளவனாகவும் பலசாலியாகவும் இலக்கியவாதியாகவும் இருக்கலாம்.

ஆனால் இவ்வகை பண்மைத்துவ பண்புகளால் குறிப்பிட்ட ஒரு

*மனிதன் பல மனிதர்களாக ஆக வேண்டிய அவசியம் கிடையாது.*

*ஏனெனில் விவேகமுள்ள குறிப்பிட்ட அம்மனிதன்தான் பல சாலியாகவும் இருக்கின்றான், அதே மனிதன்தான் இலக்கிய வாதியாகவும் இருக்கிறான்.*

*இவ்விடயத்தில் உயர் முன்மாதிரி இறைவனுக்கு (அல்லாஹ் வுக்கு) மாத்திரமே உண்டு.*

*இப்பேருண்மையை வேதங்கள் உறுதிப்படுத்துகின்றன. ரிக் வேதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: கடவுள் என்பவர் இந்திரன், மித்திரன், வாயு அதாவது மாத்ரி/ (மாத்ரஷ்வா) என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார். மேலும் ஞானிகள் ஒரே கட வுளுக்கு வெவ்வேறு பெயர்களை குறிப்பிடுகிறார்கள்.*(13)

*அல்லாஹ்வின் திருநாமங்கள் மற்றும் அவனின் பண்புகள் பற்றி குறிப்பிடும் வசனங்கள் வேதங்களில் அதிகம் காணப்படுகின் றன.*

*எனவே பெயர்களும் பண்புகளும் ஒரே (மெய்ப்பொருளில் தான்) சுயத்தில்தான் நிலை பெற்றுள்ளது.*

*இவ்வடிப்படையில்தான் ஆரம்ப வேதங்களும், இஸ்லாமிய கோட்பாடும் அமையப் பெற்றுள்ளது. இஸ்லாமிய அடிப்படை யில் ஒரே இறைவனான அல்லாஹ்விற்கு பல அழகிய திருநாமங் களும், உயரிய பண்புகளும் உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் :* **“[உங்கள் வணக்கத்திற்குரியவன் ஒரே ஒரு இரட்சகனே! [உண் மையாக] வணங்கப்படத்தகுதியானவன் அவனைத்தவிர வேறு யாருமில்லை அவன் அளவற்ற அருளாளன்: நிகரற்ற அன்புடை யோன்”.** *(ஸூறதுல் பகரா வசனம் : 163)*

*ஆகவே அல்லாஹ்வே அருளாளனாகவும், அவனே நிகரற்ற அன் புடையோனாகவும் இருக்கின்றான் என இத்திருவசனம் குறிப்பி டுகிறது.*

*அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :* **“அவன் தான் அல்லாஹ் [உண்மையாக] வணங்கப்படத் தகுதியானவன். அவனையன்றி வேறு யாரும் இல்லை.[அவனே] ஆட்சியாளன், பரிசுத்தமானவன், சாந்தியளிப்பவன், பாதுகாப்பவன், கண்கா ணிப்பவன் யாவற்றையும் மிகைத்தவனும், அடக்கியாளுபவனும், பெருமைக்குரியவனுமாவான். அவர்கள் இணைவைப்பதை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்”.** *(ஸூறதுல் ஹஷ்ர் வசனம் :23)*

*எனவே பல்வகை பெயர்களையும் பண்புகளையும் ஏக இறைவ னான அல்லாஹ் பெற்றுள்ளான் என்பதை இவ்வசனம் காட்டுகி றது.*

*கடவுளின் பண்புகளை பல்வேறுபட்ட சிலைகள் வடிவத்தில் உருவகப்படுத்தும் சிந்தனையில் காணப்படும் இரண்டாவது பிரச்சினை என்னவென்றால் இவ்விக்கிரகங்கள் இருப்பதினால் இப்பிரபஞ்சத்திற்கு எவ்வித பாதுகாப்பும் கிடையாது என்ற கருத்தாகும்.*

*இவ்வடிப்படையில்தான் அல்குர்ஆன் அல்லாஹ்வின் விடயத் தில் விக்கிரக கோட்பாடுகள் அனைத்தையும் மறுப்பதோடு, அல்லாஹ்வுடன் பல கடவுள்களை ஏற்று வணங்குவதானது இப் பிரபஞ்ச பாதுகாப்பிற்கு எந்த வகையிலும் உத்தரவாதமில்லை என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றது.* **“[வானம் பூமி ஆகிய] இவ்விரண்டிலும் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் இருந்தி ருப்பின் இவையிரண்டும் சீர்குலைந்திருக்கும் அர்ஷுடைய இரட்ச கனாகிய அல்லாஹ் அவர்கள் வர்ணிப்பதை விட்டும் தூய்மையான வன்”.** *(ஸூறதுல் அன்பியா வசனம் :22)*

*அல்லாஹ்வுடன் இன்னும் பல கடவுள்கள் இருந்திருப்பின் வானங்கள் மற்றும் பூமியின் நிர்வாக ஒழுங்கு சீர் குலைந்து போயிருக்கும் என்கிறது மேற்படி வசனம்.*

**“சத்தியம் அவர்களது மனோ இச்சையைப் பின்பற்றியிருந்தால் வானங்கள், பூமி மற்றும் அவற்றில் உள்ளவர்களும் சீர்கெட்டிருப்**

**பார்கள். மாறாக நாம் அவர்களுக்குரிய நல்லுபதேசத்தை அவர் களுக்கு வழங்கினோம் எனினும் அவர்கள் தமக்குரிய நல்லுபதே சத்தைப் புறக்கணிப்போராவர்". *(ஸூறதுல் முஃமினூன் வசனம் :71)***

## 5. படைப்பாளனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையிலான உறவை இந்துக்கள் எவ்வாறு பார்க்கிறார்கள்?

*இன்று வாழும் பெரும்பான்மை இந்துக்கள் உலகின் எல்லா படைப்பினங்கள் உள்ளும் கடவுள் இருக்கிறார் என்னும் கோட் பாட்டை - அத்வைதத்தை - நம்புவர்களாக உள்ளனர். எனவே தற்போதைய இந்து மதத்தில் படைப்பினங்களுக்குள் கடவுள் உள்ளார் என்ற சித்தாந்தமே காணபப்டுகிறது. அதனடிப்படை யில் சிருஷ்டிகளும் கர்த்தருவும் ஒன்றாக மாறிவிடுகின்றனர்.*[14]

*இந்த விடயமானது அறிவியல் மற்றும் பகுத்தறிவு, அவதானம், வேதங்களின் மிக எளிய - கோட்பாடுகளுக்கே முரணாக அமைந் துள்ளது.*

(Panentheistic) - *அத்வைதத் தத்துவத்தில் அறிவியல் மற்றும் பகுத்தறிவு ரீதியான சிக்கல்கள் அதிகம் காணப்படுகிறன.*

*முதாலவது பிரச்சினை : இந்துக்களிடம் எல்லா படைப்பினங் களின் உள்ளும் கடவுள் இருக்கிறார். அப்படியாயின் 'மோட்சம்' என்ற பெயரால் கடவுளுடன் ஐக்கியப்படுவதற்காக செய்யும் கிரியைகளின் அர்த்தமென்ன?*

*நீ அவருள்ளும் அவர் உன்னிலும் சங்கமமாகி இருக்கும் நிலை யில் உனக்குள்ளே இருக்கும் ஒன்றினுள் நீ சென்றடைவது என் பது எவ்வாறு ?*

*இரண்டாவது பிரச்சினை: அத்வைதத்தின் புரிதலின் படி தவறு களும் பாவங்களும் அவர்கள் நம்பும் கடவுளின் சுயமே என்பதா கும். காரணம் அவர்களிடத்தில் கடவுள் எல்லாவற்றிலும் சங்கம மாகி இருப்பதால் அவரே தவறாகவும் குற்றமாகவும் விபச்சா*

ரமாகவும் கொலையாகவும் உள்ளார். எனவே கடவுளே அனைத்திற்கும் அடிப்படையாகும். இவ்வாறான நிலையில் பாவங்கள் மற்றும் குற்றங்களிலிருந்து விடுதலை பெற எத்தனிப்பது ஏன் ?

உலக ஆசைகள் மற்றும் மோகங்களிலிருந்து விலகி இருக்க மிகவும் ஆர்வம் கொண்டிருப்பது ஏன் ?

பாவங்களும் அத்வைதத்தினுள் இல்லையா?

இவ்வுலகமே கடவுளின் சுயமாக இல்லையா?

இன்றைய இந்துமத கோட்பாட்டின் படி நல்லது செய்ய வேண்டும் என்பதற்கான எவ்வித நியாயமும் கிடையாது.

இருப்பினும் எல்லோரும் நல்லது செய்யவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருப்பதோடு அது கடமை என்பதையும் புரிந்துள்ளனர். அவ்வாறில்லையா?

நல்லது செய்வதில் ஆர்வம் கொள்வது என்பது தூய உள்ளுணர்வின் தூண்டலின் பிரதிபளிப்பாகும். இதுவொன்றே அத்வைதக் கொள்கையானது பிழை என்பதற்கான உள்ளுணர்வின் நேரடி சான்றாகும்.

மூன்றாவது பிரச்சினை: அத்வைதம் குறித்த கூற்றானது யதார்த்த சார்பியம் (சார்ப்பியம் என்பது உலகில் ஒன்றே உள்ளது. அதுவே பலவாகப் பிரிந்து காணப்படுகிறது.) குறித்துப் பேசுகிறது, ஏனென்றால் சிலைகள் அல்லது கற்களை வணங்கும் அனைத்து மதங்களும் அவர்களைப் பொருத்தவரை கடவுளையே வழிபடுகின்றன, ஏனென்றால் கடவுள் என்பவர் அவர்களின் கற்பனையில் சிலை மற்றும் கல் என்பவைகளாகும். எனவே கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவரே அனைத்துமாக உள்ளார்.

எனவே இந்த உண்மை சார்பியமானது அர்த்தத்தையும் பெறுமதியையும் இழக்க வழிவகுக்கிறது. எனவே அனைத்தும் சரி என்ற நிலைக்கு மாறிவிடுகிறது!

முன்னர் குறிப்பிட்ட விடயங்களுடன் சேர்த்து இன்னொரு விட யத்தையும் குறிப்பிடுகிறேன். அதாவது அத்வைத கோட்பாடா னது (நம்பிக்கையானது) உலகம் எங்கிருந்து வந்தது (தோன்றி யது) என்ற கேள்விக்கு இன்னும் பதிலளிக்கவில்லை.

படைப்பாளனின் சுயம்தான் படைப்புகளினதும் சுயம் என்று கற்பனை செய்வது பகுத்தறிவு ரீதியான பிழையான எடுகோ ளாகும். ஏனெனில் இவ்வெடுகோளானது வெளிப்டையான ஒன்றின் தொடர்பானது அதன் புறத்தோற்றப்பாட்டுடன் இணைந்திருப்பதை கருதுகோளாக கருத வழிவகுக்கிறது.

இது ஒரு விசித்திரமான முரண்பாடும் பகுத்தறிவுரிதியாக சாத்தி யமற்ற விடயமுமாகும்.

அடிப்படையில் என்றைக்கும் தோன்றாத ஒரு பொருள் சுயமாக தோன்றுவதற்கு எவ்வாறு காரணமாக முடியும்?

நான்காவது பிரச்சினை: பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் படைக்கப்பட்டது என்று அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட் டுள்ளது. இதுவே அனைத்து புத்திஜீவிகளிடத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

ஆகவே பிரபஞ்சம் என்பது சக்தி, சடம் , இடம் மற்றும் கால நேரம் அனைத்தையும் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு படைப் பாகும்.

இப்பிரபஞ்சத்திற்கு ஆரம்பமொன்று உண்டு என்பதற்கான அள விடமுடியாத சான்றுகள் காணப்படுகின்றன. விஞ்ஞான ரீதி யாக, பிரபஞ்சம் ஒன்று இருக்கவில்லை அது பின்னர் தோன்றி யது என்பதுவே நிரூபிக்க்பட்ட உண்மையாகும்.

பிரபஞ்சம் ஏதும் இருக்கவில்லையெனும் போது நாம் அத்வை தம் பற்றி எப்படி பேச முடியும் ?

அத்வைதம் சரியானது என ஒரு வாதத்திற்கு வைத்துக்கொண் டால் இவ்வுலகம் ஆரம்பம், முடிவுகளற்ற நிலையானது,

*அல்லது குறைந்த பட்சம் இவ்வுலகத்தில் காணப்படும் பௌதி கம் நிலையானது என்ற கருத்தை குறிக்க வழிவகுத்துவிடும்.*

*விந்தை என்னவென்றால், சமகால இந்துக்கள் பௌதிக உலகம் நித்தியமானது என்று கூறுவதை வலியுறுத்துகின்றனர், எனெ னில் இதுவே அத்வைதத்தை நியாயப்படுத்த அவசியமான கூற் றாகும்.*

*இந்து அறிஞரான விவேகானந்த் கூறுகிறார்: 'எந்த நேரமும் கடந்து செல்லாத மற்றும் எந்த நிகழ்வும் இடம்பெறாத இட மாக இவ்வுலகம் மாறிவிடும் (அதாவது இவ்வுலகம் ஏதோ காலத்தில் முற்றாக அழிந்து விடும் என்கிறார்).'* [15]

*அத்வைத கருத்தியலுடன் உடன்பாடு காணவேண்டும் என்பதற் காக சமகால இந்துக்கள் பௌதீக உலகத்தின் நித்தியம் குறித்து பேசுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.*

*ஏற்கனவே இவர்களிடம் இந்தக் கொள்கை புகுந்திருக்கவில்லை. இவர்களைப் பொருத்தவரை இந்த அத்வைதக் கொள்கையை நம்பியிருக்கவுமில்லை. என்றாலும் ஷைத்தான் அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பல வழிகளிலும் தருனம் காத்து நின்று அவர்களிடம் சென்று தீர்க்கதரிசிகள் கொண்டு வந்த மார்க்கத்தை விட்டு அவர்களை மதிமயங்கச் செய்து வழி கெடுத்து விட்டுள்ளான் என்பதே யதார்த்தமான விடயமாகும்.*

*இது குறித்து அல்லாஹ் அல் ஹதீஸ் அல் குத்ஸியில் பின்வரு மாறு குறிப்பிடுகிறான் :* **"நான் எனது அடியார்கள் அனைவரை யும் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவே படைத் தேன். அவர்களிடம் ஷைத்தான்கள் வந்து அவர்களின் மார்க் கத்தைவிட்டும் வழிகெடுத்துவிட்டனர். நான் அவர்களுக்கு அனு மதித்ததை தடைசெய்தான். நான் எவ்வித சான்றையும் இறக்காத எனக்கு இணைவைத்து வணங்குதலை அவர்களுக்கு கட்டடைள யிட்டான்".** [16]

ஆகவே எல்லா மனிதர்களும் ஓரிறைக் கொள்கையில்தான் இருந்தார்கள். ஷைத்தான்கள் அவர்களிடம் சென்று இவ்வா றான இறை நிராகரிப்புக் கொள்கைகளினால் அவர்களைக் கவர்ச்சிக்குள்ளாக்கி அவர்களை வழிகெடுத்தனர் என்கிறது மேற்படி ஹதீஸ்.

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறி னார்கள் : **"நிச்சயமாக ஷைத்தான் மனிதன் போகும் பாதையி லெல்லாம் தருணம் பார்த்து அமர்ந்திருக்கிறான்".** (17)

ஆகவே ஷைத்தான் மனிதனை வழிகெடுப்பற்கு ஏதாவது ஒரு வழியை தேடிக் கொண்டிருக்கிறான். தீர்க்கதரிசிகள் கொண்டு வந்த ஓரிறைக் கொள்ளையிலும் வணக்கவழிபாடுகளிலும் அவர் களுக்கு கட்டுப்படுவதன் மூலமே தவிர அவர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் (இரட்சிப்பும்) கிடையாது.

இவ்வுலகம் படைக்கப்பட்டது எனவும் அதற்கொரு ஆரம்பம் உண்டு எனவும் வேதங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

மேலும் அல்லாஹ் (இறைவன்) படைப்பிலிருந்து சுயாதீனமான வனாக உள்ளான் என்றும் படைப்பினுள் அவன் சங்கமமாக மாட்டான் என்றும் வேதங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும் நிலையில்,

அத்வைதக் கொள்கையின் இந்த கட்டத்தை இந்துக்கள் எவ்வாறு அடைந்தனர்?

குறிப்பாக ரிக் வேதம் இவ்வாறு கூறுகிறது : 'கடவுளே! (யா அல்லாஹ்!) சூரியனும் உலகமும் சேர்ந்து உன்னைச் சூழ்ந்து உன்னைத் ஆட்கொள்ள முடியாது.' (18)

அத்வைதம் தவறானது என்பதற்கு வேதத்தின் தெளிவான சான் றாக மேற்படி வேதவசனம் உள்ளது. எனவே அல்லாஹ் (இறை வன்) என்பவன் தனது படைப்பிலிருந்து சுயாதீனமானவன் மேலும் சூரியனும் சந்திரனும் இறைவனல்ல என்பதும் இதனால் தெளிவாகிறது.

*ரிக் வேதம் மேலும் கூறுகிறது: ‘அல்லாஹ்தான் (இறைவன்-தான்) இரவையும் பகலையும் படைத்தவன் மேலும் அவனே உலகத்தினதும் அதில் உள்ளவைகளுக்கும் சொந்தக்காரன், மேலும் அவன் சூரியன் சந்திரன், பூமி, வானம் ஆகியவைகளைப் படைத்தவன்’* [19]

*பௌதீக உலகின் நித்தியம் மற்றும் அத்வைதக் கொள்கை ஆகிய இரண்டையும் மறுக்கும் விடயத்தில் இவ்வேதங்களின் கொள் கையை விட மிகத் தெளிவான சான்று வேறு எதுவாகத்தான் இருக்க முடியும்?*

*மேலும் யஜுர் வேதம் பின்வருமாறு கூறுகிறது: ‘அவன் தனக்கு முன் எதையும் படைக்க வில்லை, மேலும் அவனே எமது படைப் பாளனும் உரிமையாளனுமாவான், மேலும் அவனே அனைத் தையும் அறிந்தவனாகவும் உள்ளான்.’* [20]

*எனவே, அல்லாஹ்வுக்கு முன் எதுவும் படைக்கப்பட்டிருக்க வில்லை. ஆக அவனே ஆரம்பமானவனாக (முதலாமவனாக) உள்ளான். உலகை அல்லாஹ்வே படைத்தான். மேலும் அவன் மகத்துவமிக்கவன் வானத்தினதும் பூமியினதும் அதிபதி.* [21]

*அல்லாஹ் தனது தீர்க்கதரிசியான முஹம்மது இப்னு அப்தில் லாஹ் (ஸல்) அவர்களுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பு ‘அல்லாஹ் (இறைவன்) தனது படைப்பிலிருந்து வேறுபட்ட வன், அவன் தனது சிம்மாசனத்தில் அவனது தகுதிக்கேற்றவாறு உள்ளான் என்றும் அவன் சிருஷ்டிகள் உள்ளே சங்கமிப்பது மில்லை, அவைகளும் அவனுள் சங்கமிப்பதுமில்லை என்ற விட யத்தை வேத வெளிப்பாட்டின் மூலம் அவர்களுக்கு அறிவித்து கொடுத்தான். புனித அல் குர்ஆன் இத்தெளிவான உண்மையை பின்வருமாறு உறுதிப்படுத்தியுள்ளது.*

**உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் “அல்லாஹ்தான் வானங் களையும், பூமியையும் மற்றும் அவ்விரண்டுக்குமிடைப்பட்டதையும் ஆறு நாட்களில் படைத்து பின்னர் தன் தகுதிக்கேற்றவாறு**

**அர்ஷின் மீது உயர்ந்தான். அவனையன்றி எவ்விதப் பாதுகாவலனோ பரிந்துரை செய்பவனோ இல்லை. நீங்கள் நல்லுபதேசம் பெற மாட்டீர்களா?".** *(ஸூறதுஸ் ஸஜ்தா வசனம் 4)*

*ஆகவே தீர்கதரிசிகளின் அடிப்படைகொள்கையும் மார்க்கமும் அவர்களின் ஷரீஅத்தின் (இஸ்லாமிய வரையறை) அடிப்படையும் என்னவெனில் சிருஷ்டிகர்த்தாவாகிய தனித்தவனும் ஏகனுமாகிய அல்லாஹ் தனது படைப்பிலிருந்து வேறுபட்டவன். அதாவது தனது படைப்பினங்களிருந்து பிரிந்து அவர்களில் சங்கமமாகாதவன்! என்பதாகும்.*

*அத்வைதத் தத்துவம் இவ்வுலகம் எங்கிருந்து வந்தது என்ற மிக முக்கிய கேள்விக்கு பதிலளிக்காமை இக்கோட்பாட்டின் ஐந்தாவது பிரச்சினையாகும்.*

*இத்தத்துவத்தின் படி இவ்வுலகம் எப்படித் தோற்றம் பெற்றிருக்க முடியும்?:*

*மேலும் : இந்த தத்துவத்தை ஆரம்பத்தில் சொன்னது யார்?*

*அதற்கான ஆதாரம் என்ன?*

*நவீன விஞ்ஞானம், பகுத்தறிவு, வேதங்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மார்க்கம் ஆகியவற்றுக்கு முரணான இந்த நம்பிக்கையைச் சூழ பல கேள்விகளும் பல சிக்கல்களும் நிறைந்து காணப்படுகின்றன.*

## 6. வாழ்வையும் மரணத்தையும் குறித்து இந்துமதம் எவ்வாறு நோக்குகிறது?

*இன்றைய இந்து மதம் மறுபிறப்புச் சிந்தனை மற்றும் முடிவில்லாத தலைமுறை சுழற்சியை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தக் கருத்தோட்டத்தின் அடிப்படையில் நாம் மறுபிறப்புகளின் ஒரு வட்ட சுழற்சியை மையமாகக் கொண்டு இயங்குகிறோம். இந்த வகையில் ஒவ்வொரு குழந்தையும் அவருக்கு முன் இருந்த ஏதாவது உயிரினத்தில் இருந்திருக்க வேண்டும்.*

ஒருவரின் ஆன்மாவானது அவரது மரணத்திற்குப் பிறகு மற்றொரு உயிரினத்திற்கு நகர்ந்து சென்று விடுகிறது. இதையே இந்து மதத்தில பிறவிச்சுழற்சி ‘சம்சாரம்’ என்ற சொல்லால் அறியப்படுகிறது.[22] ஆன்மாக்களின் இடமாற்றம் தொடர்பான இந்த பிரச்சினையில் பல அறிவுசார் மற்றும் அறிவியல் சிக்கல்கள் உள்ளன. அவற்றுள்:

முதல் பிரச்சினை: இது ‘டெர்டுல்லியனின் ஆட்சேபனை’ என்று அறியப்படுகிறது. அவர் கூறுகிறார்: மறுபிறவிக்கான உயிர்களின் இடமாற்றம் உண்மையாக இருந்தால், எப்படி குழந்தைகள் வளர்ந்தோரின் மன உணர்வுத் திறன்களுடன் பிறப்பதில்லை? [23] என்ற வினாவைத் தொடுக்கிறார்.

மேலும் (ஆன்மாக்களின் இடமாற்றம் பற்றிய) மறுபிறவிக் கோட்பாடானது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் வாழும் உயிரினங்களின் எண்ணிக்கை நிலையானதாக (மாறாது) இருக்க வேண்டும். ஏனென்றால் அந்த உயிரினங்களே வேறு சில உயிரினங்களில் இடமாற்றம் பெறுகின்றன. ஆச்சரியம் என்னவென்றால் இந்த விடயத்தை தற்காலத்தில் உள்ள அறிவுள்ள எவரும் கூறுவதில்லையே!

அடிப்படையில் பூமி இல்லாத ஒரு காலமும், பூமியில் உயிரினங்கள் இல்லாத ஒரு காலமும் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். மேலும் தற்போதுள்ள எண்ணிக்கையின் அளவிற்கு உயிரினங்கள் இல்லாத ஒரு காலம் இருந்தது. மாறாக அக்காலத்தில் மிகக் குறைவாகவே உயிரினங்கள் காணப்பட்டன. பின்னர் காலப்போக்கில் உயிரினங்கள் அதிகரித்தன என்பதே இன்றைய மனிதகுலத்தின் ஒருமித்த கருத்தாகும்.

இன்று இருப்பதை விட மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காலம் ஒன்று இருந்துள்ளது.

மனிதர்களின் எண்ணிக்கை ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே ஆன்மாக்களின்

மறுபிறப்பானது நிலையான சுழற்சி அடிப்படையில் எவ்வாறு நிகழ்கிறது?

மூன்றாவது பிரச்சினை: இந்தத் தத்துவத்தின் புத்திரர்களைத் தவிர, தான் இருந்த பூர்வ ஜென்மத்தை - முற்பிறவியை - நினைவு கூருபவர்கள் எவரும் இல்லாதது ஏன்?

ரூத் சிம்மன்ஸ் என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண் ஒரு வர் இருந்தாள். அவள் பிரைடி மர்பி என்ற இன்னொரு பெண் ணின் மறுஅவதாரம் என்று கூறிக்கொண்டாள், ரூத் சிம்மன்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்தில் பிராடி மர்பியாக இருந்தபோது தனது நிலை குறித்த கடந்தகால நினைவுகளை தனது கண்முன்னே கொண்டு வந்தாள். மேலும் ரூத்தின் வாழ்க் கையை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த பிறகு பின்வரும் விடயம் தெரியவந்தது. அதாவது சிம்மன்ஸ் என்ற இந்தப் பெண்ணுக்கு அயர்லாந்தில் பிராடி மர்பி என்றழைக்கப்படும் ஒரு பழைய அண்டை வீட்டுக்காரர் இருப்பது தெரியவந்துள்ளது. ரூத் சிம் மன்ஸ் என்ற இந்தப்பெண் அயர்லாந்தில் பிராடியுடன் இருந்த போது அவளுடன் இருந்த நினைவுகளை எடுத்துக்கொண்டு, தான் பிராடி என்று கூறி அந்நினைவுகளை தனக்குத்தானே இணைத்து கூறிவந்தது உறுதியானது. (24)

ஆன்மாக்களின் இடமாற்றம் வெறும் மாயையையும் கற்பனை யுமாகும். மேலும் இது அறிவியல் மற்றும் புலனறிவு குறித்த எளிய அடிப்படைகளுக்கே (கோட்பாடுகளுக்கு) முரணானதா கும்.

(என்சைக்ளோபீடியா ஆஃப் பிலாசபியின்) தத்துவம் சார் கலைக் கலஞ்சியத்தின் தலைமை ஆசிரியரும் மற்றும் நியூயோர்க் பல் கலைக்கழகத்தின் பேராசிரியருமான பால் எட்வர்ட்ஸ் கூறுகி றார், 'மறுபிறவி என்பது நவீன அறிவியலுக்கு முரணான ஒரு வெறும் கற்பனை மட்டுமே!.' (25)

*ஆகவே மனிதன் இறந்து விட்டால் அவன் இன்னொரு ஜென்மத்தில் பிறக்கவே மாட்டான்*

*வேதங்கள் எப்போதும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன. அதில் (வேதங்களில்) ஆன்மாக்கள் இடம்மாறல் அல்லது சம்சாரா என்றழைக்கப்படும் பிறவிச்சுழற்சி தொடர்பான எந்த செய்தியும் கிடையாது.* [26]

*இந்து அறிஞரான ஸ்ரீ ஸ்த்யாகாம் வித்யாலின்கர் கூட இவ்வாறு குறிப்பிடுகிறார்: 'மறுபிறவிக் கோட்பாடு வேதங்களில் இல்லை, அதைச் சொல்பவர்களுக்கு எதிராக நான் சவால் விடுகிறேன்.'* [27]

*வித்யாலின்கரின் கூற்று சரியானது என்பதற்கு இன்னொரு சிறந்த ஆதாரம் என்னவென்றால், இந்துக்கள் 'சிராத்தம்' என்று அழைக்கப்படும் ஒரு பழங்கால மத சடங்கை செய்கிறார்கள், இந்த சடங்கின் நோக்கம்: யாதெனில் இறந்தவர்களின் ஆன்மாவை அமைதிப்படுத்துவதாகும். அல்லது அவை ஈடேற்றம் பெற வேண்டி செய்யும் ஒரு கிரியையாகும்.*

*இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் கிடைக்க வேண்டி மத சடங்கு செய்யும் நிலையில், எப்படி ஆன்மாக்கள் இன்னொரு புதுப்பிறவியாக பிறந்து இடமாற்றம் பெறமுடியும்?*

*தீர்க்கதரிசியான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வால் இறக்கியருளப்பட்ட அல்குர்ஆன்,* **"எமது இவ்வுலக வாழ்வைத் தவிர வேறு (வாழ்வு) இல்லை நாம் மரணிப்போம், நாம் உயிர் வாழ்வோம் நாம் எழுப்பப்படுவோராக இல்லை"** *என்று வாழ்க்கை மீண்டும் மீண்டும் வருகிறது எனக் கூறுவோரின் கருத்தை மறுக்கிறது. (ஸூறதுல் முஃமினூன் வசனம் :31) அல்லாஹ் தனது திருமறையில் அவர்களின் கூற்றுக்கு பின்வருமாறு பதிலளிக்கிறான்.* **அவர்களுக்கு முன்னர் எத்தனையோ கூட்டத்தினரை நாம் அழித்து விட்டோம் என்பதையும் அ(ழிந்து போன)வர்கள் நிச்சயமாக அவர்களிடம் திரும்பி வரவே மாட்டார்கள் என்பதையும் அவர்கள் கவனிக்க வேண்டாமா?**
*(ஸூறது யாஸீன் வசனம் :31)*

*எனவே மரணித்தவருக்கு மீண்டும் இவ்வுலகிற்கு இன்னொரு தடவை மீண்டும் வரமுடியாது இவ்வேத வசனம் கூறும் விடய மாகும்.*[28]

*உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான்* **"முதல் மரணத்தைத் தவிர வேறு மரணத்தை அதில் அவர்கள் அனுபவிக்கமாட்டார்கள்"** ***(ஸூறத்துத் துஹான் வசனம் : 56)***

*இதுவே முஸ்லிம்களினதும், துரதிர்ஷ்டவசமாக இந்துக்களால் கைவிடப்பட்ட வேதங்களினதும் நம்பிக்கையுமாகும்.*

*மறுபிறவித் தத்துவத்தின் நான்காவது பிரச்சினை: இத்தத்துவத் ததை ஏற்றோரின் நோக்கம் யாதெனில் இந்த மறுபிறப்புகளிலி ருந்து விடுபட, முழுமையான அல்லது மோட்சம் என்று அழைக் கப்படும் ஐக்கிய நிலையை அடைவதே என அவர்கள் கூறுகின் றனர், இதன் பொருள் மீண்டும் மீண்டும் பிறப்பது என்பது ஒரு வேதனையாகும்.*

*என்றாலும் மீண்டும் மீண்டும் பிறப்பது வேதனை என யார் கூறி னார்?*

*உண்மையில் பெரும்பாலானோரிடம், நீங்கள் மீண்டும் பிறந்து மீண்டும் வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகிறீர்களா? என்று அவர்களிடம் கேட்டால், அவர்களில் பலர் ஆம் என்று பதில ளிக்க தயங்க மாட்டார்கள்.*

*மேலும், உலக இருப்பு என்பது ஒரு வேதனை என்ற அவநம்பிக் கையான பார்வை ஒரு தவறான பொய்யான பார்வையாகும். இவ்வுலகில் அதிக நன்மைகளும் எண்ணற்ற அருள்களும் காணக் கிடைக்கிறது என்பதே யதார்த்தமாகும்.*

*மோட்சம் என்பது நிஜத்தில் இல்லாத ஒன்றிலிருந்து விடுபடுவ தற்கான வெறும் ஒரு கற்பனை (மாயையான) முயற்சியே!*

*ஐந்தாவது பிரச்சினை: ஆன்மாக்களின் இடப்பெயர்ச்சி தத்துவ மானது எந்த குற்றத்தையும் அல்லது பாவத்தையும் பொருற்*

படுத்தாது செய்ய மனிதனை தூண்டுவது மட்டுமின்றி குற்றங் கள் செய்வதை நியாயப்படுத்துகிறது. அதாவது மனிதன் நிச்சய மாக எதிர்வரும் பிறவியில் நிச்சயம் இரட்சிக்கப்படுவான் என்ப தால் எவ்வகையிலேனும் இந்தப் பிறப்பை அனுபவிக்க வேண் டும் என்கிறது.

இந்த விடயமானது எந்த ஒரு குற்றத்தையும் மிகச்சாதாரணமாக செய்வதற்கு உடன்பாடாக கருதப்படுகிறது. இதன் காரணத்தி னாலோ என்னவோ இந்தியா உலகிலேயே விகிதாசார அடிப் படையில் அதிக குற்றச்செயல்கள் புரிகின்ற, குறிப்பாக கற் பழிப்பு நடக்கின்ற முதன்மை நாடாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.[(29)]

கூட்டு (பாலியல்) பலாத்கார குற்றங்கள் அதிகம் நடக்கும் முன் னனி நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

## 7. இந்துக்களின் மறுபிறப்பு மற்றும் தொடர் பிறப்பு முறை பற்றிய சிந்தனையின் அடிப்படை யாது?

இந்தக் கருத்துக்கள் எப்படி உருவானது. யார் உருவாக்கினார் கள், அதற்கு என்ன ஆதாரம் என்று யாருக்கும் தெரியாது.

வேதங்களில் ஒரு ஆத்மா பல முறை பிறப்பதற்கான எந்த ஆதா ரமோ, ஆன்மாக்களின் இடப்பெயர்ச்சி பற்றிய ஒரு வார்த்தை கூட கிடையாது. இந்தக் கருத்துக்கள் யாவும் பிற்கால புராண தத்துவங்களில் மட்டுமே தோன்றின.

பிராண சடங்குகளில் செய்வது போல நீண்ட நேரம் உண்ணா மல், குடிக்காமல் அமர்ந்திருப்பதன் விளைவாக ஒருவித கற் பனையாக இந்த எண்ணங்கள் ஒரு இந்து துறவியின் மனதில் உதித்திருக்கலாம் என்றே கருத வேண்டியுள்ளது.

பிராண சடங்கானது ஒரு குறிப்பிட்ட நிலையில் உண்ணாது பருகாது நீண்ட நேரம் அமர்ந்து இருப்பது என்பது தெரிந்த விடயமாகும்.

உணவு அல்லது பானங்கள் இல்லாமல் இவ்வாறு ஒரு குறிப் பிட்ட நிலையில் பல மணிநேரம் செயலற்ற நிலையில் அமைதி யாக இருப்பதனால், இரத்த குளுக்கோஸ் குறைவடைந்து மூளை யின் அயனிகளில் சமநிலையின்மைக்கு வழிவகுக்கிறது, இத னால் எண்டோர்பின் ஹோமோன்களின் கட்டுப்பாடற்ற சுரப்பு கள் சுரப்பதனால் உண்மையான மாயத்தோற்ற உணர்வுகள் ஏற் படத் தொடங்குகின்றன. (30)

பல தடவைகள் அவதாரம் எடுத்தல் குறித்து புராணங்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளவையும், துறவிகள் கருதும் விடயங்க ளும் ஒரு வகை மாயத்தோற்றம் அல்லது மூளையை மயக்கத்திற் குள்ளாக்கும் விடயங்களாகும்.

நவீன அறிவியல் (விஞ்ஞான) அறிக்கையின்படியும், அரச இணையதளமான, உலகின் மிகப்பெரிய மருத்துவ ஆய்வுகளுக் கான மூலமாக விளங்கும் உயிரியல் தொழிநுட்ப ஆராய்ச்சிக் கான அமெரிக்க தேசிய நிலையத்தின் குறிப்புகளின் படி நீடித்த இரத்தச் சர்க்கரைக் குறைவானது மாயத்தோற்றங்களுக்கு இட் டுச் செல்கிறது என்று குறிப்பிடுகறது. (31)

இமாம் அல்- தஹபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள் "எவ்வித அறிவுமற்ற வணக்கவாளி எப்போது சாதாரன நொருக் குத்தீனிகளை மாத்திரம் உண்டு, உலக சுகங்களை துறந்து, பசித் திருந்து வணக்கத்தில் மாத்திரம் முழுமையாக ஈடுபடுகிறாரோ அவரை மன ஊசலாட்டங்கள் தொற்றிக் கொள்ளும். ஷைத்தா னும் அவரினுள்ளே புகுந்து வெளியாகிறான். இதனால் அவர் தான் ஆன்மிக நிலையை அடைந்து விட்டதாக எண்ணி தனது நிலையை உயர்த்திக் கொள்கிறார். இவ்வாறான நிலையானது ஷைத்தான் அவரை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவனுக்குள் ஊசாலாட்டங்களை ஏற்படுத்துவதாகும் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்". (32)

இதானால்தான் இஸ்லாம் இவ்வாறான முறைகளில் ஆத்மஞா னப் பாதையைக் கடைப்பிடிப்பதையும், ஆன்மாவை வருத்திக்

கொள்வதையும் எச்சரிக்கிறது. இவ்வாறு ஆன்மாவை வருத்திக் கொள்வதானது காலப்போக்கில் சிந்தனைக் கோளாறுகளை யும், மார்க்கத்தில் குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்கு வழிவகுக் கும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :
**"அல்லாஹ் தனது அடியார்களுக்காக வெளிப்படுத்திய அவனது அலங்காரத்தையும் உணவில் பரிசுத்தமானவற்றையும் தடை செய்பவன் யார் என்று (நபியே) நீர் கேட்பீராக!".** (ஸூறதுல் அஃராப்)[32] நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி னார்கள் : "மார்க்க விவகாரங்களில் உங்களை நீங்களே வருத்திக் கொண்டு அதிதீவிரமாக ஈடுபட வேண்டாம். அவ்வாறு செய் தால் அல்லாஹ் அந்த விடயங்களை கட்டாயமாக்கிவிடுவான். ஒரு சமூகம் இவ்வாறு தன்னை வருத்திக் கொண்டு தீவிரமாக ஈடுபட்டபோது அல்லாஹ் அந்த விடயங்களை கட்டயமாக்கி னான். இதுவேயூத கிரிஸ்தவ மத ஆலயங்களில் காணப்படு கின்ற அவர்களின் எச்சங்களாகும. **"துறவறத்தை அவர்கள் புதி தாக உருவாக்கிக் கொண்டனர்.அதை நாம் அவர்கள் மீது விதியாக் கவில்லை"** (ஸூறதுல் ஹதீத் : 27)[33]

இத்தீவிர நிலையானது ஒரு வகை மாயத்தோற்றத்தை உரு வாக்கி வேத எதிர்ப்பு உணர்வுகளை தோற்றுவித்தது. இத்தீவிர துறவு நிலையானது இன்று இந்து மத அடிப்படைகளுள் ஒன் றாக மாறிவிட்டது.

மறுபுறம், கடவுள் (அல்லாஹ்) தனது தீர்க்கதரிசிகளை உறுதிப் படுத்துவதற்காக வழங்கும் உண்மை அற்புதங்களைப் பார்த் தால், அவைகள் திடீரென்று முன் ஏற்பாடுகள் இல்லாமல் நடக் கிறது. அவற்றை மக்கள் நேரடியாக தங்கள் கண்களால் பார்த்து சாட்சியமளிக்கிறார்கள், இதைப் போன்ற அற்புதங்களை மனி தர்களால் கொண்டு வர முடியாது!

தீர்க்கதரிசிகளின் செய்திகளுக்கும், இந்து மத துறவிகளின் பார்ப்பனர்களின் செய்திகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

## 8. பிரபஞ்சம் குறித்து இந்துக்களின் பார்வை என்ன?

*இந்து மெய்யிலின் (தத்துவத்தின்) அடிப்படையில் பிரபஞ்சமானது அழிந்து போய் பின்னர் அது மீண்டும் மீண்டும் தோற்றம் பெறும். இச்செயன்முறை தொடராக நிகழும் என்பதாகும்.*

*அதாவது பிரபஞ்சமானது தோற்றம் பெற்று, பின் அழிவுற்று பின் அதே போன்று மீண்டும் தோற்றம் பெறும் என்பதாகும்.*

*பிரபஞ்சம் அழிந்து மீண்டும் தோற்றம் பெறுவது எனும் இக் கோட்பாடானது ஒரு அறிவியல் தவறாகும்.*

*அறிவியல் ரீதியாக பார்ப்போமானால் இப்பிரபரஞ்பத்திற்கு முன் எந்த ஒரு பிரபஞ்சங்களும் இருக்கவில்லை. ஆனால் இப் பிரபஞ்சமோ எவ்வித முன்மாதிரியுமின்றி ஆக்கபூர்வமாக படைக்கப்பட்டுள்ளது.*

*1400 ஆண்டுகளுக்கு முன்பு சில பொற்காசுகளுக்காக மக்கா நகர மக்களின் ஆடுகளை மேய்த்து வந்தவரும், இறைவனின் தூதரும் இஸ்லாத்தின் நபியுமான முஹம்மது பின் அப்துல் லாஹ் என்று அழைக்கப்படும் அவர்களுக்கு அல்லாஹ் இந்த பிரபஞ்சம் எதுவித முன்மாதிரியின்றி படைக்கப்பட்டது என வேத வெளிப்பாட்டின் மூலம் அறிவித்துக் கொடுத்தான். இதுவே இஸ்லாமியர்களின் நம்பிக்கையாகும்.* **அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் ஒரு காரியத்தை முடிவு செய்துவிட்டால் அதை 'ஆகுக!' எனக் கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடும்".** *(ஸூறதுல் பகரா வசனம் :117)*

## 9. இந்து மதத்தில் மனித உடல் உருவாக்கம் எதனால் வடிவமைக்கப்படுகிறது?

*ஐம்பூதங்களான நீர், பூமி, காற்று, நெருப்பு மற்றும் ஆகாயம் ஆகியவற்றின் கூட்டுப்பொருட்களினால் மனித உடலானது உருவாக்கப்பட்டுள்ளது என இந்து மதம் குறிப்பிடுகிறது.*

இப்பிரபஞ்சத்தில் உள்ளவை அனைத்தும் (இவ்வைந்து கூறு களினால்) ஐம்பூதங்களால் ஆனதாகும்

ஐம்பூதங்களில் ஒவ்வொன்றும் அதற்கேற்ற கிரகங்களைக் கொண்டுள்ளன. செவ்வாய் என்பது நெருப்பாகும். சனி பூமி யைக் குறிக்கும், மேலும் மனிதனின் ஒவ்வொரு உறுப்புக்கும் ஐம்பூதங்கள் (ஐந்து மூலக்கூறுகள்) உண்டு. மண்ணீரல் பூமி யையும் இதயம் நெருப்பையும் குறிக்கும்.

உலகில் உள்ள அனைத்தும், காலம் உட்பட ஐம்பூதங்களின் (ஐந்து மூலக்கூறுகளின்) அடிப்படையிலேயே வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் நோயும் ஒன்றாகும். ஐம்பூதங்களின் சமநிலையில் ஏற்படுகின்ற ஒரு கோளாறே இதற்குக் காரணமா கும்.

நீண்ட நேரம் அசைவின்றி அமர்தல் மற்றும் பட்டினியோடு இருத்தல் எனும் சடங்குகளைப் பிரதிபலிக்கும் பிராணன் என்ப தினூடாகவே (இவ்வைந்து கூறுகள்) ஐம்பூதங்கள் பற்றிய சிந் தனை பரவியது.

துரதிஷ்டவசமாக, ஐம்பூதங்கள் சிந்தனை உலகில் பரவியது. மேலும் இதன் விளைவாக இயற்கை சக்தியினால் சிகிச்சை செய் யும் கலைகள் தோன்றின

திறன் சிகிச்சை, மேக்ரோபயாடிக்ஸ், ஃபெங்சுய், வண்ண சிகிச்சை மற்றும் பிற செயன்முறைகள் (இவ்வைந்து மூலக் கூறு களையும்) ஐம்பூதங்களை கட்டுப்படுத்தும் அடிப்படையில் அமைந்துள்ளது.

அவர்களிடத்தில் (இவ்வைந்து மூலக்கூறுகளையும்) ஐம்பூதங் களை கட்டுப்படுத்துவது வாழ்வாதாரத்தை பெற்றுத் தருவது டன் தீங்கையும் தடுக்குகிறது.

இன்று இந்து கோவில்களில், ஐம்பூதங்களை (ஐந்து கூறுகளை) கட்டுப்படுத்த மசாஜ் செய்யப்படுகிறது, இது பல நோய்களுக் கான சிகிச்சை என்ற அடிப்படையிலாகும்.

ஐம்பூதங்கள் பற்றிய இச்சிந்தனைக்கு எவ்வகையிலும் அறிவிய லுடன் தொடர்பு கிடையாது

அதே போன்று உயிரியல் மற்றும் மருத்துவம் போன்ற துறைக ளோடும் எவ்விதத்தொடர்பும் இதற்குக் கிடையாது

மாறாக, அறிவியலானது ஐம்பூதங்களும் அதனுடன் தொடர்பு டைய நடைமுறைகளும் ஒரு வகை மூடநம்பிக்கை, மாயை மற் றும் மோசடி எனத் தீர்ப்பளிக்கிறது.

ஐம்பூதங்கள் குறித்த கருத்து ஒரு போலியான அறிவியல் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.(34)

அதனுடன் தொடர்புடைய நடைமுறைகள் (வழக்காறுகள்) புனைகதைகள் எனவும் கற்பனை எனவும் மதிப்பிடப்பட்டுள் ளது.(35)

மறுபிறப்பு மற்றும் ஆன்மாக்களின் இடப்பெயர்ச்சி பற்றிய சிந் தனை எவ்வாறு ஒரு துறவியின் மனதில் உதித்ததோ (தோன்றி யதோ) அதேமுறையில் ஐம்பூதங்கள் பற்றிய சிந்தனையும் ஒரு துறவியின் மனதில் தோன்றியிருக்கலாம். இச்சிந்தனைக்கு பகுத் தறிவு ரீதியானதும் அறிவியல் ரீதியானதும் தர்க்க ரீதியானது மான எவ்விதச் சான்றுகளும் கிடையாது.

இது வெறும் ஒரு கற்பனை சிந்தனையாகும்.

பிரச்சினை என்னவென்றால், இச்சிந்தனையின் செயற்பாடுகள் வெறுமனே விக்கிரக ஆராதனை சார் தாயத்துக்களும், மற்றும் - அல்லாஹ் எவ்வித சான்றாதாரத்தையும் இறக்கியருளாத - கிர கங்கள், வடிவங்கள், சின்னங்கள், வண்ணங்கள் மற்றும் தாயத் துக்கள் ஆகியவற்றுடன் பற்றுக் கொள்வதாகும்.(36)

இந்த நடைமுறைகள் சரியான சிகிச்சையைப் பெறுவதில் கால தாமதத்திற்கு வழிவகுப்பதினாலும் நடைமுறை உலகத்திற்கு ஒத் திசைவாக மாயைகளில் மனிதனை வாழ வழிவகுப்பதாலும், ஐம்பூத சிந்தனை தொடர்பான இந்த நடைமுறைகளை கண்டிப்

*பதில் இஸ்லாம் நவீன அறிவியலையே முந்தியுள்ளது. அது மாத் திரமன்றி அல்லாஹ் (இறைவன்) அல்லாதவற்றுடன், பற்றுக் கொள்வதற்கு இச்செயற்பாடுகள் வழிவகுப்பதால், இஸ்லாம் இந்த நடைமுறைகளை கடுமையாக எச்சரிக்கிறது, இது குறித்து புனித ஹதீஸ் குத்ஸியில் எல்லாம் வல்ல அல்லாஹ் பின்வருமாறு கூறிப்பிடுகிறான்.*

**“எனது அடியார்களில் என்னை விசுவாசிக்கக் கூடியவர்களும் என்னை (நம்பாதோரும்) நிராகரிப்போரும் உள்ளனர். அல்லாஹ் வின் (இறைவனின்) அருளாளும் அவனின் கருணையாலும் எங் களுக்கு மழை பொழிந்தது எனக் கூறுபவர்கள் என்னை விசுவா சித்து நட்சத்திரங்களை (கோள்களை) நிராகரித்தவராவார். இன் னின்ன நட்சத்திரத்தின் மூலமாக எங்களுக்கு மழைபொழிந்தது என்று கூறுவோர் என்னை நிராகரித்து நட்சத்திரங்களை நம்பிய வராவர்”(37).**

*ஆகவே மனிதர்கள் மீது கிரகங்களின் தாக்கம் குறித்தும் அவை வாழ்வாதாரத்தில் தலையீடு செய்கிறது எனவும் நம்புபவர் அல்லாஹ்வை நிராகரித்தவராவார், யார் அல்லாஹ்வை (இறை வனை) நம்பி மனித விதியில் கிரகங்களின் தலையீட்டை நம்ப வில்லையோ அவனே உண்மை விசுவாசி ஆவான் என்கிறது மேற்படி நபி வாக்கு.*

*அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறி னார்கள் :* **“(ஷிர்க்கான வார்த்தைகளைக் கூறி) மந்திரித்தல், தாயத்துகள் கட்டுதல் (கணவன்மார்களை தங்களின்பால் ஈர்ப்ப தற்காக பெண்கள் செய்யும்) திவலா (முறை) ஆகியன இணைவைப் பாகும்”.** (38)

*இஸ்லாத்தின் இந்த வழிகாட்டால் காரணமாக ஒரு முஸ்லிம் பஞ்சபூதங்கள் (நேசத்துக்குரியவரை ஈர்ப்பதறக்காக அல்லாது கிரகங்களினது ஆதரவைப் பெருவதற்காக தகடுகளில் எழுதப் பட்டு செய்யப்படுகின்ற) தகடுகள் தாயத்துக்கள் மற்றும் அவற் றுடன் தொடர்புடையவை தாக்கம் விளைவிக்கும் எனும் மூட நம்பிக்கையை நம்பமாட்டார்.*

மாறாக, தாயத்து தகடுகள் கணிதவியல் (வடிவவியல்) வடிவங்கள், விசை ஊசல்கள் இவையல்லாத ஐம்பூதங்களுடன் தொடர்புடைய விஷயங்களைச் செய்வது குறித்தும், இந்த தாயத்துக்கள் நன்மைகளைப் பெற்றுத் தருகிறது அல்லது தீங்குகளைத் தடுக்கிறது என்று நம்புவதும் இணைவைத்தலினதும் இறைநிராகரிப்பினதும் அடிப்படை (மூலம்) என்று இஸ்லாம் கூறுகிறது.

ஒரு மனிதர் தங்க நிறத்திலான ஒரு வலையளை கையில் அணிந்திருப்பதைக் கண்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'இது என்ன?' என்று வினவினார்கள் அதற்கு அந்த மனிதர் 'இது ஒரு பலவீனமான நோய்க்கானது.' எனக் கூறினார், அதற்கு நபியவர்கள் இது உமது பலவீனத்தையே அதிகரிக்கும். அதனால் இதனை கழற்றி எறிந்துவிடும். நீர் இதை அணிந்த நிலையில் இறந்து விட்டால், அதன் பொறுப்பில் விடப்படுவீர் என்று கூறினார்கள்.(39)

'வேறு ஒரு அறிவிப்பில் 'நீர் இதை அணிந்த நிலையில் இறந்து விட்டால் நீவிர் ஒருபோதும் வெற்றியடைய மாட்டீர்' என இடம்பெற்றுள்ளது.(40)

'நன்மையை பெற்றுக் கொள்ளவும் தீங்குகளை தடுக்கவும் தாயத்து தகடுகளை செய்வது மிகப்பெரும் இணைவைத்தலாகும் என ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.(41)

இதே கோட்பாட்டைத்தான் பகவத் கீதையும் (Bhagavad Gītā) குறிப்பிட்டுள்ளது "கடவுள்களை வணங்குபவர்கள் தெய்வங்களைப் அடைந்து கொள்கிறார்கள், முன்னோர்களை வழிபடுபவர்கள் முன்னோர்களை அடைந்து கொள்வார்கள். ஷைத்தானை வழிபடுபவர்கள் ஷைத்தானைப் அடைந்து கொள்கிறார்கள். என்னை வணங்குபவர்கள் என்னைக் கண்டுகொள்கிறார்கள்".(42)

அல்லாஹ்வை அன்றி இந்த தாயத்து தகடுகளில் யார் பற்று

கொள்கிறாறோ அவர் அல்லாஹ்வையன்றி வேறுவற்றை வணங்கியவர் ஆவார்.

மேலும் வேதங்களின் கூற்றுப்படி இவ்வாறான கொள்கையுடையோரின் இறுதி முடிவு நிரந்தரமாக நரகமே என யஜூர் வேதம் கூறுகிறது : 'கடவுள் அல்லாத பிறவற்றை வணங்குபவன், இருளில் மூழ்கி, நெருப்பின் வேதனையை என்றென்றும் அனுபவிப்பான்.'(43)

அல்லாஹ் தனது வேதத்தில்: **"அனைத்து விடயங்களும் அல்லாஹ்விற்கே உரியது"** என்று குறிப்பிடுகிறான். (ரஃத் : 31).

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் : **"நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள், நீ உதவி தேடினால் அல்லாஹ்விடமே உதவி தேடு"** என்று கூறினார்கள்.(44)

இதனால் ஒரு முஸ்லிம் ஐம்பூதங்கள் மற்றும் நட்சத்திரங்கள் (கிரகங்கள்) மந்திரங்கள் எழுதப்பட்ட தகடுகள் தாயத்துக்களின் தாக்கம் குறித்த மூட நம்பிக்கையை ஒரு போதும் ஏற்க மாட்டான். மாறாக எப்போதும் அவன் இவைகள் யாவும் உருவ வழிபாட்டினதும், வழிகேட்டினதும், ஏமாற்று மற்றும் மூட நம்பிக்கையினதும் அடிப்படை (மூலம்) என நம்புகிறான்.

## 10. இந்து சமூகத்தின் வடிவம் (அமைப்பு) யாது?

இந்து சமூகம் அதன் மறுபிறவித்துவம், கன்ம கோட்பாடு ஆகியவற்றை நம்புவதனை கருத்திற்கொண்டு சந்தேகமில்லாமல் அது ஒரு சாதி (வர்க்க) சமூதாயமாகும்.

காரணம் அந்த சமூகத்தில் உள்ள மோசமான ஒருவர் மறுபிறவியில் அதை விட ஒரு தாழ்ந்த நிலையில் பிறப்பார்.

அதன்படி இயற்கையில் சோதிக்கப்பட்டவன் என்றும் அச்சோதனையால் சிரமப்படத் தகுதியானவன் என்பதே அர்த்தமாகும்.

இக்கருத்தியலானது ஏழைகளையும் பாதிக்கப்பட்டவர்களை

யும் பொருட்படுத்தாது அவர்களுக்கெதிராக முழுமையான அடக்குமுறையை பிரயோகிப்பதற்கான உறுதியான அடிப்ப டையாகும். அது மட்டுமல்லாது அடக்குமுறையை மிகச்சாதா ரணமாக பிரயோகிப்பதற்கான ஒரு அங்கீகாரமுமாகும்.

இந்து மதத்தில் மனிதர்கள் நான்கு சாதியினராக பிரிக்கப்பட் டுள்ளனர் அவர்களுள்

1. பிராமணர்கள் : இவர்கள் மத போதகர்கள் மற்றும் மத ஆசாரங்களை செய்வோர்.

2. சத்திரியர் : இவர்கள் போர் செய்வோர், அரசர்கள்.

3. வைஷியர் : விவசாயிகள் மற்றும் வியாபாரிகள்.

4. சூத்திரர் : சேவகர்கள்.

அவர்களிடத்தில் மிகவும் ஒதுக்கப்பட்ட தாழ்ந்த பிரிவினராக சூத்திரர்கள் கருதப்படுகிறார்கள். இவர்கள் சுத்தம் செய்தல் சேவ கம் செய்தல் போன்ற - அவர்கள் பார்வையில் அசிங்கமான - வேளைகளை செய்வோர் ஆவர்.

ஒவ்வொரு மனிதனுக்குமுரிய பிரிவும் (வர்ணமும்) அவர்க ளுக்கே உரிய வேலையையும், ஆடையையும், உணவையும் வரையறுக்கிறது.

திருமணம் ஒரே பிரிவினருக்குள்ளேதான் நடக்க வேண்டும்.

இந்து மதத்தில் மனிதன் மரணிக்கும் வரையில் அவன் பிறந்த பிரிவையே சார்ந்திருக்க வேண்டும் என்பது முடிவாகும்.

நான் குறிப்பிட்டது போன்று இச்சாதிக் கோட்பாடானது மறு பிறவித்துவம் மற்றும் கன்ம சிந்தனை ஆகியவற்றின் விளைவா கத் தோன்றியதாகும். சூத்திரர்கள் முற்பிறவியில் தீயவர்களாக இருந்ததினால் இச்சாதியில் அவர்கள் பிறந்துள்ளார்கள் அத னால் தீண்டத் தகாதவர்களாக உள்ளனர்.

இந்த திரிபுபடுத்தப்பட்ட தவறான கோட்பாடானது முழு வாழ்க்கையையும் சிதைக்கிறது. மேலும் இக்கோட்பாட்டின்

அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு (தீண்டத்தாகா தோரான இவர்களுக்கு) உதவுவது கர்மாவுக்கு ஒரு வகையில் அவமரியாதை செய்வதாக நாம் கருதலாம்.

இது ஒரு வகையில் பிற்போக்கு வாதம், அநீதி, வர்க்கம் வேறு பாடு மற்றும் கொடுங்கோன்மை ஆகியவற்றை அங்கீகரிக்கும் ஏற்பாடாகும்.

மறுபிறவித் தத்துவம், கர்ம தத்துவமே இச்சாதி குல வேறு பாட்டை கையாளாகாத ஏழை, நோயாளி மற்றும் பலவீனமான மக்களுக்கு தவறான இக்கொள்கையை உருவாக்கியுள்ளன.

இதனால் இந்து மதமானது இவர்களுக்கு உதவி வழங்குவதற் கான வாய்ப்பைக் கைவிட்டுள்ளது.

இந்து மதத்தின் இக்கண்ணோட்டமானது மனித இயல்பூக்கத் திற்கு முரணான ஒரு கண்ணோட்டமாகும். மனிதனின் இயற்கை உணர்வானது பலயீனமானவர்கள் ஏழைகள் நோயாளிகளின் மீது அனுதாபப்படுவதற்கும் அவரகளுக்கு தேவையான சேவை களை வழங்கவும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் மற்றும் துயரங்களை கலைவதற்கும் முயற்சி செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வையும் தூண்டுகிறது.

வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மறுமை நம்பிக்கை தொடர் பான விடயத்தை விட்டு இந்துக்கள் எப்படித் தூரப்போனார் கள் என்பது எனக்குப் புரியவில்லை. இம்மறுமை நம்பிக்கை யானது மனித வாழ்வை சீர்படுத்தி உலகம் பற்றிய அவனது கண் ணோட்டத்தையும் சீர்படுத்துகிறது. அதாவது மறுமையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் விசாரிக்கப்படுதல், அனைத்து மனிதர்களும் குற்றமற்ற புனிதர்களாக பிறக்கிறார்கள் என்ற நம் பிக்கையும் துன்பப்படுவோருக்கு உதவுவது போன்ற நற்காரிய மும் இறை சன்னிதானத்தில் மனிதனின் அந்தஸ்தை மறுமையில் உயர்த்தும் என்ற இவ்விரு கண்ணோட்டங்களில் மனிதனுக்கு பொருத்தமானதாகவும் இயற்கை உணர்வுக்கு நெருக்கமாகவும்

எந்தக் கண்ணோட்டம் உள்ளது?

கர்ம தத்துவமா? அல்லது வேதக் கோட்பாடா?

ரிக் வேதத்தில் : யா அல்லாஹ் (இறைவா) நல்ல மனிதருக்கு நீ மிகச்சிறந்த வெகுமதியை அளிக்கிறாய் ‘ என்று வந்துள்ளது. (45)

ரிக் வேதம் கூறுகிறது: ‘ஆன்மாக்கள் விரும்புவதெல்லாம் கிடைக்கப் பெருகின்ற எல்லாவிதமான இன்பங்களும், மகிழ்ச்சி யும் குவிந்திருக்கும்,(நிரம்பிக்கிடக்கும்) அந்த இடத்தில் என்னை நிரந்தரமானவனாய் ஆக்குவாயாக’ (46)

இதுவே வேதங்கூறும் நம்பிக்கை

அங்கே -மறுமையில்- சுவர்க்கம் உண்டு அதில் நல்லோர் இன் பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

மேலும் வேதங்களின் படி குற்றம்புரிந்தோருக்கான தண்டனை தயார்படுத்தப்பட்டுள்ளது.

ரிக் வேதம் குற்றம் புரிந்தோருக்கான வேதனை வழங்கப்படும் இடம் குறித்து, அது மிகவும் ஆழமானது அதன் அடிப்பகுதி யில் குற்றம் புரிந்தோர் இருப்பர் என்று கூறுகிறது. (47)

மறுபிறப்பு மற்றும் தொடர் பிறப்பு சிந்தனையில் வேதங்கள் குறிப்பிடும் இவ்விடங்கள் எங்கு காணப்படுகிறது?

கர்ம தத்துவத்தில் குற்றம் புரிந்தோருக்கான மிக ஆழமான இடம் குறித்து எங்குள்ளது?

அவ்வாறாயின் கர்ம மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவை அனைத்தும் மனிதக் கண்டுபிடிப்பாகும். மேலும் வேதங்களின் அடிப்படைகளுக்கு முரணானதும் ஆகும்.

மறுமை நாள், சுவர்க்கம் நரகம் ஆகியவற்றை விசுவாசிப்பதும், மனிதர்கள் அனைவரும் குற்றமற்ற புனிதர்களாக பிறக்கிறார்கள் என்று நம்புவதும், தீர்க்கதரிசிகள் அனைவரினதும் கொள்கை யாக இருந்தது.

*இக்கொள்கைதான் மனித இயல்பூக்கத்துடன் ஒத்துபோகிற, அநியாயத்தையும் பிற்போக்குவாதத்தையும் சாதிமுறையையும் கொடுங்கோன்மையையும் எதிர்க்கும் கொள்கையாக உள்ளது.*

*தீர்க்கதரிசிகளின் மார்க்கமானது மனித மேம்பாட்டுக்காக உழைப்பதுடன், மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்ப தின் பால் அழைப்பு விடுக்கிறது.*

*இஸ்லாத்தில் மனிதனின் மதிப்பு அவனது சாதியிலோ, அவனது தோற்றத்திலோ, உடல்நிலையிலோ, சடரீதியாக அவன் பெற் றுள்ள வசதியின் தரத்திலோ கிடையாது. மாறாக மனிதனின் மதிப்பு அவன் செய்யும் நற்செயல்களின் தரத்தில்தான் உள்ளது.*

*இஸ்லாம் அனைவரையும் மேம்படுத்தவும், பரம்பரை மற்றும் குலப்பெருமையை புறக்கணிக்குமாறும் அழைப்பு விடுக்கிறது.*

*அது மாத்திரமின்றி தீண்டத்தகாதவர்கள் என்ற சிந்தனையையும் பொதுவாக (வர்க்க)சாதிச்சிந்தனையும் கடுமையாக நிராகரிக்கி றது.*

*அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :* **“மனிதர் களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண் ஒரு பெண்ணிலிருந்து படைத்து, நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக உங் களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங் களில் மிக பயபக்தியுடையோரே நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியத்திற்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்த வன், நுட்பமானவன்”.** *(ஸூறதுல் ஹுஜுராத் வசனம் 13) மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :* **“எவருடைய அமல் குறைவாக உள்ளதோ அவரை அவரின் பரம்பரை உயர் நிலையை அடைந்தோரின் தரத்திற்கு கொண்டு போய் சேர்க் காது”**[(48)]

*மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் :* **“மக்கள் தங்கள் செயல்களுடன் என்னிடம் வரவில்லை, நீங்கள் உங்கள் பரம்பரையையா என்னிடம் கொண்டு வருகிறீர்கள்!”.**[(49)]

*ஆகவே இஸ்லாத்தில் பரம்பரைக்கு எவ்விதப் பெறுமானமோ கனதியோ கிடையாது.*

*மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :* **மக்களே! உங்கள் இறைவன் ஒருவனே! உங்களுடைய தந்தை ஒருவரே!. அரபியருக்கு அரபியல்லாதவரை விடவும், ஓர் அரபியல்லாதவருக்கு அரபியரை விடவும், ஒரு கருப்பருக்கு சிவப்பரை விடவும், ஒரு சிவப்பருக்கு ஒரு கருப்பரை விடவும் இறைபக்தியை அடிப்படையிலன்றி எந்த எந்தச் சிறப்பும் இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!".***(50).* *மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :* **"உங்களில் உள்ள பலயீனமானவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள் நீங்கள் உதவி செய்யப்படுவதும் வாழ்வாதாரம் வழங்கப்படுவதும் உங்களில் உள்ள பலவீனமானவர்கள் மூலமே!".** [51]

*உங்களில் உள்ள பலயீனமானவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள் நீங்கள் உதவி செய்யப்படுவதும் வாழ்வாதாரம் வழங்கப்படுவதும் உங்களில் உள்ள பலவீனமானவர்கள் மூலமே! என்ற ஹதீஸின் இந்த கண்ணோட்டத்தையும், இந்துக்கள் பலவீனமானவர்களை பார்க்கும் கண்ணோட்டத்தையும் அவதானித்துப் பாருங்கள்!*

*மனித ஆன்மாவானது மனிதர்களில் ஏழைகள், நலிந்தவர்கள், எளியவர்கள் மற்றும் குறை அறிவுடையோர் ஆகியோர் மீது பரிவுடனும் பாசத்துடனும் நடந்து கொள்ள வேண்டிய முறையில் தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை உள்ளுணர்வை மதிக்காது இன்றைய இந்து மதம் பிடிவாதமாக இருப்பது ஒரு யதார்த்தமான பிரச்சினையே!*

## 11. உண்மையில் இந்துக்கள் மாடுகளை (பசுக்களை) புனிதமானதாக கருதுகிறார்களா?

*பசு அன்பளிப்பின் ஆதாரம் என்ற அடிப்படையில் பசுவிற்கு தனியான சிறப்பும் புனிதத்துவமும் இந்து மதத்தில் உண்டு.*

ஆனால் இன்னொரு பிரச்சினை உள்ளது. அதாவது சமகால இந்துக் கருத்தின் கோட்பாட்டின் படி கடவுள் பசுக்கள் உட்பட ஏனைய உயிரினங்களில் சங்கமமாகி உள்ளார் என்பதாகும். இதுவே அத்வைதத் தத்துவம் என அறியப்பட்டுள்ளது. ஆகவே இந்து மதம் பசுவை புனிதப்படுத்துவதற்கான பல்வேறு (முறை களை) வடிவங்களைக் கொண்டுள்ளது.

இந்தியாவின் பல பகுதிகளிலும் தொடராக பசுக்களுக்காக விசேட திரு விழாக்கள் (பூஜைகள்) நடாத்தப்படுகிறது.(52)

மறுபுறம், வேதங்கள் யாவும் எல்லா விடயங்களையும் விடவும் அனைத்து சிருஷ்டிகளை விடவும் இறைவனின் தூய்மையையும் மகிமையையும் முன்வைத்துள்ளன.

''நானே அல்லாஹ் (இறைவன்) அனைத்து படைப்பினங்கள் படைக்கப்பட முன்னரே நான் உள்ளேன். முழு உலகினதும் சொந்தக்காரனும், நானே!. அனைத்து அருட்கொடைகளையும் தெரிவு செய்தவனும், உண்மையான அருள்களை வழங்குபவ னும் நானே! எனவே அனைத்து ஆன்மாக்களும் என்னையே உத விக்காகவும் மற்றும் தேவைக்காகவும் அழைக்க வேண்டும்".(53)

இது அத்வைத சிந்தனையை மறுக்கும் சூரியனைப் போன்ற மிகத் தெளிவான ஒரு வேதவசனமாகும். ஆக அல்லாஹ் இவ் வுலகின் படைப்பாளன், அவன் உலகப் படைப்புக்கள் அனைத்தை விட்டும் தனித்தவன் என்று குறிப்பிடுகிறது.

மேலும் இந்த வசனத்தில் இச்சட உலகின் பொருட்களை புனி தப்படுத்துவதை அல்லது சிருஷ்டிகளிடத்தில் உதவி கோரு வதை எச்சரிக்கும் விடயமும் காணப்படுகிறது. ஆகவே பசுக்க ளையும் அனைத்து பொருட்களையும் படைத்தவனாகிய அல் லாஹ்வைத் (இறைவனைத்) தவிர வேறு எவரிடத்திலும் உதவி கோரி செல்லக்கூடாது.

அல்லாஹ்வுக்கு (இறைவனுக்கு) மாத்திரம் கட்டுப்படுவதே இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையாகும்.

*இஸ்லாத்தைப் பொருத்தவரை எம்மைச் சூழ உள்ளவற்றில் பசுக் கள் உட்பட அனைத்து சடப்பொருட்களும் எங்களுக்காக வசப் படுத்தித் தரப்பட்டவை எனக் கூறுகிறது. அவற்றை அல்லாஹ் அவனின் கருணையின் மூலம் படைத்துள்ளான். இது பற்றி அல் லாஹ் (இறைவன்) அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான் :* **"மேலும் அவன் தன்னிடமிருந்து, வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்கு வசப்படுத்தித் கொடுத்தான். நிச்சய மாக இதில் சிந்திக்கும் சமூகத்திற்குப் பல அத்தாட்சிகள் இருக் கின்றன".** *(ஸூறா அல் ஜாஸியா 13).*

*இதுதான் இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடாகும். மேலும் மனிதனில் உள்ளுனர்வும் இதுவே!*

*ஒரு இந்துவைப் பொருத்தவரை வேதங் கூறும் ஏகத்துவம் மற் றும் அல்லாஹ்விற்கு மாத்திரம் கட்டுப்படுதல் போன்றவை களை ஏற்று நடப்பதற்கு இஸ்லாத்தைத் தவிர வேறு வழி கிடை யாது. இஸ்லாம் வேதத்தில் காணப்படுகின்ற அனைத்து உண் மைகளையும் உரைக்கும் உரைகல்லாகும். அதுதான் மனிதத் தவறுகளை திருத்துகிறது. இறைவெளிப்பாட்டில் நடந்தேரிய அனைத்து திரிபுகளையும் நிராகரிக்கிறது.*

## 12. என்றாலும் இந்து மதத்தில், சுயகௌரவத்துடன் வாழ் தல் மற்றும் பாவத்தில் இருந்து விலகி இருக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்ற நிறைய விடயங்கள் காணப்படு கின்றன. இது ஒரு தனித்துவமான அம்சம் அல்லவா?

*ஏலவே நான் இந்து மதத்தில் உள்ள அதி தீவிர போக்கு குறித்து சுட்டிக் காட்டினேன். என்றாலும் இங்கே நான் குறிப்பிட விரும் புவது என்னவென்றால் பாவத்தினால் ஏற்படும் காயமும் மனச் சாட்சி உருத்துவதும் இறைபொருப்புச் சாட்டல்களுடன் இணைந்த இயற்கையான விடயங்களாகும்.*

*நாம் இறைவனால் கடமைகளை செய்வதற்கு பொறுப்புச் சாட் டப்பட்டோர் என்ற வகையில் எந்தவொரு குற்றத்தை செய்த*

வேளையிலும் மனச்சாட்சி உருத்துவதை நாம் நிதர்சனமாக உணர்கிறோம்.

இதுதான் இயற்கை உணர்வாகும். இது குறித்து அல்லாஹ் அல் குர்ஆனில் "**இதுவே அல்லாஹ் மனிதனைப் படைத்திருக்கும் இயற்கை மார்க்கமாகும்**" எனக் கூறுகின்றான். (ஸூறதுர் ரூம் வசனம் : 30)

இந்த உள்ளுணர்வின் முன், ஒரு மனிதன் நல்ல மற்றும் சத்தியத் தின் பெருமானங்களை மீறுவதன் மூலம் மனச்சாட்சியின் ஒரு வகை காயத்தை, வலியை உணர்கிறான்.

இறுதித் தூதாகிய இஸ்லாத்தில் நல்லவற்றினதும் சத்தியத்தின தும் பெருமானங்களை மீறி நடப்போருக்கு பாவமன்னிப்பு மற் றும் தவ்பா (பாவமீட்சி) எனும் வழியை அல்லாஹ் ஏற்படுத்தி வழிகாட்டுகிறான்.மேலும் அநியாயத்தினால் பாதிக்கப்பட்ட வருக்கு அநியாயம் செய்தவர் அவரிடம் மன்னிப்புக்கோரி அவ னின் மன்னிப்பைப் பெற்ற பின்னரே அல்லாஹ் அவனின் பாவங் களை மன்னிக்கிறான்.

ஆனால் பாவங்களை எதிர்த்துப் போராடுவதற்கான வழிகளாக, ஆன்மாவை அடக்குவதற்கு அதன் மீது அதிகப்படியான அழுத் தத்தைப் பிரயோகித்து ஆன்மாவை வருத்துதல், அத்துடன் மனி தனை முழுமையாக அமைதிப் படுத்தவல்ல செயற்பாடுகள் மற் றும் ஆழ்ந்த சிந்தனைகளில் ஈடுபடுதல் தியானச் சடங்குகளை செய்தல் போன்றவற்றை நாம் இந்து மதத்தில் காண்கிறோம்.

## 13. இந்து மதத்தில் காணப்படுகின்ற உடல் அசைவின்றி மௌனமாக இருப்பது, தியான அமர்வுகள் யாவும் நல்ல விடயங்களல்லவா?

இந்து மதத்தில் தியானம் என்பது பிற்பட்ட காலத்தில் 'பிரான' தத்துவத்தில் தோன்றிய யோகா அமர்வுகளில் ஏற்படுகின்ற விட யங்களே தவிர வோறொன்றும் கிடையாது. அதாவது இந்நிலை களில் இறைவனின் படைப்பின் நுட்பம் குறித்தோ அல்லது

இப்பிரபஞ்ச படைப்பின் அதிசயம் குறித்தோ அல்லது அவனின் அருள்கள் குறித்தோ சிந்திப்பது கிடையாது.

அவர்களிடம் தியானம் என்பது ஒரு வகை முழுமையான உடல் அசைவின்றி இருத்தல், எவ்வித சிந்தனையும் மனதில் வராது மனதை வெறுமையாக்குதலாகும்.

உடல் அசைவின்றி இருப்பது மரணத்தைப்போன்றது அதில் சிந்திப்பதை விட்டு பகுத்தறிவை பூட்டிவைப்பதாகும்.

இப்புதுமை நிறைந்த அசைவின்றி தியானிக்கும் நிலைகள் யாவும் வேத காலத்தின் பின்னரே தோன்றின. இது அவர்களின் சிந்தனையில் தாக்கம் செலுத்தியதால் அவர்களிடம் மாயைகளும் வெறும் கற்பனைகளும் வரலாயின. அதனைத் தொடர்ந்து ஷைத்தான் அவர்களின் பகுத்தறிவில் விளையாடிவிட்டான்.

அவர்களில் சிலர் தாம் ஞானம் பெற்றதாக நினைக்கிறார்கள். அசைவின்றி மௌனமாக இருத்தல், உணவு உண்ணாமை போன்றவற்றின் விளைவாக மூளை அயனிகளில் ஏற்படும் கோளாரினால் நிகழும் (மாயத்தோற்றம்) மனமருட்சி என்பதை நான் முன்பு விளக்கினேன்.[54]

நீண்ட ஒருநிலை தியானம் மற்றும் கடுமையான பசி (உண்ணா விரதம்) போன்றன (மனமருட்சி) மாயத்தோற்றம் ஏற்பட வழி வகுக்கும் உலகின் நிலையான தியானப் பயிற்சி முறை கோட்பாடுகளை உருவாக்கியோரில் மிகவும் பிரபலமான ஒருவரான மிகாவோ உசுயி (Mikao Usui) இதனை ஒப்புக் கொள்கிறார். அவர் இது குறித்துக் குறிப்பிடும் போது

நீண்ட நேரம் பசி மற்றும் உணவுத் தவிர்ப்புக்கு பிறகு அவர் சுய நினைவை இழந்து மாயத்தோற்றம் அடையத் தொடங்குகிறார் என அவர் குறிப்பிடுகிறார். இந்நேரத்தில் அவருக்கு எண்ணங்கள் வர ஆரம்பிக்கிறது.[55]

மேலும் இவ்வாறான நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் எண்ணங்களுக்கும் மனமருட்சியின் விளைவாக ஏற்படும்

*நோயியல் கற்பனைகள் (மாயைகள்) இடையில் வித்தியாசம் ஏதுமில்லை. அவைகள் ஒரே விடயம்தான் என உள நல அறிஞ ரான டொனோவன் ரெக்லிப் அவர்கள் இது குறித்த அவரது தனியான ஆய்வில் உறுதிப்படுத்தியுள்ளார்.*[56]

*மேற்கூறியவற்றைத் தவிர, பெரும்பாலான யோகாசனங்கள் சுகா தார ரீதியில் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகும். மேலும் அவற்றை நீண்ட நேரம் செய்வதை வழக்கமாக்கிக் கொள்வது குறித்த நபரை நிலைகுழைவு, தடுமாற்றம், கால இடம் குறித்த உணர்விழத்தல் போன்றவற்றிற்கு இட்டுச் செல்வதுடன் நினை வாற்றலை பலவீனப்படுத்தி ஆல்சைமர்* (Alzheimer disease) *நோயை துரிதப்படுத்துகிறது.*[57]

*இந்துமதம் இவ்வாறான நடவடிக்கைகளால் வேதங்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளை விட்டும் வெகுதூரம் சென்று விட்டது!*

*இஸ்லாம் அல்லாஹ்வின் (இறைவனின்) படைப்புகள் குறித்து சிந்திக்கவும், கூர்ந்து அவதானிக்கவும், உள்ளார்ந்து பார்க்கவும் அழைப்பு விடுக்கிறது. இந்த சிந்தனையும், அவதானமும் ஒரு வரை அல்லாஹ்வுக்காக செயல்படவும், கட்டுப்பட்டு நடக்க வும், நன்றி செலுத்தவும் வாழ்வில் விடாமுயற்சியுடன் இருக்கவும் வழிவகுக்கும். வெறும் தியானமும், பகுத்தறிவை பூட்டிவைத்து விட்டு அதைத் தொடர்ந்து இயங்காது தியான நிலையில் இருப் பது என்பது இதில் கிடையாது.*

*ஆகவே யதார்த்தமாக சிந்திப்பது அல்லாஹ்வுக்கு (இறைவ னுக்கு) கீழ்படிந்து முழுமையாக அவனிடம் திரும்பிச் செல்ல வழிவகுக்கிறது.* **“அவர்கள் நின்ற நிலையிலும், அமர்ந்தவர்களாக வும், தங்கள் விலாப்புறங்களில் சாய்ந்தவர்களாகவும் அல் லாஹ்வை நினைவு கூறுவார்கள். மேலும் வானங்கள் மற்றும் பூமி யின் படைப்புப் பற்றிச் சிந்தித்து ‘எங்கள் இரட்சகனே! நீ இவற்றை வீணாகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன். ஆகவே நீ**

**எங்களை நரக வேதனையிலிருந்து பாதுகாப்பாயாக! என்று பிரார்த்திப்பார்கள்". (ஸூறது ஆல இம்ரான் 191)**

இவ்வாறு சிந்திப்பதைதான் இஸ்லாம் எடுத்தியம்புகிறது. இதுவே மனிதனின் இயற்கை உணர்வின் இயல்புடன் ஒத்துப் போகிறது மட்டுமின்றி அவனை சூழ உள்ள அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தவும் அவற்றைப் பற்றி அவதானிக்கவும் துணைசெய்கிறது.

இன்றைய இந்து மதத்தில் முழு யோக ஆசனங்களைப் பொறுத்தவரை, அவை பிசாசுகளின் (ஷைத்தானின்) ஓய்வு பெரும் இடங்களாகும் என்று குறிப்பிட முடியும். காரணம் அவ்வாறு (ஒரே நிலைத்தியானத்தில் இருக்கும் வேளை) அமைதியான தியான அமர்வுகளின் போது ஷைத்தான்கள் (பேய்கள்) அவனுக்கு சில உதவிகளை, தரிசனங்களை (கனவுகளை) மற்றும் வெளிப்பாடுகளை அளிக்கிறார்கள். அவ்வேளைதான். பல தடவைகள் பிறத்தல் மற்றும் ஆன்மாக்களின் மறுபிறப்பு பற்றிய எண்ணங்கள், மற்றும் அத்வைதம் பற்றிய எண்ணங்கள், சிலைகளில் கடவுள் அவதாரம் போன்றன பிறக்கின்றன. இதனை துறவிகள் தனது நேசர்களுக்கு இவ்வெண்ணங்களை கற்றுக் கொடுக்கின்றனர். இதனால் அவர்களும் வழிகெட்டு மற்றவர்களையும் வழி கெடுத்தி விடுகின்றனர்.

## 14. தற்கால இந்து சமயத்தில் காணப்படுவது போல் இடிபாடுகளில் (சிதைந்த தனியான இடம்) தங்கியிருப்பதில் என்ன (குறை) இழிவு இருக்கிறது?!

இந்து மதம் மனித இயல்புணர்ச்சிக்கும் (உள்ளுணர்வு), காமத்திற்கும் எதிராக, இஸ்லாமிய மார்க்கத்தில் உள்ளது போல் அதனை நெறிப்படுத்தும் நோக்கிலல்லாது உடலை வருத்தி அவற்றை முற்றாக நீக்க வேண்டிப் போராடுகிறது. இந்த வகையில் உலகைத் துறந்து துறவரத்தை நோக்கி மனிதனை இழுத்துச் செல்கிறது.

அதேசமயம் உடலை மறப்பதிலேயே உள்ளுணர்வை மறப்பது உள்ளது என இந்து மதம் கருதுகிறது.

இதனால் மோட்சத்தை விரும்பும் இந்து, அங்கு தனது உடலை அழுகச் செய்ய இடிபாடுகளுக்குச் சென்று, அவர் இறக்கும் வரை பிச்சைக்காரனாக (இரந்து வாழ்பவனாக) தனது வாழ் நாள் முழுவதையும் கழிக்கிறார்.

இது தனி மனிதன், குடும்பம் மற்றும் சமூகத்தை சிதைத்து அழிக் கவல்ல பேரழிவைத் தரும் ஒரு கோளாறாகும்.

உள்ளுணர்வும், காமமும் ஒரு குடும்பத்தை உருவாக்கி, அதனூ டாக ஒரு சமூகத்தை அமைத்து, அதற்கு பாடுபட்டு, கடினமாக உழைத்து நல்லதொரு வாழ்வை உருவாக்குவதற்கான ஒரு தெய் வீக வரமாகும்.

மனித உள்ளுணர்வு அதனை நெறிப்படுத்தி அதற்குரிய இயல் பான முறையில் கையால்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது மாற்றமாக உடலை வருத்தி எறிப்பதற்காக அல்ல.

எமது இருப்பின் நோக்கம் ஒரு நேர உணவுக்காக பிச்சையெ டுத்து பின்னர் நாம் இறக்கும் வரை எஞ்சியுள்ள நாட்களை இடி பாடுகளில் கழிப்பது என்று கூறியவர் யார்?

காவி துணி உடுத்துவதற்காகவே இவ்வுலகிற்கு வந்தோம் என் றும், மரணம் வரும் வரை இவ்வுலகை விட்டு ஒதுங்கி இருப் போம் என்றும் சொன்னது யார்?

இவ்வுலக இருப்பின் நோக்கம் மற்றும் பூமியை வளப்படுத்து வது, வாழ்க்கையைச் சீர்செய்வது போன்றவற்றைப் பற்றி நம்மை விட எல்லாவற்றிலும் மிகக் குறைந்த நிலையுள்ள பூச்சிகள் விளங்கி வைத்துள்ளன! தேனீக் கூட்டங்களை அவதானியுங்கள்! அவைகள் தமக்கும் தமது சந்ததியினதினதும் நன்மைக்காகவும், உழைத்து ஒழுங்காக செயல்படுவதை நீங்கள் காண்கிறீர்கள். மேலும் குடலில் காணப்படுகின்ற நுண்ணியமான பக்டீரியாக்

*கள் அவைகள் பிறருக்கு பயனளித்து தானும் பயனடையும் விதத்தில் கட்டமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.*

*ஒட்டுமொத்த வாழ்வும் பிரபஞ்ச விதிகள் மற்றும் (இயங்குத லின்) செயல்படுதலின் அடிப்படையில் சென்று கொண்டிருக்கி றது.*

*இந்த அடிப்படையில் பார்க்கும் போது தற்கால இந்து மதமா னது சோம்பேரித்தனம், தயக்கம், (ஒதுங்கி இருத்தல்) பிச்சை யெடுத்தல் (இரத்தல்) போன்றவற்றை தூண்டுகிறது. இதனால் (பிச்சையெடுத்தல்) இரத்தல் இந்து மதத்தில் ஒரு வாழ்க்கை முறையாக மாறிவிட்டது எனலாம்.*

*இங்கு எழும் கேள்வி என்னவெனில், ஓர் இந்து, மக்களை விட்டு தூர ஒதுங்கி, மலை உச்சிகளிலும், மனித சஞ்சாரமற்ற இடங்க ளில் வசிப்பதன் அர்த்தம் என்ன? அதனால் மக்களுக்கு கிடைக் கும் நன்மை என்ன?*

*சத்திய மார்க்கம், சரியான வாழ்க்கை முறை என்பது சிரமப் பட்டு உழைத்தல், பிறர் நலம் நாடல், மக்களுடன் கலந்து வாழ் தல், சமூக சீர்திருத்தப் பணி செய்தல் அவர்களினால் ஏற்படும் சிரமங்களை சகித்துக் கொள்ளல் போன்றவைகளாகும். இப் பொறுப்புக்களிலிருந்து தப்பிக் கொள்வதற்காக பள்ளத்தாக்கு களிலும், பாலைவனங்களிலும் வாழ்வதல்ல!*

**“மக்களை விட்டும் ஒதுங்கி அவர்களின் தொல்லைகளைப் பொறுத்து வாழாத முஸ்லிமைவிட மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அவர்களின் தொல்லைகளைப் பொறுத்து வாழும் முஸ்லிம், மிக வும் சிறந்தவராவார்”** *என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.*[58]

## 15. பாவங்களிலிருந்து விடுதலை பெறவும், காமத்திற் கெதிராக போராடவும் மிகவும் சிறந்த பொருத்தமான வழி என்ன?

*மனித உள்ளுணர்ச்சி மற்றும் காமம் (மனித ஆசை) ஆகியவை களை எதிர்கொள்வதன் (கட்டுப்படுத்துவதன்) அடிப்படையா னது இயற்கை உள்ளுணர்வு மற்றும் கட்டளைகளுக்கு அடி பணிதல் எனும் அடிப்படைகளை சார்ந்தது. முஸ்லிம் தனது காமத்தை (இச்சையை) நெறிப்படுத்திக் கொள்ள இறைவெளிப் பாட்டின் கட்டளையில் உள்ளவற்றை பின்பற்றி நடப்பான்.*

*இஸ்லாத்திலே நல்ல மணவாழ்க்கையும் தடை செய்யப் பட்ட வற்றை விட்டும் பார்வையை தாழ்த்திக் கொள்ளுதலும், இரகசி யத்திலும் பரகசியத்திலும் அல்லாஹ்வுக்கு பயப்படுதல் போன் றனவும் உள்ளன. அதே போல் பாவச் செயலை செய்தவனுக்கு தண்டனை உள்ளது என்ற இறை எச்சரிக்கையும் காணப்படுகி றது.*

*ஒரு மனிதனின் ஆன்மா பலவீனம் அடைந்து தவறு செய்தால் பாவமீட்சிக்கான வழியும் (இஸ்லாத்தில்) உண்டு.*

*எனினும் இந்து மதத்தில் மோட்ச நிலையை அடைந்து கொள்ள விரும்பும் ஒரு இந்து தனது குடும்பத்தையும் குழந்தை களையும் தனது தொழிலையும் விட்டு விட்டு பாதையோரங்க ளிலும், இடிபாடுகளுக்கிடையிலும் படுத்து உறங்குகிறான். தனது உணவுக்காக பிச்சை கேட்கிறான். இதே முறையில் மர ணம் வரும்வரையில் தனது உடலை வருத்திக் கொண்டிருக்கி றான். ஆன்மாவை நெறிப்படுத்துவதற்கு சீரான வழிமுறை என இதனைக் குறிப்பிட முடியுமா?*

*இன்று இந்தியாவில் (5) ஐந்து மில்லியனைத் தாண்டியிருக்கும் இந்து மதத் துறவிகள், தம்மால் பராமிக்கப்படுவோரை பொருட்படுத்தாது உள்ளனர். ஆனால் அவர்களோ பிறர் தமக்கு ஆதரவளித்து உணவளிக்க ஒருவர் தேவை என்ற நிலை யில் உள்ளனர்.*

இஸ்லாம் மனித ஆன்மாவை மிகவும் சிறப்புமிக்கதும் வலுவான தும்ான வழிமுறையினூடாக நெறிப்படுத்துகிறது.

ஒரு மனிதன் தனது பராமரிப்புக்கு கீழ் உள்ளோரின் உரிமையில் குறைவு செய்வதை இஸ்லாம் குற்றம் எனக் குறிப்பிடுகிறது. இது குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'உண வளித்து பராமரிப்போரை பொருட்படுத்தாது இருப்பது ஒரு மனிதனின் பாவத்திற்கு அதுவே போதுமானதாகும்' எனக் கூறி யுள்ளார்கள்.(59)

மேலும் நல்லகாரியங்களை செய்வதன் மூலம் ஆன்மாவை சீர் திருத்தி அதனை நெறிப்படுத்தலாம் எனவும் உலகத்தை துறக் காது இச்சையை அடக்க முடியும் எனவும் இஸ்லாம் குறிப்பி டுகிறது. ஆகவே இஸ்லாத்தில் உள்ள ஒருவர் தனது சமூகத்தில் வாழ்ந்து அதைக் கட்டியெழுப்பவும் முடியும் அதே நேரத்தில், இந்து மதத்தில் உள்ளது போல் உடலை வருத்துவதற்கு எவ்வி தத் தேவையுமின்றி அல்லாஹ்விடத்தில் மோட்சம் பெறவும் முடியும்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் **"யார் தனது இரட்சகன் முன் நிற்பதைப் அஞ்சி மனோ இச்சைகளை விட்டும் தன்னை தடுத் துக்கொண்டானோ, நிச்சயமாக சுவர்க்கம் அவரது ஒதுங்குமிடமா கும்".** (ஸூறதுன்னாஸிஆத் : 40, 41)

நீ மாளிகையொன்றில் வசிப்பவனாய் இருந்தாலும் அல் லாஹ்வை அஞ்சி நற்காரியங்களை செய்வது சுவர்க்கத்திற்கான பாதையை அமைத்துத் தரும்.

ஆக ஆன்மாவை நெறிப்படுத்துவதற்கு உடலை வருத்திக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது. அல்லாஹுதஆலா கூறுகிறான் **"எனினும், [இதுவரை] அவன் 'அகபா'வை [கண வாயை]க் கடக்கவில்லை. [நபியே!] 'அகபா' என்னவென்று நீர் அறிவீரா? [அது] ஒர் அடிமையை விடுதலை செய்வதாகும். அல் லது பசியுடைய நாளில் நெருங்கிய உறவுடைய அநாதைக்கு**

**அல்லது வறுமையில் வாடும் ஏழைக்கு உணவளிப்பதாகும். பின்னர் நம்பிக்கை கொண்டு, பொறுமையைக் கொண்டு பரஸ்பரம் உபதேசம் செய்தும், கருணையைக் கொண்டு பரஸ்பரம் உபதேசம் செய்வோரில் அவன் இருப்பதும் ஆகும். இவர்கள் வலப்புறத்தையுடையோர்".** *(ஸூறதுல் பலத் 11 - 18)*

*நீ சுவர்க்கம் செல்வதாக இருந்தால் கூட இஸ்லாத்தில் அடிமைகளை உரிமையிட வேண்டும். ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் நற்காரியங்கள் செய்ய வேண்டும் மக்களுக்கு நல்ல விடயங்களை உபதேசிக்க வேண்டும்.*

*இவைகள் மூலமே (உனக்கு மோட்சம் கிடைக்கும்) வெற்றி பெற முடியும்.*

*மனிதர்களை விட்டு ஒதுங்குவதனாலோ, உனது ஆயுளின் எஞ்சிய காலத்தை யாசகம் கேட்டு கழிப்பதனாளோ அல்ல!*

## 16. இஸ்லாம் இந்துமதத்தை நிராகரிப்பது (ஏற்றுக் கொள்ளாதது) ஏன்?

*தற்கால இந்து மதம் ஒரு மார்க்கமாகவோ அல்லது ஒரு சிந்தனைப் பிரிவாகவோ அல்லது நம்பிக்கை கோட்பாடாகவோ காணப்படவில்லை. மாறாக தத்துவங்கள் மற்றும் துறவிகளின் போதனைகள், தந்திர மந்திரங்கள் மற்றும் எண்ணற்ற சடங்குகள் யாவும் வேத வழிகாட்டல்களுடன் சேர்ந்த கலவையாக காணப்படுகின்றன.*

*எனவே இந்த அடிப்படையில் இந்து மதத்திற்கென ஒரு தனி பக்தி அமைப்போ, வரையறுக்கப்பட்ட அம்சங்களைக் கொண்ட சடங்கு முறைமையோ, நிலையான மார்க்க வழிமுறைகளோ அல்லது இந்துக்களை ஒன்றிணைக்கும் பிரதான மார்க்க கட்டமைப்போ இன்னும் கிடையாது என்றே கூற வேண்டியுள்ளது. அதனால் இன்று இவற்றுள் உங்களால் எதனையும் காண முடியாது. உண்மையில் நீர் சிதரிக்கிடக்கும் பல்லாயிரக்கணக்கான இறையியல் ரீதியான சுதந்திர மத குழுக்களின்*

*முன் ஒரங்கட்டப்பட்ட ஒருவராக இருக்கிறாய் என்பதுவே யதார்த்தமாகும்.*[60]

*இறைவன் எவ்வித சான்றையும் இறக்காத இது போன்ற குழப் பமான ஒன்றின் மூலம் இறைவனை எவ்வாறு வணங்க முடியும்?*

*கோட்பாடுகளில் குழப்பம் நிறைந்த தெளிவற்ற இவற்றை வாழக் கையின் முடிவாக எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்?*

*மேலும் தற்போதைய இந்துக்கள் கடவுளின் அவதாரமாக சிலை களை எடுப்பதை பாருங்கள்!*

*சிலைகளை அல்லாஹ்வின் அவதாரமாகவும் அவனை நெருங்கி வழிப்படுவதற்கான ஒன்றாகவும் எடுத்துக்கொண்டவர்கள் இறைநிராகரிப்பாளர்கள் என அல்லாஹ் தனது வேதத்தில் பிரஸ் தாபிக்கிறான்* **“அறிந்து கொள்ளுங்கள் ! தூய மார்க்கம் அல்லாஹ் வுக்கே உரியதாகும். எவர்கள் அவனையன்றி [வேறு] பாதுகாவ ளர்களை எடுத்துக்கொண்டார்களோ அவர்கள். அல்லாஹ்விடம் எமக்கு நெருக்கத்தை ஏற்படுத்தி வைப்பதற்காகவே நாம் இவர்களை வணங்குகிறோம் [எனக் கூறுகின்றனர்]. அவர்கள் எதில் கருத்து முரண்பாடு கொண்டிருந்தார்களோ அதில் அவர்களுக்கிடையே நிச்சயமாக அல்லாஹ் தீர்ப்பளிப்பான். நிச்சயமாக அல்லாஹ் பொய்யனையும் நிராகரிப்பவனையும் நேர்வழியில் செலுத்தமாட் டான்”.** *(ஸூறதுஸ்ஸுமர் வசனம் 3)*

*நான் ஏற்கனவே தெளிவுபடுத்தியது போன்று இந்துக்கள், இந்த சிலைகளை வழிபாட்டிற்காக எடுத்துக்கொண்டதன் மூலம் வேதங்களுக்கும் தங்களின் உள்ளார்ந்த இயல்பிற்கும் மாறு செய்துவிட்டனர். மேலும் அவர்கள் தங்கள் சிலைகளை கடவு ளின் அவதாரமாக மாற்றியதற்கான உள்ளார்ந்த ஆதாரம் எது வும் கிடையாது என்பதையும் அவர்கள் நன்கறிவார்கள்.* **“[அவர் கள் இணைவைப்பவை சிறந்தவையா? அல்லது] முதன் முறையா கப் படைத்து பின்னர் அதை மீட்டி, வானத்திலிருந்தும் பூமியிலி ருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் சிறந்தவனா? அல்லாஹ்**

**வுடன் வேறு கடவுள் உண்டா? நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்களது ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்! என நபியே நீர் கூறுவீராக!". *(ஸூறதுன் நம்ல் 64)***

*அவர்களுக்கான இவ்வாதாரங்கள் எவ்வாறு எங்குள்ளது!*

*அவர்களுக்கான இவ்வாதாரங்கள் எவ்வாறு எங்குள்ளது!*

*இன்றைய இந்து மதத்தின் பிரச்சினை என்னவென்றால், அது விக்கிரக ஆராதனையை முன்னுரிமைப்படுத்தி அதை மதத்தின் மிக முக்கிய அடிப்படைகளில் ஒன்றாக வைத்துள்ளது.*

*இதனால் சிலைகள் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன.*

*இறைவன் சிலைகளில் அவதாரமாக பிரதிபலிக்கிறான்.*

*இதனால் இந்து மதத்தில் ஆயிரக்கணக்கான சிலைகள், உருவங்கள் மற்றும் சின்னங்கள் உள்ளன.*

*இந்து மதம் சிலைகள், மனித வார்ப்புகள் மற்றும் சின்னங்களின் மதமாக மாறிவிட்டது.*

*மேலும் தற்போதைய இந்து மதம் அத்வைதம் பற்றிக் கூறகிறது.*

*தற்கால இந்து மதம் இவ்வுலக நித்தியம் பற்றிப் பேசுகிறது.*

*அத்துடன் வர்க்க முறையை உருவாக்குகிறது.*

*கடவுள் மனிதனுள் சங்கமிப்பதை தற்கால இந்து மதம் அவதாரம் எனக் குறிப்பிடுகிறது*

*சிலைகளிலும் விக்கிரகங்களிலும் கடவுள் அவதாரம் எடுப்பதை இந்து மதம் சக்தி எனக் குறிப்பிடுகிறது.*

*தற்போதைய இந்து மதமானது மறுபிறவித் தத்துவத்தைக் குறிப்பிடுகிறது (மரணத்தின் பின் ஆன்மாக்களின் இடப்பெயர்ச்சி)*

*மேலும் சுழற்சி முறையில் மீண்டும் பிறத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது.*

*பஞ்சபூதங்கள் பற்றியும் அதனோடு தொடர்பான தகடுகள்*

தாயத்துக்கள் அல்லாஹ் (இறைவன்) அல்லாதவற்றில் பற்றுக் கொள்ளல் பற்றி பேசுகிறது.

இவைகள் அனைத்திற்குமாகவே இஸ்லாம் இந்து மதத்தை நிராகரிக்கிறது, ஏனெனில் அது ஏகத்துவத்தை மறந்து தீர்க்கதரிசிகளின் போதனைகளுக்கு மாற்றம் செய்துவிட்டது.

இஸ்லாத்தின் ஊடாக அல்லாஹ்விடம் (இறைவனிடம்) திரும்ப வேண்டும் என்று ஒவ்வொரு இந்துவையும் இஸ்லாம் அழைக்கிறது. எனவே அல்லாஹ்விடம் (இறைவனிடம்) இரட்சிப்பை பெறுவதற்கு இதுவொன்றே வழியாகும்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் **“அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும்”.** (ஸூறது ஆல இம்ரான் 19) மேலும் அல்லாஹ் கூறுகிறான் **“யார் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எடுத்து நடக்க விரும்புகிறாரோ அது அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது அவன் மறுமையில் நஷ்டவாளர்களுள் உள்ளவராவார்”.** (ஸூறது ஆல இம்ரான் 85) மேலும் அல்லாஹ் கூறுகிறான் : “இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்”. (ஸூறா அல் மாஇதா 3)

இந்துமதத்தைச் சார்ந்தவனுக்கோ அல்லது வேறு எந்த மனிதனுக்கோ இந்த மார்க்கமான இஸ்லாத்தைத் தவிர வேறு எதிலும் வெற்றி கிடையாது.

இஸ்லாம் என்பது வெறுமனே இப்பூமியில் இருக்கின்ற ஏனைய மதங்களைப் போன்ற ஒரு மதம் அல்ல, மாறாக இதுவே ஒரே ஒரு ஏகத்துவ மதமாகும். இந்த மார்க்கத்தை ஒப்படைத்தே எல்லா தீர்க்கதரிசிகளையும் (நபிமார்களையும்) அல்லாஹ் (இறைவன்) அனுப்பினான். அனைத்து தீர்க்கதரிசிகளும் ஏகத்துவத்திற்கான அழைப்புடன் வந்தனர். தற்போது இந்த தூய

*ஏகத்துவத்தில் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கமும் கிடையாது. அதேவேளை மற்ற மதங்களில் இணைவைப்பு, பல தெய்வ வழிபாடு போன்ற விடயங்கள் சிறியளவிலோ அல்லது பெரியளவிலோ சேர்ந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.*

*இஸ்லாம் என்பது அல்லாஹ்வை மட்டும் வணங்குவதும், அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதும், அவன் தடுத்தவற்றை தவிர்ந்து வாழ்வதும், அவன் விதித்த வரம்பை மீறாது கட்டுப் பட்டு நடப்பதும் ஆகும் அவன் அறிவித்துத் தந்தவைகளுள் நடந்தது நடைபெறக்கூடியது நடக்கவிருப்பது என்பவற்றை விசுவாசிப்பதும் ஆகும். சிலைகள் வடிவங்கள் உருவங்கள் முதலியனவற்றை விட்டும் விலகி இருத்தலும் ஆகும்*

*அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான்* **“அவர்களுடைய [தப்பான] வர்ணிப்புகளை விட்டும் மிக்க கண்ணியத்திற் குரிய உமது இறைவன் மிகப் பரிசுத்தமானவன்.”** *(ஸூறதுஸ் ஸாப் பாத் 180)*

*சிலைகளில் இறைவன் அவதாரம் பெறுகிறான் என இந்துக்கள் வார்ணிப்பதை விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையாகிவிட்டான்*

**[அவனால்] அனுப்பப்பட்ட தூதர்கள் [அனைவர்] மீதும் [அவனுடைய] ஸலாம் [ஈடேற்றம்] உண்டாவதாக!** *(ஸூறதுஸ் ஸாப்பாத் 180)*

*குறைகள் அனைத்தை விட்டும் தூய்மைப்படுத்தி (இறைவன் எவ்விதக் குறைகளுமற்றவன் என தூய்மைப்படுத்தி) மக்களுக்கு தங்கள் இரட்சகன் பற்றி அறிமுகப்படுத்தும் தூதர்களுக்கு சாந்தி உண்டாவதாக.*

## 17. ஒவ்வொரு இந்துவும் ஏன் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்க வேண்டும் ?

*அல்லாஹ் (இறைவன்) தன் அடியார்களுக்காக ஏற்றுக்கொண்ட மார்க்கமாக இஸ்லாம் உள்ளது. இது தெய்வீகச் சட்டமாகும்*

இதனைத் தவிர வேறு எதையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்ற அடிப்படையிலும், இந்து வேதங்களில் இருக்கும் தீர்க்கதரிசனங்களின் எச்சங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்லாம் பற்றியதும் இஸ்லாத்தின் தீர்க்கதரிசி முஹம்மது நபியின் வருகை குறித்த பல நற்செய்திகள் (முன்னறிவிப்புகள்) குறிப்பிடப்பட்டுள்ளது என்ற அடிப்படையிலும், ஒரு இந்து எவ்வித தயக்கமுமின்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது மறுமையில் இறைவனின் இரட்சிப்பை பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழியாக அமைந்துள்ளது.

இஸ்லாம் குறித்த சில முன்னறிவிப்புகளை புனித இந்து வேதங்களிலிருந்து குறிப்பிடுகிறேன்.

ஆனால் இந்துக்களின் வேத நூல்களிலிருந்து இருந்து முன்னறிவிப்புகளை (நற்செய்திகளை) குறிப்பிடுவதற்கு முன், இந்து சட்டத்தின் நிலை பற்றியும், ஒரு இந்து தன்னை தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக தனது உடலை எப்படி வருத்திக் கொள்கிறான் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்துக்கள் எவ்வாறு இயற்கைக்கு மாறான ஆத்மஞான (ஆசைகளை அடக்கும்) சடங்குகளை கடைபிடிக்கிறார்கள்.

இவர்களின் இந்நிலை வேதங்கொடுக்கப்பட்டோரின் நிலையிலிருந்து பெரிதும் வித்தியாசப்படவில்லை. ஏனெனில் வேதம் கொடுக்கப்பட்டோர், குறிப்பாக யூதர்களின் அநீதி, அடக்குமுறை, கட்டுப்படாமை காரணமாக சுத்தம், மீது பல தடைகளும், உணவில் கடுமையான கட்டுப்பாடுகளும் நடைமுறை சட்டத்துடன் தொடர்பான பல தடைகளும் விதிக்கப்பட்டன.

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் : **"யூதர்கள் செய்த அநியாயத்தின் காரணமாகவும், அல்லாஹ்வின் பாதையை விட்டும் அதிகமாக தடுத்ததின் காரணமாகவும் அவர்களுக்கு ஆகுமாக்கப்பட்டிருந்த நல்லவற்றை அவர்கள் மீது நாம் தடை செய்தோம்".** (அத்தியாயம் : அந்நிஸா (பெண்கள்) 160)

தௌராத்தின் பழைய ஏற்பாட்டில் (லேவியராகமம்) நூலில் இடம்பெற்றுள்ள யூத பெண்ணுக்கான தீட்டு பற்றிய சட்டங்களை நீ வாசிப்பதே இதற்கு சான்றாக அமையும். தௌராத் கூறுகிறது :

மேலும் தீட்டின் போது அவள் படுத்து உறங்கும் இடமனைத்தும் அசுத்தமானவை. அவள் உட்காருபவை அனைத்தும் அசுத்தமானதாக ஆகிவிடும். அவளுடைய படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் குளித்து, சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. இவ்வாறு தீட்டுப் பெண் அமர்ந்திருந்த பொருளொன்றை தொட்டவர் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் குளித்து சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. மேலும் அவள் அமர்ந்திருக்கும் வேளையில் அமர்ந்திருக்கும் தளபாடத்தை அல்லது விரிப்பைத் தொடுகிறவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. ஒருவன் அவளுடன் சயனிப்பதால் அவளின் தீட்டு அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதனால் அவன் ஏழு நாட்கள் அசுத்தமாயிருப்பான். மேலும் அவன் சாய்ந்து கிடக்கும் ஒவ்வொரு படுக்கையும் அசுத்தமாக இருக்கும்.[61]

இந்தக் கடுமையான சட்டங்கள் ( தீர்ப்புகள்) இஸ்ரவேலர்களின் கல்நெஞ்சத்தினாலும் கடும்போக்கினாலும் கிடைத்ததாகும்

தௌராத்தில் அல்லாஹ் இந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்காக ஒரு தீர்க்கதரிசியை அனுப்பவிருப்பதாக அவர்களுக்கு அறிவித்திருந்தான்.

யாக்கோபு (யஃகூப்) நபியின் மரணத்தருவாயின் போது, அவர் தனது பன்னிரண்டு புதல்வர்களையும் கூட்டி, அவர்களுக்கு அறிவுரை வழங்கத் தொடங்கினார் என்று தௌராத் நமக்குச் சொல்கிறது. தௌராத்தில் உள்ள யாக்கோபின் புகழ்பெற்ற உயிலில் பின்வருமாறு கூறுகிறது:

யாக்கோபு தன் புதல்வர்களை அழைத்து, ‘கடைசி நாட்களில்

உங்களுக்கு என்ன நேரிடும் என்பதை நான் உங்களுக்குச் சொல் வதற்காக ஒன்று கூடுங்கள்' என்றார். யாக்கோபின் புத்திரரே! ஒன்று சேர்ந்து கேளுங்கள், உங்கள் தகப்பனான இஸ்ராஈலுக்கு செவிசாயுங்கள்!

பின்னர் அவர் யூதாஸிடம் கூறினார். யூதாஸ் என்பவர் தாவீது, சாலமன் மற்றும் ஜேஸஸ் - அவர்கள் அனைவருக்கும் பிரார்த் தனை மற்றும் சாந்தியும் உண்டாகட்டும் - போன்ற தீர்க்கதரிசி களின் தாத்தாவும் ஆவார்.

அவருக்கு பின்வரும் விடயத்தைக் கூறினார்.

சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்கு வதும் இல்லை, நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார் கள்(62)

வேதம் கொடுக்கப்பட்டோரிடத்தில் எவ்வித கருத்து முரண் பாடுமின்றி இந்த வசனமானது மிக முக்கியத்துவம் நிறைந்ததும் மிகப்பெரும் நற்செய்தியையும் பிரதிபளிக்கிறது.

இந்த முன்னறிவிப்பானது எதிர்காலத்தில் வரக்கூடிய ஒரு மனி தரைப் பற்றியதாகும். அவருக்கு நுபுவ்வத் கிடைப்பதோடு, ஆட்சியும் சட்டவாக்க அதிகாரமும் அவருக்கு வழங்கப்படும் என்கிறது.

இங்கே எடுத்தாளப்பட்ட செங்கோள் என்பதானது யூதாஸின் பரம்பரையில் ஆட்சியாளர்களும் தீர்க்கதரிசிகளும் இருப்பார் கள் என்பது பொருளாகும்.

நியாயப் பிரமாணிக்கன் வரும் வரையில் இத்தீர்க்கதரிசிகள் தொடர்வார்கள் இவருக்கு மக்கள் கட்டுண்டு இருப்பார்கள் என் பதாகும்.

மக்களெல்லாம் கட்டுப்படுகின்ற (கீழ்படிகின்ற) நியாயப்பிர மாணிக்கன் என யாகோபினால் எதிர்வு கூறப்பட்டவர் யார்?

இதற்கு பதிலளிப்பதற்கு முன் பனூஇஸ்ரவேலர்களின் இறுதி நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்பதையும் அவர் யூதாஸின் பரம்பரையில் வந்தவர் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

பின்னர் இஸ்ரவேலர்களில் நபிமார்கள் வருவது திடீர் என நின்றுவிட்டது.

மேலும் யாகோபின் தீர்க்கதரிசனத்திற்கு (எதிர்வுகூறல்) ஏற்ப ஆட்சி மற்றும் நபித்துவம் சட்டவாக்கம் போன்றவற்றின் மாற் றம் இஸ்ரவேல் சந்தியில் தூதுத்துவம் நின்றதின் பின் யூதா விற்கு வெளியே உள்ள இன்னொரு நபருக்கு சென்றிருக்காதல் லவா?

கிறிஸ்து யூதாஸின் வழித்தோன்றல் என்பதால், இந்த நபர் ஜேஸ / கிறிஸ்து அல்ல என்பது தெளிவாகிறது!.

யாகோபின் (தீர்க்கதரிசனத்தின்படி) முன்னறிவிப்பின் படி யூதா ஸின் அதே தேசத்தை பெறுவார். இந்தக் கருத்தையே யாகோப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் 'சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்' எதிர்காலத்தில் வரவி ருக்கும் தீர்க்கதரிசியின் சமூகம் நிலத்தை கையகப்படுத்தும். பாலஸ்தீனத்தை கையகப்படுத்தும். அவருடைய சமூகத்திற்கு மிகப்பெரிய பேரரசுகளும் கீழ்படியும்.

கலீபா உமர் இப்னுல்-கத்தாப்,-ரழியல்லாஹு அன்ஹு யூதா வின் நிலத்தைப் பெற்றார், மேலும் ஷாம் ஈராக் மற்றும் பாரசீ கம் ஆகிய பிரதேசங்கள் இஸ்லாமிய ஆளுகைக்குள் வந்தது.

இந்த உண்மைக்கு தொலைநோக்குப் பார்வையோ, திருத்தமோ தேவையில்லை!

ஆதலால் வரலாறு சொல்வதெல்லாம் யாகோப் தனது புத்திரர் களுக்கு கூறிய உபதேசம் நிறைவேறிவிட்டது. இந்த விடய

*மானது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களைத் தவிர வேறு எவருக்கும் பொருந்தவில்லை. இதன் முழு மையையும் அவரின் சமூகம் தவிர வேறு எவரும் அடைந்து கொள்ளவும் இல்லை.*

*ஷெலோன் என்ற வார்த்தையின் பொருளென்ன?*

*அதாவது நிம்மதி வழங்குவர், கட்டுப்பாடுகளை நீக்குபவர் என் பதாகும். இந்தக் கருத்தைத்தான் பழைய ஏற்பாடு தொடர்பான வேத ஆய்வுகளுக்கான வெப்தளத்திலும் பதிவு செய்யப்பட்டுள் ளது.*[63]

*ஆகவே யாகோப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன் சமூகமா கிய பனூஇஸ்ராயில்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளையும், வரம்பு களையும் நீக்குபவர் குறித்து நன்மாராயம் கூறுகிறார்.*

*நாம் தற்போது பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை வாசிப்போம்*
**“[ஆகவே, அவர்களில்] எவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத [நம்] தூதராகிய இந்த நபியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களி டமுள்ள தௌறாத்திலும், இன்ஜீலிலும் இவருடைய பெயர் எழுதப் பட்டிருப்பதைக் காண்பார்கள். [இத்தூதரோ] அவர்களை நன்மை யான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலி ருந்து விலக்குவார். நல்லவற்றையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். மேலும், அவர்களது சுமையையும் அவர்கள் மீதிருந்த [கடினமான சட்ட] விலங்குகளையும் [இறைவனின் அனுமதி கொண்டு] நீக்கிவிடு வார். ஆகவே, எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரை பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான [இவ்வேதத்]தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்”.** *(ஸூறதுல் அஃராப் 157)*

*‘மேலும் அவர்களது சுமையையும், அவர்கள் மீதிருந்த விலங்கு களையும் அவர்களை விட்டும் நீக்குவார்’. ‘இதனை உண்மைப் படுத்தும் அடிப்படையிலேயே அவர்களின் மீதிருந்த விலங்கு*

களையும், கட்டுப்பாடுகளையும் நீக்கக் கூடிய வகையில் எளிமை யானதும் இலகுவானதுமான இஸ்லாமிய சட்டதிட்டங்கள் வந்தன.

இப்போது இந்துக்களின் புனித நூல்கள் பற்றி பார்ப்போம்.(64)

இந்து மதமும் மனிதன் பாவங்களிலிருந்து தூய்மை பெறுவ தற்கு ஆசைகளை அடக்க மிகச்சிரமமான சடங்குகளை பேண வேண்டும் என்ற அதிகமான சடங்கு சம்பிரதாயங்களை கொண் டிருக்கிறது என்பதை ஏலவே குறிப்பிட்டேன். ஆகவே இந்து மதமும் யூத கிறிஸ்துவ மதங்களைப் போல் மனிதனில் பல் வேறுபட்ட சுமைகளை சுமத்தும் ஒரு மதம் என்பதை நான் கூறத் தேவையில்லை.

அந்த வகையில் இந்து வேதங்களும் இந்துக்களின் சுமைகளை நீக்கி அவர்களைப் தூய்மைப்படுத்துவதற்காக ஒரு மாபெரும் தீர்க்கதரிசி வருவார் என்பது பற்றிய முன்னறிவிப்புகளையும் நல்ல செய்திகளை கொண்டு வந்துள்ளது.

இந்து வேதங்கள் பின்வருமாறு கூறுகின்றன : கல்கி மாதவ மாதத்தில் 12 ஆம் பௌர்ணமி தினத்தில் பிறப்பார்.(65)

கல்கி என்பது பாவங்களை விட்டும் தூய்மையாக்குபவர் என்ப தாகும்.

மாதவ மாதம் என்பது உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் வசந்த மாதம்.

அவர்களை பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்துவதற்காக வர வுள்ள தீர்க்கதரிசி வசந்த மாதத்தில் (ரபீஉல் அவ்வல்) 12 ஆம் தினம் பிறப்பார் என்று கூறுகிறது.

பெரும்பான்மை இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுப்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் 12 ஆம் நாள் பிறந்தார்கள் என்பதாகும்.(66)

அவருடைய பிறப்பு குறித்து புனித இந்து வேதம் இவ்வாறு கூறுகிறது. கல்கி ஷம்பாலா நகரின் தலைவர் விஷ்னுயாஷ் என்பவர் வீட்டில் அவர் பிறப்பார்.(67)

ஷம்பாலா எனும் ஊர் என்பதன் கருத்து பாதுகாப்பான ஊர் (நகரம்) என்பதாகும்.

எனவே பாதுகாப்பான நகரம் என்பது மக்காவைக் குறிக்கிறது. **“என் இரட்சகனே! [மக்காவாகிய] இதை அபயமளிக்கும் நகரமாக ஆக்குவாயாக என இப்ராஹீம் கூறினார்”.** (ஸூறதுல் பகரா வசனம் : **126**)

நபியவர்கள் மக்காவில் பிறந்தார்கள்.

விஷ்னுயாஷ் என்பவர் வீட்டில் அவர் பிறப்பார் என்பதில் விஷ்னுயாஷ் என்ற வார்த்தையின் கருத்து இறையடியான் அறபு மொழியில் (அப்துல்லாஹ்) என்பதாகும்.

வருகைதரவிருக்கும் நபியின் தாயின் பெயர் சோமவதீ என்றழைக்கப்படுகிறது. ’விஷ்னுயாஷின் இல்லத்தில் அவரின் மனைவி சோமவதீ கல்கியை ஈன்றெடுப்பார்’(68)

சோமவதீ என்பதன் பொருள் பாதுகாப்புப் பெற்றவள் என்பதாகும். அறபு மொழியில் ஆமினா என்பதற்கு நிகராக உள்ளது.

முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் அவர்களின் தாயாரின் பெயர் ஆமினா என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இந்து மதத்தின் படி, கல்கி தனது ஷம்பாலா கிராமத்திலிருந்து வெளியே வந்து, சாத்தானுடன் சண்டையிட்டு, இருள், சீர்கேடு மற்றும் கொடுங்கோன்மையை நீக்கி, பின்னர் தனது கடைசி நாட்களில் அங்கு திரும்புவார், அதன் பிறகு அல்லாஹ் (இறைவன்) அவரை வானத்திற்கு உயர்த்திவிடுவான்.

முஹம்மது இப்னு அப்தில்லாஹ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை விட்டு மதீனாவிற்கு சென்று ஏகத்துவத்தை மக்களிடையே பரப்பிவிட்டு, தாம் இறப்பதற்கு

சில வருடங்களுக்கு முன் வெற்றியாளராக மக்கா திரும்பினார் என்ற இந்த உண்மையை ஒவ்வொரு முஸ்லிமும் அறிவர்.

கல்கி அல்லாஹ்வின் அவதாரம் என்பது போன்ற நாம் அங்கீ கரிக்காத பல குணாதிசயங்களை இந்த தீர்க்கதரிசிக்கு இந்து மதம் சேர்த்துள்ளது. இந்தக் கூற்றை விட்டும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன். இவ்வாறான அவதூறுக்கு பதிலை வேத நூல்களிலிருந்து விபரித்தோம்.

(அல்லாஹ்) இறைவன் தனது சிருஷ்டிகளில் சங்கமமாகவு மில்லை. அவனுடைய வானமோ பூமியோ அவனைச் சூழ்ந்து கொள்ளவுமில்லை.

என்றாலும் வரவிருக்கும் நபியைப் பற்றி அவர்களின் வேதங்க ளில் என்னைப் பிரமிக்க வைத்த பண்புகளில் ஒன்று என்ன வென்றால், அவர் வெள்ளை குதிரையில் சவாரி செய்கிறவர் என் பதாகும். உண்மையில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அல்-முர்தஜஸ் என்ற பெய ரால் அழைக்கவல்ல வெள்ளை குதிரை ஒன்று இருந்தது.(69)

இந்து சிலைகள் வரவிருக்கும் தீர்க்கதரிசி கல்கியின் உருவத்தை வெள்ளைக் குதிரையில் சவாரி செய்வது போலவும், தோளில் வாளை உயர்த்துவது போலவும் சித்தரிக்கிறது. மேலும் நீ காணும் கல்கியின் அனைத்து இந்து படங்கள் மற்றும் சிலைகள் அனைத்தும் அவரை இவ்வாறு சித்தரிக்கின்றன.

அவர் ஓர் அநீதிகு எதிராக போராடும் போராளித் தீர்க்கதரிசி. இது நபி முஹம்மது இப்னு அப்தில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒரு பண்பாகும். ஏனென்றால் அவர் வாளால் சண்டையிட்டார் மற்றும் அல்லாஹ்வின் எதிரி களை எதிர்த்துப் போராடினார்.

அவர்களின் வேதநூல்களின் படி மேலும் வரவிருக்கும் தீர்க்க தரிசி மறைவானவற்றை அறிவிப்பார். அவர் தனது சமூகத்தில் உன்னதமானவராகவும். குறைவாகப் பேசுபவராகவும், பெருந்

தன்மை மிக்கவராகவும், உடல் வலிமையானவராகவும், நல்ல வற்றை ஏற்றுக் கொள்பவராகவும் இருப்பார்.

மேலும் அவரின் மிக உன்னதமான பண்புகளில் ஒன்று ' கல்கி தனது நான்கு தோழர்களின் உதவியுடன் சாத்தானை அழித்துவிடுவார்'(70)

இதனை ஒரு முஸ்லிம் வாசிக்கும் போது அவனது நினைவிற்கு வருவது அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு (அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக) உமர் இப்னுல் கத்தாப், உஸ்மான் இப்னு அப்பான், அலி இப்னு அபீ தாலிப் (இவர்கள் அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!) போன்றோரே!

ஏனெனில் இவர்கள் தாம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்தவர்கள். இவர்களே நபியவர்களின் ஆரம்ப பிரச்சாரத்தில் ஒத்துழைப்பு நல்கியவர்களும், நபியவர்களின் பின் கலீபாக்காளாக வந்தவர்களுமாவார்கள்.

உண்மையில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அவர்களின் தோழர்களுள் மிகவும் திறமைவாய்ந்த அவர்களுடன் நெருக்கமாக இருந்து அவர்களின் பிரச்சாரத்தில் பக்க பலமாக இருந்த நால்வர் இருந்துள்ளனர்.

அவர்களே நபியவர்களின் மறைவிற்குப் பின் முஸ்லிம்களின் தலைமைத்துவத்தை நடாத்தி சென்றோர்கள் ஆவார்கள், அவர்கள் முறையே,

1-அபூபக்ர் அஸ்ஸித்தீக்

2-உமர் இப்னுல் கத்தாப்

3-உஸ்மான் இப்னு அப்பான்

4-அலி இப்னு அபீதாலிப் ஆவர்

அலி இப்னு அபீதாலிப் (ரழி) அவர்களின் கொலையுடன் நல் லாட்சிக்காலம் நிறைவுபெற்றது

கல்கியின் மற்றுமொரு சிறப்பியல்பு என்னவெனில், போர்களில் அவருக்கு உதவ தேவதூதர்கள் (மலக்குகள்) வானத்திலிருந்து இறங்கி வருவார்கள்.(71)

அதாவது நபியவர்கள் முன்னெடுத்த போர்களில் தேவதூதர்கள் இறங்கியது நபியவர்களின் காலத்தில் நிகழ்ந்த இஸ்லாமிய அரப்போரின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது குறித்து அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான் **“[உங்களை] பாதுகாக்குமாறு நீங்கள் உங்கள் இறைவனிடம் கோரியபோது “அணியணியாக உங்களைப் பின்பற்றி வரக்கூடிய ஆயிரம் வானவர்களைக் கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன்” என்று அவன் உங்களுக்குப் பதிலளித்தான்”.** (ஸூறதுல் அன்பால் 9)

இந்து வேத நூல்களின் படி கல்கி ‘பர்ஷே ராம்’ என்ற மகா ஆசா னிடம் கல்வி கற்பதற்காக மலைக்குச் செல்வார்கள் அதன் பின் வடக்குத் திசையை நோக்கிச் செல்வார் அதனைத் தொடர்ந்து அவரின் மரணத்திற்கு முன் அவரின் பிறந்தகத்திற்கு மீண்டும் வருவார்.(71)

இந்துக்களிடத்தில் ‘பர்ஷே ராம் என்பவர் இறைமறுப்பாளர் களுக்கு தண்டனை கொண்டுவரும் மிகப் பெரும் தேவதூதர் இவரே முஸ்லிம்களிடத்தில் ஜிப்ரீல் என அழைக்கப்படுகிறார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உண்மையில் ஹிராக் குகைக்குச் சென்றார். அங்கு ஜிப்ரீல் எனும் வானவர் தூதுச் செய்தியுடன் அவரிடம் இறங்கி வந்தார். பின்னர் நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் புலம்பெயர்ந்து வடக்குத்திசையில் அமைந்துள்ள மதீனாவை நோக்கிச் சென்றார். பின்னர் அவர்கள் தமது மரணத்திற்கு சிறிது காலத்திற்கு முன்னர் வெற்றி வாகை சூடியவராக மக்காவிற்கு மீண்டும் சென்றார்.

*இந்து வேதநூல்களில் 'கல்கி' தீர்க்கதரிசிகளில் இறுதியானவ ராய் இருப்பார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*[73]

*நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தீர்க்கதரிசிகளினதும், இறைத்தூதர்களிலும் இறுதியானவர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இது குறித்து அல்லாஹ் தனது வேதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :* **"முஹம்மத் உங்களது ஆண்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. எனினும்,அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களின் (தீர்க்கதரி சிகளின்) முத்திரையாகவும் (இறுதியானவராகவும்)இருக்கின்றார். அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாக இருக்கிறான்".** *(ஸூறதுல் அஹ்ஸாப் 40)*

*வரவிருக்கும் தீர்க்கதரிசியின் பண்பு பற்றி இந்து வேதநூல்கள் : 'அவர் அதிகம் புகழுக்குரியவர்' அதாவது நிராஷன்ஸ் என வந் துள்ளது.*

*அதாவது நிராஷன்ஸ் என்பது அதிகம் புகழுக்குரியவர் என்பதா கும்.*

*அதாவது அரபு மொழியில முஹம்மத் அல்லது அஹ்மத் என்ற சொல்லுக்கு நிகரானது.*

*இவ்விரண்டு சொல்லுமே அல்லாஹ்வின் தூதருக்குரிய இரண்டு பெயர்களாகும். அவர் புகழுக்குரியவர் மேலும் அதிகம் புகழுக்கு ரியவர் என்பதாகும்.*

*நிராஷன்ஸின் பண்புகளின் ஒன்றுதான் அவரின் வாகனம் ஒட்ட கமாயிருக்கும், அவருக்கு பன்னிரெண்டு (12) மனைவிகள் இருப் பர். அவர் தனது வாகனத்தின் மூலம் வானத்தைத் தொட்டு விட்டு கீழே இறங்குவார்.*[74]

*இப்பண்புகள் யாவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தவிர வேறு எவருக்கும் பொருந்தமாட்டாது.*

*அவர்களின் வாகனம் ஒட்டகமாகும் என்பது நபி ஸல்லல்லாஹு*

அலைஹி வஸல்லம் அவர்களின் நிலையிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. இந்த சந்தர்ப்பத்தில் ஈண்டு குறிப்பிடக் கூடிய ஒரு விடயம் யாதெனில் இந்து மூல நூல்களின் கருத்தின் படி அவர்கள் இறுதி நபியாக இருப்பார் என்பதாகும். என்றா லும் அவர்கள் வாகனங்கள் விமானங்கள் கண்டு பிடிக்கப்படுவ தற்கு முன்பே அவர்கள் தூதராக அனுப்பப்படுவார்கள்.[75]

வரவுள்ள தீர்க்கதரிசி இந்து பிராமணர்களுக்கு வெளியில் இருந்து வருவார் என்ற ஒரு விடயமும் இதில், சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. ஏனெனில் இந்துப் பிராமணர்கள் ஒட்டகங்களை உணவாகக் கொள்வதைத் தடை செய்கிறார்கள்.

அவருக்கு (நபியவர்களுக்கு) பன்னிரண்டு மனைவிகள் உள்ள னர். இந்த விடயம் குறித்து அவரின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

அவரின் வாகனத்தின் மூலம் வானத்தைத் தொட்டுவிட்டு அவர் மீண்டும் இறங்கி வருவார் என்பது அல் இஸ்ரா அல் மிஃராஜ் எனும் விண்ணுலகப் பயணத்தைக் குறிக்கிறது. நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நிகழ்ந்த இவ்விண்ணு லகப் பயணம் குறித்து ஒவ்வொரு முஸ்லிமும் விசுவாசம் கொண் டுள்ளனர்.

அதே அத்தியாயத்தில், இந்து மத நூல்கள் நரஷன்களின் புலம் பெயர்வு (தேசம் துரப்பு) பற்றிப் குறிப்பிடுவதுடன், அவரைப் புகழ்ந்து பேசுகின்றன: ‘மக்களே! நரஷன்களை மதித்து நடக்க வும். அமைதியை நிலைநாட்ட புலம் பெயர்ந்து குடியேறியிருக் கும் அவரை நான் பாதுகாப்பேன்.’[76]

தேசம் துரந்து சென்ற அவர் இஸ்லாத்தின் தீர்க்கதரிசி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார். அவர்க ளின் வாழ்க்கை வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றாக இந்நிகழ்வு கருதப்படுகிறது. மக்களிடையே பாதுகாப் பையும், ஓரிறைக் கொள்கையையும் பரப்புவதற்காக மக்கா

விலிருந்து மதீனாவுக்கு சென்ற நிகழ்வான ஹிஜ்ரத் காணப்படுகிறது.

மேலும் பின்வரும் மந்திரத்தில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜிஹாத் (அறப்போர்) பற்றிப் பேசுகிறது. 'இறைதியானம் செய்பவர் இறைத்தியானம் செய்வோருடன் இருப்பார். அவர் போருக்காக புறப்பட்டுச் சென்று மக்களை பாதுகாப்பார்.[77]

ஆகவே அவர் அறப்போர் புரியும் ஒரு தீர்க்கதரிசி ஆவார். அவர் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவதன் மூலம் மக்களுக்கு மத்தியில் பாதுகாப்பை பரவச் செய்வார்.

அவர்களின் புத்தகங்களில் இஸ்லாம், இஸ்லாத்தின் நபி, அவர்களது வாழ்க்கை வரலாறு, பிரச்சாரம் மற்றும் மக்கா அல்-முகர்ரமா பற்றிய பல நூற்றுக்கணக்கான சுப செய்திகள் (முன்னறிவிப்புகள்) காணக் கிடைக்கின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவதை சிலர் மறுப்பதனால். சில இந்துக்கள் இந்த நூல்களில் வந்துள்ள செய்திகள் சிலவற்றுடன் சில வேளை உடன்படாமல் இருக்கலாம். சத்தியத்தைத் தேடும் ஒரு இந்துவுக்கு இவைகள் பொறுட்டல்ல. இந்த சில முன்னறிவிப்புகளை குறிப்பிட்டதன் நோக்கம் இது பற்றிய தெளிவை பெற்றுக் கொள்வதற்கே! ஆகையால் இந்நற்செய்திகள் அதிகமாகவும் பல்வேறுபட்ட அமைப்புகளிலும் காணப்படுவதினால் மிக விரிவாகக் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொண்டேன்.

ஏனென்றால் இஸ்லாம் சரியானது என்பதற்கான மிகப்பெரிய ஆதாரம் இஸ்லாத்தின் செய்தி மற்றும் ஏகத்துவம், அதில் காணப்படுகின்ற உள்ளுணர்வுக்கான அழைப்பு போன்றனவும் ஆகும். அத்துடன் இந்தப் புவியில் காணப்படுகின்ற ஏனைய மதங்கள் அனைத்தும் மனிதனின் இலக்கையும் அவனின் இறுதி முடிவையும் அறிந்து மனித தேவையை பூர்த்தி செய்வதில்

*வெறுமை நிலையில் இருப்பதும் இதற்கான மிகப்பெரும் சான் றாக காணப்படுகிறது.*

*இந்த பூமியில் குழப்பமான உருவவழிபாட்டுக் கொள்கைக ளும், இணைவைப்புகளும் மற்றும் நாத்திகமும் தவிர வேறு எது வும் எஞ்சி இருக்கவில்லை. மேலும் இஸ்லாத்தில் தவிர வேறு எந்த மதத்திலும் தூய ஏகத்துவமும் அல்லாஹ்வை பரிசுத்தப் படுத்துவதும் காணக் கிடைப்பதில்லை.*

**“[நபியே! மனிதர்களை நோக்கி] கூறுவீராக: அல்லாஹ் ஒருவன் தான். அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன். அவன் [எவரை யும்] பெறவுமில்லைல் [எவருக்கும்] பிறக்கவுமில்லை. [தவிர] அவ னுக்கு ஒப்பாகவும் [நிகராகவும்] எவருமில்லை.** *(அத்தியாயம்: அல்இஹ்லாஸ் (உளத்தூய்மை) :1 - 4)*

## 18. இஸ்லாம் என்றால் என்ன?

*பதில்: இஸ்லாம் என்பது சரணடைதல், கீழ்படிதல், அல்லாஹ் வுக்கு கட்டுப்படுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.*

*அல்லாஹ் இது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறான் “யார் நன்மை செய்த நிலையில், அல்லாஹ்வுக்கு தனது முகத்தை அடி பணியச் செய்து, நேரிய வழி நின்ற இப்றாஹீமின் மார்க்கத்தை பின்பற்றியும் வருகின்றாரோ அவரை விட அழகான மார்க் கத்தையுடையவர் யார்? இன்னும் அல்லாஹ் இப்றாஹீமை உற்ற நண்பராக எடுத்துக் கொண்டான்”. (ஸூறதுன் நிஸா 125)*

*‘அஸ்லம வஜ்ஹஹூ லில்லாஹ்’ ‘அல்லாஹ்வுக்கு தனது முகத்தை அடிபணியச் செய்வது’ என்பதன் அர்த்தம் அல்லாஹ்விடம் சரணடைந்து அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும். எங்கள் இரட்சகன் மிகப் பரிசுத்தமானவனாகி விட்டான். இவ்வாறான வர்தான் மார்க்கத்தில் மிகவும் சிறந்தவராவார்.*

*மேலும் அல்லாஹ் கூறுகிறான் :* **“[உண்மையாக] வணங்கப்படத் தகுதியான உங்கள் இரட்சகன் ஒரே ஒருவன்தான். ஆகவே அவ**

**னுக்கே நீங்கள் கட்டுப்படுங்கள். பணிந்து நடப்போருக்கு (நபியே) நீர் நன்மாராயம் கூறுவீராக".** *(ஸூறதுல் ஹஜ் 34)*

*(பலஹூ அஸ்லிமூ) அதாவது அவனுக்கே கட்டுபடுங்கள் என் பதன் அர்த்தம் அவனது தீர்ப்புக்கு கட்டுப்படுங்கள் என்பதா கும்.*

*எனவே இந்த வசனங்கள் யாவும் இஸ்லாம் என்பது அல்லாஹ் வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதுடன் அவனுக்கு கீழ்ப்படிவதுமாகும். மேலும் அவனுடைய சட்டதிட்டங்கள் மற்றும் வழிமுறையை திருப்தியோடு ஏற்றுக்கொள்வதுடன் கடைப்பிடிப்பதுமாகும். இதுவே இஸ்லாத்தின் சாராம்சமும் யதார்த்தமுமாகும்.*

*ஆகவே இஸ்லாம் என்பது தீர்ப்பிலும் சட்டதிட்டத்திலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதாகும்.*

*இஸ்லாம் மனிதர்கள் அனைவரினதும் மார்க்கமாகும். இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :* **"அல்லாஹ் விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும்".** *(ஸூறது ஆல இம்ரான் 19) இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் : "யார் இஸ்லாம் அல் லாததை மார்க்கமாக எடுத்து நடக்க விரும்புகிறாரோ அது அவ னிடமிருந்து அங்கீகரிக்கப் படமாட்டாது அவன் மறுமையில் நஷ்டவாளர்களுள் உள்ளவராவார்". (ஸூறது ஆல இம்ரான் 85)*

*அனைத்து இறைத்தூதர்களுக்கும் தீர்தரிசிகளுக்கும் அல்லாஹ் கொடுத்தனுப்பிய மார்க்கம் இஸ்லாமாகும். இந்த வகையில் தீர்கதரிசிகள் அனைவரினதும் மார்க்கம் ஒன்றே, அது இஸ்லாம் மார்க்கமாகும். மேலும் அனைத்து தீர்க்கதரிசிகளும் அவர்க ளின் சட்டதிட்டங்கள் வேறுபடினும் அவர்கள் அனைவரும் கொண்டுவந்த மார்க்கம் ஓரிறைக்கொள்கையே!*

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் : **"நிச்சயமாக என்னைத் தவிர [உண்மையாக] வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாறுமில்லை எனவே என்னையே வணங்குங்கள். என நபியே நாம் உமக்கு முன்னர் எந்தத் தூதருக்கும் வஹி அறிவிக்காமல் அவரை நாம் அனுப்பியதில்லை".** *(ஸூறதுல் அன்பியா வசனம் :22)*

*இஸ்லாத்தைதவிர ஓரிறைக்கொள்கையில் வேறு எந்த மார்க்கமும் நிலைபெறவில்லை.*

*இந்தப் பூமியல் தற்போதிருக்கும் ஒரே ஒரு ஓரிறை மார்க்கம் இஸ்லாம் மார்க்கம் ஆகும்.*

*அதேவேளை ஏனைய கொள்கைகளை பின்பற்றுவோரிடம் இணைவைப்பு (பல தெய்வக் கொள்கை) சிறியளவிலோ அல்லது பெரியளவிலோ காணப்படுகிறது. தீர்க்கதரிசிகளின் மரணத்தின் பின் ஓரிறைக் கொள்கையை விட்டுவிட்டு காலவோட்டத்தில் பல தெய்வக் கொள்கையை எடுத்துக் கொண்டனர். எனவே தீர்க்கதரிசிகள் கொண்டு வந்த தூய ஓரிறைக் கொள்கையில் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் இன்று காண முடிவதில்லை.*

*இதனால், ஒரு இந்து முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியவற்றுள் இஸ்லாம் சரியானது என்பதற்கு மிகப் பெரும் சான்றாக அமைவது இந்த மார்க்கத்தில் உள்ள தூய ஏகத்துவச் செய்தியாகும்.*

**19- நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் ஏன் இந்த உலகில் இருக்கிறோம்? நாம் இறுதியாக எங்கு செல்லவுள்ளோம் எனும் பதிலளிப்பதற்கு முடியாது பகுத்தறிவைக் தடுமாற்றத்தில் ஆழ்த்தும் கேள்விகளுக்கு இஸ்லாத்தில் பதில் உள்ளதா?**

*இந்த கேள்விகளுக்கான பதிலை இஸ்லாம் அல்குர்ஆனில் ஒரு வசனத்திலிருந்து மாத்திரம் பதிலளிக்கிறது. எமது இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:* **"என்னைப்**

**படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட் டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்".** *(ஸூறா யாஸீன் 22)*

*நான் எங்கிருந்து வந்தேன்? என்ற கேள்விக்கு அல்லாஹ் என் னைப் படைத்தான் என்பதே இதற்குரிய பதிலாகும். இதனை அல்குர்ஆன் (அல்லதீ பதரனீ) அவன் என்னைப் படைத்தவன் என்று குறிப்பிடுகிறது.*

*நான் எங்கு செல்லவிருக்கிறேன்? என்பதற்கான பதில்: எனது செயல்பாடுகள் குறித்த விசாரணைக்காக அல்லாஹ்விடம் செல் லவுள்ளேன். இதனை அல்குர்ஆன் (வஇலைஹி துர்ஜஊன்) அவ னிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள் என்று குறிப்பிடுகிறது.*

*இவ்வுலகிற்கு எதற்காக வந்தேன்? அல்லாஹ்வை வணங்கவும் நான் பரீட்சிக்கப்படுவதற்குமாகும்.*

*ஏன் நான் அல்லாஹ்வை வணங்க வேண்டும்? என்னைப்படைத் தவனான அல்லாஹ்வை வணங்குவதே இயல்பான விடயமா கும் இதுதான் அடியானுக்கும் இரட்சகனுக்குமிடையிலான இயல்பான தொடர்பாகும். எனவே அடியான் தனது இரட்சக னும் படைப்பாளனுமாகிய அல்லாஹ்வை வணங்க வேண்டும். "என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது?"*

*மனிதர்களை திணர வைக்கும் மூன்று கேள்விகளுக்குமான பதிலை ஒரு வசனமே உள்ளடக்கியுள்ளது!* **"என்னைப் படைத்த வனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்".** *(ஸூறா யாஸீன் 22)*

## 20. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்பதை அறிந்து கொள்வது எப்படி?

*பல்வகை அற்புத ஆதார சான்றுகள் யாவும் இவற்றிற்கான முக் கிய சான்றாகும். இவைகள் யாவும் கருத்தியல் ரீதியான ஏகோ*

பித்த நிலைப்பாட்டையும் முழுமையான நம்பகத்தன்மையை யும் எடுத்துக்காட்டுகிறது.

அரிஸ்டாட்டில் அவருடைய மொத்த ஆக்கங்களின் அடிப்ப டையில் ஒரு தத்துவஞானி ஆவார். மாறாக அவர் சொன்ன ஒரு வாக்கியத்தினாலோ அல்லது அவர் செய்த தத்துவ ஆய்வொன் றினாலோ அல்ல.

ஹிப்போகிரட்டீஸ் என்பவர் அவரது மொத்த மருத்துவத் திட் டங்களின் அடிப்படையில் ஒரு மருத்துவர் ஆவார். மாறாக அவர் மேற்கொண்ட ஒரு அறுவை சிகிச்சையின் மூலம் அல்ல.

அவ்வாறே நபியவர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற பல்வகை அற் புத ஆதாரச் சான்றுகளும் கருத்தியல் ரீதியான ஏகோபித்த நிலைப்பாடுகளும் சந்தேகமற்ற மிக உறுதியான விடயங்களும் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே நீர் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அவதானித்தால் அவர்களை உண்மை பேசுபவராக (நேர்மையானவராக) கண்டு கொள்வீர். இப்பண் பினால் அவர்களது விரோதிகள் கூட அவர்களை ஏற்றுக்கொள் ளுமளவிற்கு அவர்கள் பிரபல்யம் பெற்றிருந்தார்கள். மேலும் பொய் மற்றும் ஒழுக்கக்கேடு போன்ற இழிகுணங்களால் அவர் கள் பழிசுமத்தப்படவில்லை. இவைமட்டுமல்ல அவர்கள் மறை வானவற்றை அறிவிப்பார்கள், அவை அவர்கள் அறிவித்தது போன்றே நிகழ்ந்து விடும்.

இவற்றுக்கு அப்பால் இவர்கள் அழைத்த ஓரிறைக் கொள்கை, அனைத்து நபிமார்களின் கொள்கையுடன் ஒத்துப்போகிறது. இவர்களின் வருகைக்கு பல நூறு வருடங்களுக்கு முன்னரே இவர்களின் வருகையைப்பற்றி தீர்க்கதரிசிகளும் புனித வேத நூல்களும் முன்னறிவிப்புச் செய்து விட்டன. இவையெல்லாம் நபியவர்களின் தூதுத்துவம் உண்மையானது என்பதற்கான (மரபுசார்) கருத்தியல் சார் ஏகோபித்த முடிவாகவும் மறுக்க முடியா உறுதியான சான்றாகவும் காணப்படுகிறது.

*பின் அவர்கள் கொண்டு வந்த மிகப்பெரும் அத்தாட்சி பற்றி என்னவென்று சொல்வது ? அது கண்ணியமிக்க அல்குர்ஆன் அல்லவா?*

*அல்குர்ஆன் மூலம் அல்லாஹ் இலக்கிய விற்பன்னர்களிடம் அதைபோன்ற ஒன்றை அல்லது அதிலிருக்கும் ஒரு அத்தியாயத் தையேனும் கொண்டு வருமாறு சவால் விடுத்தான். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.*

**"அல்லது இதனை அவர் இட்டுக்கட்டினார் எனக் கூறுகின்றனரா? 'நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இது போன்ற ஒரு அத்தி யாயத்தைக் கொண்டு வாருங்கள் அல்லாஹ்வைத் தவிர (உதவி யாளராக) உங்களுக்கு முடியுமானோரை அழைத்துக் கொள்ளுங் கள்' என்று (நபியே) நீர் கூறுவீராக!."** *(ஸூறா யூனுஸ் - 38).*

*அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :* **"நமது அடியார் (முஹம்மத்) மீது நாம் இறக்கிய வேதத்தில் நீங்கள் சந் தேகத்திலிருந்தால் அதுபோன்றதோர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள் நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் (இதற்காக ) அல்லாஹ்வைத்தவிர உங்கள் உதவியாளர்களை அழைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால் உங்களால் ஒரு போதும் செய்யவே முடியாது. ஆக, தீய மனிதர்களும் கற்களும் எரி பொருட்களாக இருக்கின்ற அந்த நரகத்தை அஞ்சிக் கொள் ளுங்கள். அது நிராகரிப்பாளர்களுக்காகவே தயார் செய்யப்பட்டுள் ளது".** *(ஸூறதுல் பகரா : 23, 24)* **இங்கே பின்வரும் வசனத்தின்** *பகுதியை அவதானியுங்கள்* **"நீங்கள் செய்யாவிட்டால் உங்களால் ஒரு போதும் செய்யவே முடியாது".** *(ஸூறதுல் பகரா வசனம் :24)*

*அதன் கருத்தாவது அதனை ஒரு போதும் செய்யவும் முடியாது. அதற்கு சக்தி பெறவும் மாட்டார்கள்.*

*இணைவைப்பாளர்களான நாவன்மைமிக்கோரிடத்திலும், இல க்கிய விற்பன்னர்களிடத்திலும் அல்குர்ஆன் தொடர்ந்தும் இந்த சவாலை முன்வைத்த வண்ணமே இருந்தது. ஆனால் அறபு*

இலக்கியத்தில் கொடிகட்டிப் பறந்த அவர்கள் இதனை எதிர்ப் பதற்கு தயங்கினார்கள் இதனைப் போன்ற ஒன்றை படைப்ப தற்கு பின்வாங்கினார்கள். இயலாமையை ஏற்றுக் கொண்டார் கள்.

கலாநிதி அப்துல்லாஹ் தராஸ் ரஹிமஹுல்லா அவர்கள் குறிப் பிடும் போது "இந்த சவால் அவர்களின் இலக்கிய ஆர்வத்தைத் (வெறியைத்) தூண்டிவிடுமோ என்று இறைத்தூதர் பயப்படக் கூடியவராக இருக்கவில்லையா?

அவ்வாறு இந்த சவாலை எதிர்கொள்வதற்கு மிக எச்சரிக்கை யோடு தயாராகி அவர்களில் உள்ள மிகத்திறமைவாய்ந்த இலக் கிய விற்பன்னர்கள் ஒன்று சேர்ந்து அந்தக் குர்ஆனை ஒத்த சில வார்த்தைகளை அல்லது அதன் சில பகுதிகளில் உள்ளவற்றிற்கு ஒப்பான சில விடயங்களை கூறியிருந்தால் அவர் என்ன செய்தி ருப்பார்!.

அவருடைய காலத்தில் வாழ்ந்தோருக்கு இந்த முடிவை (சவாலை) முன்வைப்பதற்கு அவருடைய மனம் விரும்பியிருப் பின் எதிர்கால சந்ததியினருக்கு இந்த சவாலை முன்வைப்பதற்கு அவர் எந்தளவு அவரின் மனம் விரும்பியிருக்கும்?

இது ஒரு துணிகரமான செயலாகும். இதனை செய்வதற்கு தனது தகுதியை நன்கறிந்த இறை உதவியை பெறும் ஒருவரால் தான் இச்சவாலை முன்வைக்க முடியும். இதனை அவர் உலகிற்கு இவ்வாறு முன்வைத்த போது அதனை எதிர்ப்பதற்கு எவராலும் முடியவில்லை. அவ்வாறு எதிர்த்தோர் தலைகுணிந்து தோற்றுப் போனதே வரலாறாகும்".[(78)]

இந்த இணைவைப்பாளர்கள் நபியவர்களை எதிர்ப்பதற்காக படைகளை ஒன்றுதிரட்டி குழுக்களை அமைப்பது அல்குர் ஆனை எதிர்த்து அதன் சவாலை ஏற்றுக் கொள்வதைவிட மிக இலகுவானது என அவர்கள் கருதினார்கள். இதுவும் அவர்க ளுக்கு எல்லையற்ற சிரமத்தையே அளித்தது. அல்லாஹ் அவர்க

*ளின் இந்நிலை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான்.* **"நீங்கள் அல்குர்ஆனுக்கு செவிதாழ்த்தாதீர்கள். [அது ஓதப்படும் போது] அதில் இடையூறு செய்யுங்கள் இதன் மூலம் நீங்கள் வென்று விடலாம் என நிராகரித்தோர் கூறினர்".** *(ஸூறது புஸ்ஸிலத் 26)*

*அனைத்து அரபுகளும், சவால்விடுக்கப்பட்ட சமூகங்களும் நாத்திகர்களையோ மற்றவர்களையோ திருப்திப்படுத்தும் முறையில் எந்த ஒன்றையும் வழங்கவில்லை.*

*ஆலூஸீ ரஹிமஹுல்லா அவர்கள் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் : "இன்று வரையில் இந்த சவாலை ஏற்று எவரும் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை".*

*ஜுபைர் இப்னு முத்இம் அவர்கள் தாம் இஸ்லாத்தை ஏற்க முன் நபியவர்களிடம் செவிமடுத்த விடயத்தை பின்வருமாறு அறிவிக்கிறார்கள் : நான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மஃரிப் தொழுகையில் அத்தூர் என்ற அத்தியாயத்தை ஓதக் கேட்டேன். பின்வரும் வசனங்களை நான் கேட்ட போது :* **"எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கப்பட்டனரா? அல்லது அவர்களே படைக்கின்றவர்களா? அல்லது வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? மாறாக அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அல்லது உமது இரட்சகனின் பொக்கிஷக் கருவூலங்கள் அவர்களிடம் இருக்கின்றனவா? அல்லது அவற்றின் மீது அவர்களே ஆதிக்கம் செலுத்துபவர்களா?"** *(அத்தியாயம்: அத்தூர் (தூர் மலை) 35-37).*
*என் இதயம் பயத்தால் பறந்து விடப்பார்த்தது என்றார்கள்.*[79]

*ஆகவே அல்குர்ஆன் மனித ஆன்மாவுக்குள் ஊடுருத்துச் செல்லும் பல அதிசயமான மர்மங்களை கொண்டுள்ளது.*

*குறைஷி ஆண்கள் பயந்து திடுக்கிடும் அளவிற்கு இணைவைக்கும் பெண்கள் அபூபக்ர் அவர்கள் அல்குர்ஆனை ஓதும் போது அதனால் கவரப்பட்டு தாக்கமடைந்ததினால் அவரின் வீட்டைச் சூழ ஒன்றுகூடி கூட்டமாக இருந்ததனை சற்று சிந்தித்துப் பாருங்கள்.*[80]

அதனால்தான், அல்குர்ஆனைக் கேட்கக் கூடாது என்றும், அவர்களது குடும்பத்தினருக்கு அதைக் கேட்பதற்கு இடமளிக்க கூடாது என்றும் அரேபியக் குழுக்குள் ஒன்றிணைந்தனர், இதுவே இறைநிராகரிப்பிலேயே அவர்கள் தொடர்ந்து இருப்ப தற்கான காரணமாயிற்று.

அல் குர்ஆனின் அதிசயங்களில் ஒன்றுதான் அதில் காணப்படு கின்ற அதிசயங்கள் எவையும் தீர்ந்துவிடுவதில்லை. கலாநிதி அப்துல்லாஹ் தராஸ் அவர்கள் அல்குர்ஆன் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இறங்கியது குறித்து குறிப்பிடும் சந்தர்ப்பத்தில் “நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சில வசனங்களை ஸூறாக்களில் குறிப்பிட்ட சில இடங்களில் வைக்குமாறும் வேறு சில வசனங்களை சில ஸூராக்களுக்கு மத்தியில் வைக் குமாறும் கட்டளைப் பிறப்பித்தார்கள். இவ்வாறு ஒழுங்குபடுத் தியதன் பின் ஒவ்வொரு அத்தியாயமும் (ஸூறாவும்) தனியான ஒரு கட்டிடம் போன்று தோற்றம் பெற்றது. மேலும் அவர் குறிப்பிடுகையில் அல்குர்ஆன் இறங்கும் போது சில இடங்க ளில் வசனங்கள் ஒன்றை ஒன்று தூரமாக காணப்பட்டது. அது படிமுறை அடிப்படையில் இறங்கியபோது ஒவ்வொரு இடத் திற்கும் பொருத்தமானவகையில் இறை ஆணையின் அடிப்ப டையில் ஜிப்ரீலிடம் பெற்று நபியவர்களினால் சேர்க்கப்பட் டது.

நாம் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கிய வரலாற்றை கருத்திற் கொண்டால், இந்த வேதவெளிப்பாடானது (வஹீ) பொதுவாக குறிப்பிட்ட சூழ்நிலைகள், சந்தர்ப்பங்களுடன் இணைந்ததாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். இவை ஒவ்வொரு ஸூறா வையும் தனித்தனி அலகாக ஒழுங்கமைக்கும் செயல்முறை நடந்த காலத்தைப் பற்றி விசாரணைக்கு உட்படுத்துவதற்கு தூண்டுகிறது.

அல்குர்ஆனின் வசன மற்றும் அத்தியாய ஒழுங்கமைப்பானது ஒரு பழங்கால கட்டிடத்தில் இலக்கமிடப்பட்டு சிதறிய பல

பகுதிதிகளாக இருந்தது போன்று வைத்துக் கொள்ள முடியும். ஆகவே அதை மீண்டும் மற்றொரு இடத்தில் அதே வடிவத்தில் மீள் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. இல்லையெனில் அதிகமான அத்தியாயங்களுடன் தொடர்பான ஒரே நேரத்தில் நிகழ்ந்த முறையானதும், உடனடியானதுமான இந்த ஒழுங்குபடுத்தல் குறித்து எவ்வாறான வியாக்கியானத்தைக் கொடுக்க முடிகிறது?

ஆனால் எதிர்கால நிகழ்வுகள், அவற்றின் சட்டரீதியான தேவைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான தீர்வுகள், குறிப்பிட்ட அந்தத் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டிய மொழியியல் வடிவம் மற்றும் குறிப்பிட்ட அத்தியாயத்துடன் பொருந்தக்கூடிய தன்மைக்கு அப்பால் குறித்த அத்தகைய திட்டத்தை உருவாக்கும் போது ஒரு மனிதன் எவ்வாறான வரலாற்று உத்தரவாதத்தை பெற முடியும்?

அல்குர்ஆன் இவ்வாறான முறையில் ஒழுங்குபடுத்துவதற்கான திட்டமும் எதிர்பார்க்கப்பட்ட வடிவில் அது நிறைவு பெற்றமையும் மகத்தான படைப்பாளனாகிய அல்லாஹ்வின் பங்களிப்பினால் அல்லவா? அவனிடமே இவ்வாறான துல்லியமான ஒருங்கிணைப்பை நிறுவுவதற்கான ஆற்றல் உள்ளது?”[81]

எனவே அல்குர்ஆன் நபியவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தும் ஒரு தனித்துவமான அற்புதமாகும்.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலம் ஆயிரத்திற்கும் அதிகமான அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவை நிகழ்ந்த காலம் குறுகியது. இந்நிகழ்வுகளை அறிவித்தோர் மனிதர்களிலே மிகவும் உண்மை பேசுவோரும் உன்னதமானவர்களுமாவர்.

இவ்வற்புதங்களை எங்களுக்கு அறிவித்தோர் மிகவும் சாதாரண விடயங்களில் கூட பொய்கூறுவதை அனுமதிக்காத இவர்கள் நபியின் மீது எப்படி பொய்யுரைக்க முடியும்? யார் தன்னிச்

சையாக நபியவர்களின் மீது பொய்கூறுகிறார்களோ அவரின் இருப்பிடத்தை நரகத்திலிருந்து எடுத்துக் கொள்ளட்டும் என்ற நபியின் எச்சரிக்கையை நன்கறிந்திருந்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சில அற்புதங்களை அவரை சூழவிருந்த பல்லாயிரக்கணக்கான நபித் தோழர்கள் நேரடியாகப் பார்த்தார்கள். அவற்றில் சிலவற்றை நூற்றுக்கணக்கான தோழர்கள் அறிவித்துள்ளனர். ஆகவே விவகாரம் இவ்வாறிருக்க இந்த விடயங்கள் அனைத்திலும் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எவ்வாறு பொய்யுரைக்க முடியும்?

பெருந்திரலான மக்கள் கலந்து கொண்டு நேரடியாகப் பார்த்த அவர்களின் அற்புதங்களுக்கான எடுத்துக் காட்டுகளில் ஒன்றாக மரக்குற்றியின் முனங்கள் பற்றிய ஹதீஸ் உள்ளது. இந்த ஹதீஸானது மிகப்பிரபல்யமானதும் மற்றும் பெரும்பாலான மக்களால் அறிவிக்கப்பட்டதுமாகும். அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு மரக்குற்றிற்கு மேலிருந்து உரை நிகழ்த்துபவராக இருந்தார்கள். பின்னர் அவர்களுக்கான உரை நிகழ்த்துவதற்குரிய மேடை செய்து கொடுக்கப்பட்டது. அதிலே அவர்கள் ஏறி உரை நிகழ்த்திய போது அந்த மரக்குற்றியானது விம்மியது. சிறு குழந்தை முனங்குவது போன்று முனங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறு தொடர்ந்தும் முனங்கிக் கொண்டிருந்த போது நபியவர்கள் அதனை அணைத்துக் கொண்டார்கள். அப்போது அம்மரக்குற்றியானது அமைதியடைந்தது.

இந்த ஹதீஸை ஸஹாபாக்களில் அனஸ் இப்னு மாலிக், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அப்துல்லாஹ் இப்னு உமர், உபை இப்னு கஃப், அபு ஸஈத், ஸஹ்ல் இப்னு ஸஃத், ஆயிஷா பின்த் அபீபக்கர், உம்மு ஸலமா போன்றோர் அறிவித்துள்ளனர்.

இப்பெரும் தொகையான ஸஹாபாக்கள் ஒன்றிணைந்து இது போன்ற செய்திகளை அறிவிப்பதில் ஒன்றிணைந்து பொய்யுரைப்பார்களா?

அது மாத்திரமின்றி நபியவர்களின் சில அற்புதங்களை ஆயிரக் கணக்கான ஸஹாபாக்கள் நேரடியாகப் பார்த்துள்ளனர். இதற் கான எடுத்துக் காட்டாக நபியவர்களின் சங்கைமிகு விரல்க ளின் இடையிலிருந்து நீர் ஊற்றெடுத்தமையைக் குறிப்பிட முடி யும். அதிலிருந்து (1500) ஆயிரத்து ஐனூறு ஸஹாபாக்கள் வுழு செய்தது மாத்திரமின்றி அந்நீரிலிருந்து பருகினார்கள். இந்த ஹதீஸ் முதவாதிரான பெருந்திரலான நபர்களால் அறிவிக்கப் படும் செய்தியாகும். (ஆதாரம் : புஹாரி முஸ்லிம்)

மிகப்பெரும் படைக்கு உணவளிப்பதற்கு குறைந்த உணவை அதிகப்படுத்திக் கொடுத்தமை. இது குறித்தும் ஆதாரபூர்வ மான அதிகமான செய்திகள் அதிகமான ஸஹாபாக்கள் வழியாக வந்துள்ளது. நபியவர்கள் மூலம் உணவு அதிகரிக்கப்பட்ட நிகழ் வுகள் குறித்து ஐந்து இடங்களில் இமாம் (பேரறிஞர்) புஹாரி அவர்கள் தமது ஆதாரபூர்வமான ஹதீஸ் தொகுப்பில் குறிப் பிட்டுள்ளார்.(82)

உண்மைக்கான சான்றுகள் உறுதியாக இருந்து நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தூதுத்துவத்திற்கான அற்புதங்கள் நிறைந்து காணப்படுகின்றபோது புத்தியுள்ள (பகுத்தறிவுள்ள) ஒருவர் இவை அனைத்தையும் எப்படித்தான் பொய்யெனக் குறிப்பிட முடியும்?

மேற்குறிப்பிடப்பட்ட நபியவர்களின் அற்புதங்களுக்கான இன் னும் சில எடுத்துக்காட்டுகள் இதோ:

ஒரு நாள் இரவு மிகக்கடுமையான புயல் காற்று வீசும் என அறி வித்தது மாத்திரமன்றி மக்கள் எழுந்து நிற்பதையும் தடைசெய் தார்கள். ஒரு மனிதர் இத்தடையை பொருட்படுத்தாது எழுந் தார் அப்போது அப்புயல்காற்றானது அவர் இருந்த இடத்திலி ருந்து அவரை வெகு தொலைவில் எறிந்து விட்டது.(83)

அதே போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நஜாஷி மன்னர் மரணித்த நாளை அறிவித்து அவருக்காக நான்கு தக்பீர் கள் கூறி தொழுகை நடாத்தினார்கள்.(84)

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின் வருவோர் சாதாரணமாக மக்கள் மரணிப்பது போலன்றி வீர மரணம் எய்து மரணம் அடைவார்கள் என்று அறிவித்தார்கள். அவர்களுள், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, அஸ்ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நபி யவர்கள் குறிப்பிட்டது போன்று தியாகிகளாக மரணமடைந் தார்கள்.

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்களும் அபூபக்கர், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, அஸ்ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோரும் மலைக்கு ஏறினார்கள். அப்போது அப்பாறை (பாறாங்கல்) அசைந்தது. உடனே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லம் அவர்கள் மலையை நோக்கி "அசையாது இருப்பீராக. உன் மீது நபியும் உண்மையாளரும் உயிர்தியாகியும் இருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.[85]

எனவே தனக்கு நுபுவ்வத் (நபித்துவம்) கொண்டும், அபூபக்க ருக்கு வாய்மை எனும் பண்பைப் பெற்றவர் என்றும், ஏனையோ ருக்கு உயிர்த்தியாகிகள் என்றும் தீர்ப்பளித்தார்கள். நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அறிவித்தது போன்றே இவை நிகழ்ந்தன.

மேலும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் நபி ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் பிரார்த்தனை செய்து உடனே அல்லாஹ் பதிலளித்த 150 ஹதீஸ்கள் காணப்படுகின்றன.[86]

ஒரு முறை மக்காவாசிகள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் ஒரு அத்தாட்சியைக் காண் பிக்குமாறு கேட்டனர். உடனே சந்திரனை இரு துண்டுகளாகப் பிளந்திருக்கும் நிலையில் காட்டினார்கள் எந்தளவிற்கென்றால் மக்காவாசிகள் (அதனூடாக) அவ்விரு துண்டுகளுக்குமிடை யில் ஹிரா மலையைப் பார்த்தார்கள். இந்த ஹதீஸ் முதவாதிர் வகையைச் சேர்ந்ததாகும். அதாவது அதிகமான ஸஹாபாக்

களால் அறிவிக்கப்பட்ட செய்தியாகும். இவ்வாறான முதவாதிர் அமைப்பில் சொல்லப்படும் இவ்வாறான தகவல் மிகவும் பல மானதும் உறுதியானதுமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தமது நபித்துவம் உண்மை என்பதற்கான ஆதாரத்தை முன்வைப்பதற்காக, சந் திரன் பிளந்த அற்புதம் இடம்பெறும் அத்தியாயமான அல் கமரை மக்கள் செவிமடுக்க வேண்டுமென்பதற்காக மக்கள் அதிகமாக ஒன்று கூடும் ஜும்ஆ மற்றும் பெருநாள் தொழுகைக ளில், ஒதக்கூடியவராக இருந்தார்கள்.

உயிருள்ள படைப்பினங்களில் ஆதம் அவர்கள் இறுதியானவர் என்பதை அறிவித்தார்கள் : "ஜும்ஆ தினத்தில் அஸருக்குப்பின் இறுதிப்படைப்பாக ஆதத்தை அல்லாஹ் படைத்தான்".[(87)]

இந்த உண்மையானது அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. அறிவியலானது உயிரினங்களில் மனித இனம் தான் இறுதியாக இந்த பூமியில் தோன்றியதாக உறுதிப்படுத்தி யுள்ளது. தாவரமும் மிருகமும் தோன்றியதன் பின் தான் மனித இனம் இப்புவியில் தோன்றினார்கள் என்பதை எவ்வாறு அறிந் திருந்திருப்பார்கள்?

அல்லாஹ்வின் பின்வரும் வசனத்தை அவதானித்துப் பார் "**இர வையும் பகலையும் இரு அத்தாட்சிகளாக்கினோம். இரவின் அத் தாட்சியை நீக்கி பகலின் அத்தாட்சியை ஒளிபொருந்தியதாக ஆக்கி னோம்**". (ஸூறதுல் இஸ்ரா 12)

பமஹவ்னா ஆயதல் லைல்லி: "இரவின் அத்தாட்சியை நீக்கி னோம்" என்பது சந்திரனைக் குறிக்கிறது. அது இரவின் அத் தாட்சி பிரகாசம் கொடுக்கக் கூடியதாக இருந்து அதன் பிரகாசம் நீக்கப்பட்டு விட்டது.

உண்மையில் இந்த வசனத்திற்கு நபித்தோழர்கள் இவ்வாறே விளக்கம் கொடுத்தார்கள். இந்த வசனம் தொடர்பாக இமாம் இப்னு கஸீர் அவர்கள் தனது அல்குர்ஆன் விளக்க உரையில்

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் வியாக்கியானத்தை பதிவு செய்துள்ளார்கள். “சந்திரனும் அது இரவின் அத்தாட்சி என்ற வகையில் சூரியனைப்போல் பிரகாசம் தந்து கொண்டிருந்தது. பின்னர் சந்திரனின் பிரகாசம் நீக்கப்பட்டது”.

மிக ஆச்சரியமான விடயமென்னவென்றால் தற்கால அறிவியலானது இதே முடிவுக்கு வந்திருப்பதுதான். நாஸா தனது உத்தியோக (அதிகார) பூர்வ இணையதளத்திலும், மற்றும் அதிகார பூர்வ அலைவரிசையிலும், சந்திரனின் ஆயுளின் முதல் சகாப்தம் ஒளிரக் கூடியதாகவும் எரியக் கூடியதாகவும் இருந்தது என்ற செய்தியை பிரசுரித்துள்ளது.[88]

நபியவர்கள் மூலம் அத்தாட்சிகள் நிகழ்ந்தமை, மறைவான விடயங்கள் மற்றும் வானங்களினதும் பூமியினதும் மர்மங்கள் பற்றிய பல நுணுக்கமான விடயங்களைக் கூறியமை, மற்றும் அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டமை போன்றன மிக உறுதியான ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் அவர்களுக்கு முன்னிருந்த நபிமார்கள் கொண்டுவந்த மார்க்கத்தை போதித்தார்கள். இதற்கு ஆதரவாக அல்லாஹ்விடமிருந்து உதவிகிடைத்தது. மேலும் அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை முழுமைப்படுத்தியதன் பின்னரே அவர்கள் மரணித்தார்கள்.

ஆகவே இவைகள் அவர்கள் ஒரு தீர்க்கதரிசி என்பதை மிக உறுதியாக நிரூபிக்கிறது. இதுவே சீரிய பகுத்தறிவாகும்!

மேலும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மறைவான (அத்தாட்சிகள்) அற்புதங்கள் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளன.

இவ்வற்புதங்களை அவரின் மரணத்திற்குப் பிறகு அறிவித்தோர் மனிதர்களில் மிகவும் சிறந்த உண்மை பேசுவோரான அவர்களின் உற்ற தோழர்களே!

அற்புதங்களைக் காண முன்னரே அவர்களின் மூத்த தோழர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது அதிசயமான (விசித்திரமான) விடயமாகும். காரணம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையாளர் அவர்கள் ஒரு போதும் பொய் சொல்லியதில்லை என்றும் அறிந்தே அவர்கள் இஸ்லாத்தை தழுவினார்கள்.

மூத்த தோழர்களின் இந்த நிலைப்பாடு ஒரு சீரிய புத்திசாலித் தனமான நிலைப்பாடாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உண்மை பேசும் பண்பொன்றே அவர்க ளின் தூது உண்மையென்பதை நிரூபிக்க சுயாதீனமான போதிய ஆதாரமாகும். இதற்குக் காரணம் ஒரு நபர் தான் ஒரு தீர்க்கதரிசி என்று வாதாடினால் அவர் ஒன்றோ மனிதர்களில் மிகவும் உண்மை பேசும் உத்தமராக இருக்க வேண்டும். ஏனெனில் அவர் ஒரு நபி, அந்த வகையில் (நபி) தீர்க்கதரிசி என்பவர் மனிதர்க ளில் மிகப்பெரும் உண்மைபேசும் உத்தமராகத் தான் இருப்பார்.

அல்லது குறிப்பிட்ட ஒரு நபர் மிகவும் உன்னதமான விடயங்க ளில் பொய்யான கருத்தை இட்டுக்கட்டி கூறுவதால் அவர் மனி தர்களில் மிகப்பெரும் பொய்யராக இருக்க வேண்டும்.

மிகவும் அறியாத மனிதர்களைத் தவிர வேறு எவரும் மனிதர்க ளில் மிகவும் உண்மை பேசுபவரை பொய் பேசுபவருடன் குழப் பிக் கொள்ளமாட்டார் .(89)

புத்தியுள்ள ஒருவருக்கு மனிதர்களில் மிகவும் உண்மை பேசுப வரையும் பொய்பேசுபவரையும் வேறுபடுத்திக் கண்டுகொள் வது எவ்வளவு எளிதான விடயம் !

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தூதராக அனுப்பப்பட்டு தமது பிரச்சாரத்தை முன்வைத்த முதல் நாளில் இணைவைப்பாளர்கள் நபியவர்களை ஒரு போதும் பொய் கூறாத உத்தமர் என்பதை ஏற்றுக் கொண்டனர். அவ்வேளை அவர்கள் நபியவர்களிடம் ‘உன்னிடமிருந்து எந்தப் பொய்யை

*யும் எமதனுபவத்தில் நாம் கண்டதில்லை' என்ற மிகப்பெரும் நற்சான்றை வழங்கினார்கள்.*(90)

*அபூஸுஃப்யான் அவர்கள் இஸ்லாத்தை ஏற்க முன் ஹிரக்லிஸ் மன்னன் தனது அவையில் நபியவர்கள் குறித்து அவரிடம் 'நீங்கள், அவர் இவ்வாறு வாதிப்பதற்கு முன் அவர் பொய் சொல்லக் கூடியவர் என சந்தேகிக்கக் கூடியவர்களாக இருந்தீர் களா? என வினவினார்.*

*அதற்கு அபூஸுஃப்யான் இல்லை என்று பதிலளித்தார்.*

*அதற்கு ஹிரக்லிஸ் மன்னன் : மனிதர்களிடம் பொய்பேசுவதை விட்டவர் அல்லாஹ்வின் மீது பொய் சொல்வதற்கு துணிய மாட்டார் என்று கூறினார்.*

*பின் ஹிரக்லிஸ் அவரின் விசாரணையை முடித்த பின்னர் பின் வரும் புகழ்பெற்ற வாசகத்தை கூறினார் 'நான் அவர் அருகில் இருந்திருந்தால் அவரின் பாதங்களை கழுவி விடுவேன்' .*(91)

*இறைநிராகரிப்பாளர்களால் நபியவர்களின் முழுவாழ்விலும் ஒரு பொய்யையேனும் எடுத்துக் காட்டுவதற்கு முடியவில்லை. இதனால்தான் நபியவர்கள் தூதராக அனுப்பப்பட முன் அவர் கள் பற்றி இறைமறுப்பாளர்கள் நன்கறிந்திருந்தும் நபியவர்கள் கொண்டு வந்த தூதை ஏற்காததை அல்குர்ஆன் கண்டித்துப் பேசுகிறது. இது பற்றி எங்களின் இரட்சகனான அல்லாஹ் பின் வருமாறு குறிப்பிடுகிறான்.* **"அல்லது தங்களிடம் வந்த தூதரை தாங்கள் அறியவில்லை என்பதாக(க் கூறி) அவர்கள் நிராகரிக் கின்றனரா?"** *(ஸூறதுல் முஃமினூன் வசனம் :69).*

*ஆகவே நபியவர்களின் நிலையும் அவர்களின் வாழ்க்கை வரலா றும் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதற்கான சுயாதீனமான- தனித் துவமான ஆதாரமாகும்.*

*அவரின் மீது அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக.*

*உண்மைக்கான சான்றுகள் உறுதியாக இருந்து நபி ஸல்லல்*

*லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தூதுத்துவத்திற்கான அற்புதங்கள் நிறைந்து காணப்படுகின்றபோது புத்தியுள்ள (பகுத்தறிவுள்ள) ஒருவர் இவை அனைத்தையும் எப்படித்தான் பொய்யெனக் குறிப்பிட முடியும்?*

**21. சில இந்துக்கள் செய்வது போல் தீர்க்கதரிசிகளை ஏற்காது அல்லாஹ்வை (இறைவனை) ஏற்று விசுவாசிப்பது மாத்திரம் போதுமா?**

*பதில் : இல்லை என்பதே அதற்கான பதிலாக அமையும்.*

*ஒரு மனிதர் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்ட முஸ்லிமாக ஆக தீர்க்கதரிசிகளை விசுவாசம் கொள்ளாது அல்லாஹ்வின் (இறைவனின்) இருப்பை ஏற்று நம்புவது மாத்திரம் போதாது. அதாவது அல்லாஹ்தான் படைப்பாளன் வாழ்வாதாரத்தை வழங்குபவன், திட்டமிடுபவன் என நம்பிக்கொண்டு அவனது இறைவெளிப்பாட்டையும் அவனின் தூதுவர்களையும் மறுப்பதன் அர்த்தம் என்ன?*

*இது மிகப் பெரும் இறைநிராகரிப்பாகும்.*

*மாறாக அல்லாஹ்வின் வஹ்யை (வேத வெளிப்பாட்டை) மறுப்பதை விட மிகப்பெரும் குற்றம் வேறு எதுவும் கிடையாது. இது குறித்து அல்லாஹ் கூறுகின்றான் :* **“நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதர்களுக்கும் மத்தியில் பாரபட்சம் காட்ட விரும்பி, தூதர்களில் சிலரை நம்பிக்கை கொள்வோம் மற்றும் சிலரை நிராகரிப்போம் என்று கூறி [நிராகரிப்பு நம்பிக்கை ஆகிய] இவற்றுக்கு மத்தியில் ஒரு பாதையை எடுத்துக் கொள்ள நாடுகிறாரோ அவர்கள் தாம் உண்மையான நிராகரிப்பாளர்களாவர். இந் நிராகரிப்பாளர்களுக்கு இழிவு தரும் வேதனையையே நாம் தயார் செய்து வைத்துள்ளோம்.** *(அத்தியாயம்: அந்நிஸா (பெண்கள்) : 150, 151)*

*எனவே யார் அல்லாஹ்வை நம்பி தீர்க்கதரிசிகளை நிராகரிக்கி றாரோ அவர்தான் உண்மையான நிராகரிப்பாளர் ஆவார்.*

*ஆக யாராவது ஒருவர் தீர்க்கதரிசிகளில் எவரையாவது ஒருவரை நிராகரித்தால் (ஏற்காதிருந்தால்) அல்லாஹ்வின் வேதவெளிப் பாட்டை மறுத்ததன் காரணத்தினால் அவர் அல்லாஹ்வை நிரா கரித்தவராகக் கருதப்படுவார். இதற்காகவே முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தை ஏற்காததின் காரணத்தால் வேதகாரர்களான யூதர்களும் கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தை ஏற்காத நிராகரிப் பாளர்களாக கருதப்படுகிறார்கள்.* **"வேதத்தையுடையவர்களிலும், இணைவைப்பாளர்களிலும் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள். இவர்கள்தாம் படைப்பினங்களில் மிகக் கெட்டவர்கள்".** *(ஸூறதுல் பையினா: 6) அவர்கள் நரகில் நுழைவார்கள் என்ற எச்சரிக்கை உறுதியானது.* **"எனவே அவர் களுக்கான எச்சரிக்கை உறுதியாகிவிட்டது".** *(ஸூறது காப் 14)*

*ஒரு மனிதன் அல்லாஹ்வை படைப்பாளன் வாழ்வாதாரத்தை அளிப்பவன் உயிர்ப்பிப்பவன் மரணிக்கச் செய்பவன் என்று வெறுமனே ஏற்றுக் கொள்வதனை இஸ்லாமாகவோ அவனுக் கான விமோசனமாகவோ கருதப்படமாட்டாது . மாறாக அவன் தூதர்களை ஏற்று விசுவாசித்திருப்பது மிக அவசியமான ஒன்றா கும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் போதே அவன் முஸ்லிமாக மாறி மறுமை விமோசனமும் கிடைக்கப் பெறுகிறது.*

*அப்படியானால் அல்லாஹ்வின் இருப்பை மாத்திரம் ஏற்று தீர்க் கதரிசிகளை நிராகரிப்பது முஸ்லிமாக மாறுவதற்கு எந்த வகை யிலும் போதாத விடயமாகும். அது மறுமையில் அவருக்கு அல்லாஹ்விடத்தில் எவ்விதப் பயனையும் பெற்றுத் தராது. ஆகையால் அல்லாஹ்வை வணங்குவதுடன் அனைத்து தூதர் களையும் விசுவாசிக்கவும் வேண்டும்.*

*அவ்வாறு இறையிருப்பை மாத்திரம் நம்புதல் போதுமானது என்றிருந்தால் அல்லாஹ் தூதுவர்களை அனுப்பவோ, வேதங்*

களை இறக்கவோ எந்த தேவையும் இருந்திருக்காது. ஏனெனில் மனிதர்கள் அனைவரும் இயல்பூக்கத்தின் மூலம் அல்லாஹ்வை அறிந்திருப்பதே இதற்கான காரணமாகும்.

எனவே உன்னைப் படைத்து உனக்கு நேரான பாதையைக் காட்டி உனக்கான வாழ்வாதாரங்களை ஒழுங்குபடுத்தித் தந்த அல்லாஹ் மாத்திரமே, அவனின் தூதர்கள் மற்றும் தீர்க்கதரிசி களின் வாயிலாக அவன் விதித்த நெறிமுறைகளுக்கிணங்க வணங்கி வழிபட தகுதியானவன்.

ஆக. இறுதியாக வந்த தீர்க்கதரிசியான முஹம்மத் இப்னு அப் தில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஏனைய அனைத்து நபிமார்களையும் (தீர்க்கதரிசிகள்) ஏற்று விசு வாசிப்பது அவசியமாகும்.

## 22. அல்லாஹ் ஏன் தீமையைப் படைத்தான்? அல்லது இன் னொரு வகையில் கூறின் ஒரு முஸ்லிம் தீமையெனும் சிக்கலுக்கு எவ்வாறு பதில் கூறப்போகிறார்?

இந்து மதத்தில் தீமையெனும் பிரச்சினை மிகப் பெரிய ஒரு பிரச்சினையாகும். இந்து மதத்தத்துவமானது மனிதன் தனது தீமையிலிருந்து விடுபடுவதற்கு மனித சஞ்சாரமற்ற இடங்களில் வாழ்வதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் இந்து மதம் ஒரு மனிதன் தனது முன்னைய ஜென்மத்தில் செய்த தீவி னையின் காரணமாக அவன் பல முறை பிறக்கிறான் எனக் கருது கிறது.

இவை அனைத்தும் தவறான கருத்தாகும். நாம் பொறுப்புச் சாட்டப்பட்டவர்கள் என்ற வகையில் இவ்வுலகில் தீமையென் பது சாதாரணமாக உள்ள ஒரு விடயமாகும்.

மற்றையது நாம் சோதனைக்கான ஒரு உலகில் இருக்கிறோம் என்ற வகையில் தீமையென்பது இவ்வுலகில் காணப்படும் ஒரு அம்சம்.

எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகி றான். **“பரீட்சிப்பதற்காக தீமையின் மூலமும் நன்மையின் மூலமும் உங்களை நாம் சோதிப்போம்”.** (ஸூறதுல் அன்பியா வசனம் :35)

பொறுப்புக்களால் பணிக்கப்பட்டவன் என்ற வகையில் நன்மை தீமை என்பது இருக்கும். மேலும் பொறுப்புச் சாட்டப்படுவது உனது இருப்பின் இலக்காகும். அல்லாஹ் கூறுகிறான்

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் **“உங்களில் அழகிய செய லுடையவர் யார் என்பதை சோதிப்பதற்காக அவனே மரணத்தை யும், வாழ்வையும் படைத்தான். அவன் யாவற்றையும் மிகைத்தவன் மிக்க மன்னிப்பாளன்”.** (ஸூறதுல் முல்க் 2)

நாம் பொறுப்புச் சுமத்தப்பட்டோராக இருக்கும் காரணத்தி னால் குழப்பமும் சோதனையும் இயல்பாக காணப்படும். அதன் படி தீமையும் இயல்பான ஒன்று என்பதனை நாம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஆக தீமையும் வாழ்க்கையில் சில துன்பங்களும் பாவத்தைப் புரி வதற்கான இயலுமையும் இறை ஆணையினதும் மனித விருப் பின் சுதந்திரத்திற்குமான இயற்கையின் தேவையாகவும் தெளி வான முடிவாகவும் உள்ளது.

தீமை, துன்பம், பேரிடர்கள் மற்றும் மன இச்சைகள் ஆகியவை இருப்பதானது ஒரு நல்ல மனிதனின் சிறந்ததையும், கெட்ட மனிதனின் மிக மோசமானதையும் வெளிப்படுத்துகிறது

தீமையின் மத்தியில் நாம் வாழ்வதிலும் எண்ணிலடங்கா சிறப்பு உள்ளது.

அதன் அருள்களும் எண்ணிலடங்காதவை.

அதாவது நாம் வாழும் பெரும் நன்மையினுடன் ஒப்பிடும் போது தீமையானது மிக அற்பமானது, எளியது.

தீமையென்று ஒன்று இவ்வுலகில் இல்லாதிருந்தால் நீர் பிறந்த இடத்திலிருந்து வெளிவந்திருக்க மாட்டீர்.

எந்த நாகரீகமும் தோன்றியிருக்காது, நகரங்களும் தொழிற் சாலைகளும் வீடுகளும் நிர்மானிக்கப்பட்டிருக்காது. மனிதர்கள் எந்தத் தொழில் செய்யவும் தேவைப்பட்டிருக்காது மேலும் மனிதர்கள் நோயை எதிர்க்கவோ, பிரச்சினைக்கு தீர்வு தேடவோ நிம்மதியைப் பெற்றுத்தரும் புத்தாக்க கருத்துக்கள் குறித்தோ சிந்தித்திருக்க மாட்டார்கள்.

மேலும் மனிதன் தான் பிறந்த இடத்திலிருந்து வேறு இடத் திற்கு செல்வதற்கான தேவையும் ஒருபோதும் இருந்திருக்காது.

ஏனெனில் நீர் தீர்வுகளைத் தேடுமளவிற்கு அங்கு எவ்விதத் தீமையோ, கஷ்டமோ, சோதனையோ, சோர்வோ இருக்க மாட் டாது.

ஆகவே களைப்புறுவதும் உறங்காது விழித்திருப்பதும் சிந் தனை செய்வதும் உழைப்பதும் எதற்காக?

எனவே தீமையென்பது உலக வாழ்வில் இன்றிமையாத ஒரு விடயமாகும்.

எனவே இது குறித்து சிந்திப்பீராக!

அதிகமான மனிதர்களுக்கு சோதனையும் தீங்கும் ஏற்படுகிறது. உடனே அவர்கள் இறைவனை நோக்கி செல்கிறார்கள். அத னால் அவர்கள் உத்தமர்களாக மாறி விடுகிறார்கள். மகத்தான அல்லாஹ்வை புகழ்வதின் மூலம் துதிசெய்கிறேன்.

இறைவிதிகள் அனைத்திலும் ஆழ்ந்த நுட்பமும் நன்மைகளும் நிறைந்து காணப்படுகிறது. வெளிப்படையில் அவற்றில் சிலதில் தீங்கும் நெருக்கடியும் தொந்தரவும் இருப்பதாக தென்பட்டா லும் இறுதியில் மிகப் பெரும் பாக்கியமும் ஆழமான இறை நுட்பமும் அதிலே சூழ்ந்திருக்கும்.

நீ பணிக்கப்பட்டவன் (அடிமை) என்பதால் தீமை உள்ளதே தவிர உனது முன்னைய ஜென்மத்தில் தீமைகளை செய்தாய் என்பதற்கல்ல என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

**23- அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலின் வெளிப்பாடுகள் எவை? இன்னொரு வகையில் கூறினால் நீ அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்ட முஸ்லிம் என்பதை அறிந்து கொள்வது எப்படி?**

*அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் நான்காகும். அவைகள் பின்வருமாறு :*

*முதாலாவது : உனது வாழ்வின் சிறிய பெரிய காரியங்கள் அனைத்திலும் அல்லாஹ்வுக்கு அடிமைப்பட்டிருப்பது (கட்டுப்படுவது). அல்லாஹ் கூறுகின்றான் :* **“எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள், எனது வாழ்வு, எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது என நபியே நீர் கூறுவீராக. அவனுக்கு எவ்வித இணையுமில்லை. இதனைக் கொண்டே நாம் ஏவப்பட்டுள்ளேன். நான் கட்டுப்பட்டோரில் முதன்மையானவன் ஆவேன்”.** *(ஸூறதுல் அன்ஆம் 162, 163)*

*‘ஸலாதீ வநுஸுகீ வமஹ்யாய வமமாதீ லில்லாஹி ரப்பில் ஆலமீன்’ (எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள், எனது வாழ்வு, எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது) அல்லாஹ்வுக்கே நான் அனைத்தையும் செய்கிறேன். இந்த வசனமானது அனைத்து செயற்பாடுகளிலும் அல்லாஹ்விற்கே அடிபணிதல் என்ற அம்சத்தை உள்ளடக்கியுள்ளது. இதுவே அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல் என்பதன் முதல் வெளிப்பாடாகவும் அடையாளமாகவும் உள்ளது.*

*அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டிருப்பதற்கான இரண்டாவது அடையாளம்: அல்லாஹ் ஏவியவற்றை பின்பற்றுவதும் தடைசெய்தவற்றை விட்டும் விலகியிருப்பதும் ஆகும். இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.* **“நம்பிக்கை கொண்டோரே நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனின் தூதருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் போதனையை செவியேற்றுக் கொண்டே அவரைப் புறக்கணிக்க வேண்டாம்”.** *(ஸூறதுல் அன்பால் 20)*

*மேலும் அல்லாஹ் கூறுகிறான்:* **"நம்பிக்கை கொண்டோரே நீங்கள் இஸ்லாத்தினுள் முழுமையாக நுழைந்து விடுங்கள்".**
*(ஸூறதுல் பகரா வசனம் : 208)*

*பிஸ்ஸில்மி என்பது அறபு மொழியில் இஸ்லாத்தில் என்ற கருத்தைக் குறிக்கும்.*

*(உத்குலூ பிஸ்ஸில்மி காப்பதன்) இஸ்லாத்தினுள் முழுமையாக நுழைந்து விடுங்கள் என்பது அல்லாஹ் கட்டளையிட்ட அனைத்தையும் மிக உறுதியோடு பின்பற்றுங்கள் அவன் தடுத்தவற்றை தவிர்ந்து கொள்ளுங்கள் என்ற கருத்தைக் குறிக்கிறது.*

*அல்குர்ஆனில் அல்லாஹ் எனக்குச் செய்யுமாறு கட்டளையிட்ட ஒருவிடயத்தை அல்லது அவனின் (தீர்க்கதரிசி) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வழிமுறையில் ஒன்றை செய்யுமாறு கட்டளையிட்டால் அதனை நான் செய்வேன். அவன் என்னை விலகி இருக்குமாறு தடுத்தவைகளை நான் செய்யாது தடுத்துக்கொள்வேன். இதுவே அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு கீழ்படிவதாகும்.*

*அல்லாஹ்வுக்கு கட்டுபடுதலின் மூன்றாம் அடையாளம் : அல்லாஹ் கடமையாக்கிய சட்டதிட்டங்களை தீர்ப்பளிப்பதற்கான அளவுகோளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே அவனின் சட்டதிட்டங்களை மனத்திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறோம்.*

*அல்குர்ஆனிலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையிலும் வந்த அனைத்தையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். காரணம் அல்லாஹ்தான் தனது படைப்பினங்களை சீர்செய்யக்கூடியவற்றை நன்கறிந்துள்ளான்.* **"படைத்தவன் அறியமாட்டானா? அவன் நுட்பமானவன் நன்கறிந்தவன்"** *(ஸூறதுல் முல்க் - 14) மேலும் அல்லாஹ் கூறுகிறான் :* **"அல்லாஹ்வை விட அழகிய முறையில் தீர்ப்புக்கூறுபவன் யார் இருக்கிறான்".**
*(ஸூறா அல் மாஇதா 50)*

எனவே அல்லாஹ்தான் இவ்வுலகிலும் மறு உலகிலும் மனி தனை சீர்படுத்தும் விடயங்களை அறிவான்.

அல்லாஹ்வின் சட்டத்தை அமுல்படுத்துவதானது மனிதர்களை தூய்மைப்படுத்தி அவர்களை பாதுகாப்பாக வாழ வைக்கிறது

மகத்துவமிக்க அல்லாஹ் கூறுகிறான் **"அல்லாஹ்வின் உத்தரவுப் படி மக்கள் கட்டுப்பட வேண்டும் என்பதற்காகவே தவிர எந்தத் தூத ரையும் நாம் அனுப்பவில்லை".** (ஸூறதுன் நிஸா - 64)

நபிமார்கள் கொண்டு வந்த சட்டதிட்டங்களை கைவிட்டு மற்ற வர்களிடம் தீர்ப்புக் கோருவதற்காக அல்லாஹ் தூதர்களை அனுப்பவில்லை.

அல்லாஹ் கூறுகிறான் **"உமதிரட்சகன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக நியமித்து நீர் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலுமாக ஏற்காதவரை அவர்கள் [உண்மை] நம்பிக்கையாளர் களாக ஆகமாட்டார்கள்".** (ஸூறதுன் நிஸா - 65) அல்லாஹ் வகுத்த சட்ட திட்டங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவது அவசியமாகும். எனவே அல்லாஹ்வின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுவது இஸ்லாத்திற்கு கீழ்பணிந்து நடப்பதற்கான அடையாளமாகும்!.

நான்காவது அடையாளம் : அல்லாஹ்வின் விதிகளுக்கு கட்டுப் படுவதாகும். அல்லாஹ் அவனின் நுட்பத்தின் மூலம் விதித் தவை அனைத்து விடயங்களுக்கும் கட்டுப்படுவதாகும். அத்து டன் முஸ்லிம் என்பவர் நன்மையான காரியங்களிலும் தீய காரி யங்களிலும் இறை விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும்

முஸ்லிமுக்கு ஒரு மகிழ்ச்சியான விடயமொன்று ஏற்பட்டால் அவன் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவான். தீங்கு ஏற் பட்டால் அதற்காக பொறுமை காப்பான்.

எனவே எல்லா சோதனைகளும் ஏதோ ஒரு நுட்பத்தினையும் பொறுப்புச் சாட்டலையும் சார்ந்துள்ளது.

அனைத்து விடயங்களும் இறைவிதியின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது: அதாவது ஆரோக்கியம், நோய், செல்வம், வறுமை போன்றன அனைத்தும் அவனின் ஞானம் மற்றும் விதி ஆகியவற்றின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ளன. அல் லாஹ் விதிகளை விதித்தவன் என்ற வகையில் ஒரு முஸ்லிம் விதி களை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகி றான். **"நிச்சயமாக நாம் எல்லாவற்றையும் குறிப்பிட்ட விதிமுறை யின் படியே படைத்துள்ளோம்".** *(ஸூறதுல் கமர் - 49)* மேலும் அல்லாஹ் கூறுகிறான் : **"அல்லாஹ் எமக்கு விதித்ததை தவிர வேறு எதுவும் எம்மைப் பீடிக்காது".** *(ஸூறதுத் தவ்பா - 51)*

அல்லாஹ் எதனை எம்மீது விதித்துள்ளானோ அதுவே நிச்சயம் நடைபெறும்.

மேலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் **"அல்லாஹ்வின் உத்தரவுப் பிரகாரம் நேரம் குறிக்கப்பட்ட விதியின் படியேயன்றி எந்தவோர் ஆன்மாவுக்கும் மரணிக்க முடியாது".** *(ஸூறது ஆல இம்ரான் 145)*

ஆயுள்களை அல்லாஹ்வே நிர்ணயித்துள்ளான்.

பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்தும், உலகில் அசையும் ஒவ் வொரு அணுவும், நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் அல்லாஹ்வின் அறிவு, நாட்டம், விதி, ஞானம் மற்றும் அவனின் வல்லமையி னால் இடம்பெறுகிறது.

எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகி றான் . **"அவனே அனைத்தையும் படைத்து அதனை முறைப்படி நிர்ணயித்தான்"** *(ஸூறதுல் புர்கான் - 2)*

அல்லாஹ் தூய்மையானவன் அனைத்தையும் படைத்து அதனை முறைப்படி நிர்ணயித்துள்ளான். எனவே அவன் நாடி யது நடக்கும், நாடாதது நடை பெறமாட்டாது.

எனவே நான் முஸ்லிம் என்பதனால் அல்லாஹ்வின் விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு வேண்டப்பட்டுள்ளேன்.

*இதன் மூலம் ஒரு மனிதன் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவனாக மாறிவிடுகிறான்.*

**இறுதியாக! நான் இஸ்லாத்தில் நுழைவது எப்படி?**

*இஸ்லாம் மனிதர்கள் அனைவரினதும் மார்க்கமாகும். இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்* **"அல்லாஹ் விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும்".** *(ஸூறது ஆல இம்ரான் - 19) இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் :* **"யார் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எடுத்து நடக்க விரும்புகிறாரோ அது அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது அவன் மறுமையில் நஷ்டவாளர்களுள் உள்ளவராவார்".** *(ஸூறது ஆல இம்ரான் - 85)*

*இதன் காரணமாக ஒவ்வொரு இந்துவும் இந்து மதத்தைச் சாராதோரும் இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்வது கடமையாகும்.*

*இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்வதில் நரகத்திலிருந்து பாதுகாப்பும் அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் சுவர்க்கமும் கிடைக்கும்.*

*இஸ்லாத்தை ஏற்று வாழ்வதுதான் மிகப்பெரும் அருளாகும். மாறாக உனது இருப்பிற்கான மிக முக்கிய, மகத்தான விடயமும் இதுவேயாகும்.*

*யதார்தத்தில் இஸ்லாம் என்பது இயல்பூக்கம், பகுத்தறிவு, வேதங்கள் ஆகியவற்றை நோக்கிய மீள்வருகையாகும்.*

*இஸ்லாத்தில் நுழைவது என்பது மிக இலகுவான காரியமாகும். அதற்கென்று சடங்குகளோ, முறையான கொண்டாட்டங்களோ கிடையாது. அவ்வாறாயின் எப்படி இஸ்லாத்தில் நுழைவது? சாட்சி கூறும் இரண்டு வார்த்தைகளை நாவால் மொழிந்து விடுவதுதான். அந்த வார்த்தை இதோ! அல்லாஹ்வைத்தவிர உண்மையாக வணங்கத்தகுதியானவன் வேறு யாருமில்லை என*

சாட்சி கூறுகிறேன். முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் எனவும் சாட்சி கூறுகிறேன்.

இவ்வாறு ஒருவர் கூறிவிடுவதால் அவர் முஸ்லிமாக மாறிவிடுகிறார்.

பின்னர் அவர் இஸ்லாமிய கடமைகளை செயற்பாடுகளை செய்யத் துவங்கி விடுவார்.

இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொண்ட புதிய முஸ்லிம், இஸ்லாத்தை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது குறித்து தெரிந்து கொள்ள தங்களது மொழியில் இஸ்லாம் பற்றிய விளக்கத்தை கொண்டுள்ள இஸ்லாம் ஹவுஸ் வெப்தளத்தை பார்வையிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

வெப்தள இணைப்பு : **https://islamhouse.com/ar/**

இஸ்லாத்தின் அடிப்படை சிறப்பம்சம் என்னவென்றால்: இது அல்லாஹ்விற்கு முழுமையாக கட்டுப்பட்டு அவனை மட்டுமே வணங்குதவதும். தற்போதைய இந்து மதத்தில் காணப்படுவது போல் இறைவனுக்கு எந்த வகையிலேனும் சிலை மற்றும் விக்கிரகங்கள் வடித்து உருவம் கற்பித்தலை மறுப்பதும் ஆகும்.

இந்த புத்தகம் ஒரு மனிதன் எவ்வாறு இறைவனுக்கு கட்டுப்பட்ட முஸ்லிமாக மாறுவது பற்றிய விளக்கத்தை தருவதுடன், இஸ்லாத்தின் பொருள் மற்றும் இஸ்லாத்தின் அவசியம் குறித்த தெளிவுபடுத்தல்களுடன் நிறைவடைகிறது.